

பக்கம் 07

தாக்குதல் நடத்துவதற்கு தயாராகின்றது ஜப்பான்



பக்கம் 22

வடக்கு விவசாய அமைச்சு நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி



பக்கம் 23

உலக சாதனை பற்றி நினைக்க வேயில்லை


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

■சுடர்: 29 ■கதிர்: 038 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 19, வெள்ளி 03.01.2014

பக்கம் : 24

வன்னி : ரூபா.20

யாழ். : ரூபா.20

கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C

# மாகாண சபைச் சிக்கல் மஹிந்த - விக்கி பேச்சு

## நேற்று அலரி மாளிகையில் திடீர் சந்திப்பு


கொழும்பு, ஜனவரி 3

வடக்கு மாகாண சபை எதிர் கொள்ளும் சிக்கல்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்றுத் திடீர் சந்திப்பு ஒன்று அலரிமாளிகையில் இடம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முக்கிய பதவிகளுக்கு அதிகாரிகள் நியமனம், மாகாண சபைக்குத் தேவையான நிதி வளத்துக்கான ஏற்பாடு, அரசமைப்பில் மாகாண சபைக்கு பகிரப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்துவதைத் தூண்டுதல் மற்றும் அதனையும் தாண்டிய அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குதல் ஆகியன உட்பட முக்கிய பல விடயங்களை வடக்கு முதலமைச்சர் ஜனாதிபதியிடம் இதன்போது முன்வைத்தார்.

அத்துடன் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாகாண சபையின் இயக்கத்தைச் சுமுகமாக நடத்துவதைத் தூண்டுவது குறித்தும் இந்தப் பேச்சின் போது முக்கிய கவனம் செலுத்

21 ஆம் பக்கம் பார்க்க



## தாதியர்கள் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.போதனா வைத்திய சாலை உட்பட வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் தாதிய உத்தியோகத்தர்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரச தாதிய உத்தியோகத்தர் சங்க வட மாகாண இணைப்பாளர் பி.சிவயோகம் தெரிவித்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன.. 3

கிளிநொச்சி கொக்காவில் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்து கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து வேறு வைத்தியசாலைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

புது வருடதினத்தன்று மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராணுவச் சிப்பாய்கள் இரண்டு குழுக்களாக இரவு காட்டுக்கு வேட்டையாடச் சென்றனர் எனவும் இதன் போது சுடப்பட்டே அவர் காயமடைந்தார் எனவும் கூறப்படுகின்றபோதும் பயிற்சியின் போதே அவர் தவறுதலாகக் குண்டு பட்டுக் காயமடைந்தார் என இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட அந்தச் சிப்பாய் பின்னர் வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த-4)

## நவிப்பிள்ளையின் தூதுக்குழு இலங்கைக்கு வரும் சாத்தியம்

கொழும்பு, ஜன. 3

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் ஆலோசனைக்குழு ஒன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் சாத்தியம் இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரமளவில் இந்தக் குழு கொழும்புவரும் எனத் தெரிய வருகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை பயணத்துக்குப் பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து மார்ச் தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கிலேயே இந்தக் குழுவின் பயணம் அமையவுள்ளது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே தமது உயர்மட்ட ஆலோசனைக் குழுவை ஐ.நா. ஆணையர் நவநீதம்பிள்ளை கொழும்புக்கு அனுப்புகிறார் எனக் கூறப்பட்டாலும் இதை அவர் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

21 ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ். கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சந்திர

21 ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு.ஜன. 3

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சில அபிவிருத்தித் திட்டங்கள் இந்த வருடத்தில் நிறைவு செய்யப்படும் எனக் கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமான அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தை நிறைவு செய்ய 2015 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை கால அவகாசம் தேவை எனத் திட்டத்தை முன்னெடுத்து வரும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ மோ. சைக்கிள் யாழ். நகரில் பறிபோனது

### படையினரும் பொலிஸாரும் தீவிர தேடுதல்

*யாழ்ப்பாணம்,ஜன.3*

*யாழ். நகரப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றுத் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதனையடுத்துப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து யாழ்.நகரிலும் நகரை அண்மித்த பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.*

*நேற்றுப் பிற்பகல் வேளை இந்த மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதோரால் திருடிச்செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் இராணுவத்தினர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதன் பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நகரில் பெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். யாழ். நகரில் பல இடங்களிலும் மோட்டார் சைக்கிள்கள் மறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டன. (த-4-17)*

## காணாமற்போனோரின் உறவினர்கள் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜன.3

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தாம் நடத்திய கவவீர்ப்புப் போராட்டத்தின் போது பொலிஸார் பக்கச் சார்பாக நடந்துகொண்டதாக காணாமல் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவினர் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் நேற்று முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளனர்.

சர்வதேச மனிதஉரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதி திருகோணமலையில் காணாமல் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது சிங்கள மொழியில் பேசிய குழுவொன்று தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் காணாமற்போனோரைத் தேடி கண்டறியும் குழுவின் தலைவரான சுந்தரம் மகேந்திரன் உட்பட சிலர் காயமடைந்து

21 ஆம் பக்கம் பார்க்க

## அகதிகள் விடயத்தில் ஹிட்லர் போன்று ஆஸி.

கொழும்பு. ஜன. 3

சர்வாதிகாரி ஹிட்லரைப் போன்று இலங்கை தமிழ் அகதிகளை ஆஸ்திரேலிய அரசு நடத்துகின்றது என்று முன்

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய இராணுவத் துணைத் தளபதியாக புலிகளுடன் போரிட்ட அதிகாரி நியமனம்

கொழும்பு, ஜன.3

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நேரடியாகப் பங்கேற்ற லெப். ஜெனரல் தல்பீர் சிங் சுகக், இந்திய இராணுவத்தின் புதிய துணைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

கூர்க்கா படைப்பிரிவைச் சேர்ந்த இவர், 1987 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இந்திய அமைதிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பவான் இராணுவ நடவடிக்கையில் பங்கேற்றிருந்தார்.



21 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியர் பயணித்த ஹைஏஸ் மோதியே தாயும் சிசுவும் சாவு

### சாரதி பொலிஸில் சரண்

யாழ்ப்பாணம், ஜன. 3

புது வருடக் கொண்டாட்டங்களுக்காக மதவாச்சி நோக்கி இந்தியர்கள் பயணித்துக் கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் மோதியே ஆனையிறவுப் பகுதியில் தாயும் சேயும் உயிரிழந்தனர். அவர்களை மோதிய ஹைஏஸ் வாகனத்தின் சாரதி நேற்றுமுன்தினம் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

புதுவருட பிறப்பான நேற்று முன்தினம் அதிகாலை தேவாலயத்துக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைப் படகுகளில் தொழில் செய்த மீனவர்கள் நேற்று மடக்கிப் பிடிப்பு


## தொண்டமானாறுக் கடல் பகுதியில்

வடமராட்சி,ஜன.3

தொண்டமானாறு பெரிய கடலில் சட்ட விரோதமாக இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்களை அந்தப் பகுதியைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று சுற்றி வளைத்துப் பிடித்தனர்.

எனினும் இதில் ஒரு இழுவைப் படகு தப்பிச் சென்றுவிட்டது.

ஏனைய இரு இழுவைப் படகுகளையும் கைப்பற்றிய மீனவர்கள் அதில் இருந்த 6 மீனவர்களையும் பிடித்துக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.



பல வருடங்களாக இப் பகுதியில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும், பிடிக்கப்பட்ட 6 பேரும் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்கள் என்றும் மீனவர்கள் மேலும் கூறினர்.

கைப்பற்றப்பட்ட இழுவைப் படகுகளில் கற்கள், கத்தி என்பனவும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிடிக்கப்பட்ட 6 பேரையும், இழுவைப் படகுகளையும் அவற்றில் இருந்த 3 லட்சம் ரூபா பெறுமதியான தடை செய்யப்பட்ட வலைகளையும் பொலிஸாரின் உதவியுடன் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கே. கஜநிதி பாலன் முன்னிலையில் நேற்று முற்படுத்தினர்.

ஆரம்ப விசாரணைகளின் பின்னர் 6 பேரையும் தலா 50 ஆயிரம்ரூபா பெறுமதியான ஒவ்வொரு ஆள்பிணையில் செல்ல மன்று அனுமதி வழங்கியது.

இழுவைப் படகுகளை தலா 10 இலட்சம் ரூபா ரொக்கப் பிணையில் எடுத்துச் செல்ல முடியும் என்று உத்தரவிட்ட நீதிமன்றம், அவற்றின் உரிமை, ஆவணங்கள் உறுதிப் படுத்தப்படல் வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.

இழுவைப் படகுகளில் இருந்து சுமார் 15 கிலோவுக்கு மேற்பட்ட மீன்கள் மீட்கப்பட்டன. அவற்றை விற்று பணத்தை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

சட்ட விரோதமாக இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை, பதிவு செய்யப்படாத படகுகளைப் பயன்படுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் 6 பேர் மீதும் சுமத்தப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (த-4-12-173)

# அமெரிக்கத் தூதரகத்தின் ஊடக பட்டறை ஆரம்பம்

கொழும்பு,ஜன.3


சமூக ஊடகம் தொடர்பாக மேம்பட்ட புரிந்துணர்வை ஊக்கு விக்கும் வகையில் வடிவமைக் கப்பட்ட சமூக ஊடகப் பட்டறை எனும் புதிய நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் ஆரம்பித்துள்ளது.

சமூக ஊடக பட்டறை கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தில் நடைபெறவுள்ளது. இங்கு ஆரம்ப நிலை, இடைநிலை மற்றும் உயர்நிலை சமூக ஊடக பயிற்சி நெறிகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இதில் பங்கேற்பதற்காக ஜனவரி 2 ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த சில வருட காலப்பகுதியில் நாம் குறிப்பிடத்தக்களவு சமூக ஊடக பயிற்சிகளை நடத்தியுள்ளோம். மக்களுக்கு சமூக ஊடகத்தின் சிறப்பம்சங்களை கற்றுத் தருவதற்காக இந்த பயிற்சிகளை நெறிப்படுத்த விரும்புகின்றோம் " என அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளர் கிறிஸ் டோபர் ரீல் தெரிவித்தார். இலங்கையர்கள் மத்தியில் சமூக ஊடகம் தொடர்பாக மேம்பட்ட புரிந்துணர்வை ஏற் படுத்துவதுடன் இணையத்தில் மிகவும் சிறப்பான முறையில் மக்கள் செயற்பட ஊக்குவிப்பதே சமூக ஊடக பட்டறையின் மூலம் நாம் அடைய எத்தனிக்கும் பிரதான நோக்கமாகும்.

இந்த சமூக ஊடக பயிற்சி நெறிக்காக எதிர்வரும் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமெரிக்க தூதரக இணையத்தளத்தினூடாக http://goo.gl/1Es2sW விண்ணப்பிக்க முடியும். இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பங்கள் முதலில் கிடைக்கும் ஒழுங்கில் பரிசீலனைக் குட்படுத்தப்படுவதுடன் ஜனவரி மாத நடுப்பகுதியில் விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் பயிற்சிகள் தொடர்பான திகதி மற்றும் நேரங்கள் அறியத்தரப்படும் மேலதிக தகவல்களை http:// srilanka. usembasy.gov/sm_lab .html இல் பெறலாம். (ஓ)

# நாளை மின் தடை



யாழ்ப்பாணம்.ஜன.3

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்துவதற்காகவும் புதிய மின்மாற்றியை நிறுவுவதற்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை காரைநகர் களபூமி, கடற்படைத்தளம், ஊரி, ஊர்காவற்றுறை, தீவகம் முழுவதும் , மானிப்பாயின் ஒரு பகுதி, சங்கரப்பிள்ளை வீதி, மேதர் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# பிரதமருக்கு எதிராக ஹெல உறுமய மனு

கொழும்பு,ஜன 03

பிரதமர் தி.மு. ஜயரட்ணவுக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரரை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் பிரதமரிடமிருந்து ஒரு பில்லியன் ரூபா நட்டஈடுகோரியே வழக்குத் தாக்கல் செய்யபோவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஓமல்பே சோபித தேரரின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் கடந்த பல நாள்களாகப் பிரதமர் செயற்பட்டுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# புத்தாண்டு விருந்தை உண்ட 300 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு,ஜன 03

புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி வழங்கப்பட்ட விருந்து விஷமாகியதில் 300க்கும் மேற்பட்டவர்கள் திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைகளில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஹோமாகம, பாதுக்க, ஹொரண மற்றும் கிரியெல்ல போன்ற பிரதேசங்களிலுள்ள கிளைத் தொழிற்சாலைகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவே இவ்வாறு பழுதடைந்துள்ளது. இதனை உண்டவர்களில்300க்கும்மேற்பட்டோர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஊழியர்களுக்கு சோறுடன் கோழிஇறைச்சிக் கறி, பருப்பு மற் றும் சலாட் போன்றவைகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.(த)

# தற்காலிகமாக மூடிய நிலையில் மாடிக்குச் செல்லும் பாதைகள்

## வவுனியா பஸ் நிலைய வளாகத்தில்

வவுனியா.ஜன.3

வவுனியா மத்திய பஸ் நிலைய வளாகத்தின் மாடிப் பகுதிக்குச் செல்லும் இரண்டு பிரதான பாதைகளும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வவுனியா மத்திய பஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள தொடர்மாடிக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியா நகர சபையினர் இந்தப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். மத்திய பஸ் நிலைய வளாகத்தில் இருந்து தொடர்மாடிக் கட்டடத்தினுள் நுழையும் பகுதி வண்டிகளைக் கையால் உருட்டிச் செல்கின்ற வகையில் சாய்வாக அமைக்கப்படுவதுடன் கழிவு நீர் கால்வாய்களும் சீர் செய்யப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் தொடர்மாடிக்குச் செல்லும் பாதைகளும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. எனவே தொடர்மாடிக்குச் செல்கின்ற வர்கள் கண்டி வீதிப் பக்கமாக அமைந்துள்ள பாதையாலும் வவுனியா புகையிரத நிலைய வீதிப் பக்கமாக உள்ள பாதை வழியாகவும் செல்ல முடியும்.

பூச்சு வேலைகள் நிலப்பகுதியில் இடம்பெறுவதால் தற்காலிகமாக மேற்குறிப்பிட்ட வாயிற் பகுதிகள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(க-421)

# வாழ்க்கைச் செலவுப் படி சுற்றறிக்கை கிடைத்தது

யாழ்ப்பாணம். ஜன. 3

2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்ளளதிட்ட முன்மொழிவுகளில் பிரகடனப்படுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிக் கொடுப்பனவு தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 6 ஆயிரத்து 600 ரூபாவுடன் வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் பிரகடனப்படுத்தப்பட்ட ஆயிரத்து 200 ரூபாவும் சேர்ந்து 7 ஆயிரத்து 800 ரூபாவும் அமைய மற்றும் நாளாந்தக் கூலி அடிப்படையில் சேவையாற்றும் தொழிலாளர்களுக்கு நாளாந்த வாழ்க்கை செலவுப் படியாக 260 ரூபாவும் வழங்கப்படல் வேண்டும்.

ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படியானது 2005.12.31 ஆம் திகதி வரை ஓய்வு பெற்றவருக்கு 500 ரூபா அதிகரிப்புடன் மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியாக 3 ஆயிரத்து 675 ரூபாவும் 2006 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 350 ரூபா அதிகரிப்புடன் 3 ஆயிரத்து 525 ரூபாவும் வழங்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த - 9)

# சொந்த வலயங்களுக்குத் திரும்பியவர்களின் வெற்றிடங்களுக்கு விரைவில் நியமனங்கள்

## வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.3

வடக்கு மாகாணத்தில் சேவைக் காலத்தை நிறைவு செய்து சொந்த வலயங்களுக்குத் திரும்பிய ஆசிரியர்களின் வெற்றிடத்துக்கும், ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கும் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்தவர்களும், தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறியவர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதன் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து பல ஆசிரியர்கள் நிபந்தனை அடிப்படையில் வன்னிப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

நிபந்தனையின் படி 5 வருடங்கள் ஒரு வலயத்தில் பணியாற்றியவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியும். அதன்படி இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

எனினும், வன்னி வலயத்திலிருந்து சேவைக்காலத்தை நிறைவு செய்து வெளியேறியோருக்குப் பதிலீடாக யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்களை அங்கு அனுப்புவதற்குப் பற்றாக்குறை நிலவுகிறது. தீவக வலயத்துக்கும் பதிலீட்டு ஆசிரியர்களை நியமிப்பதில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

எனவே, தான் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கையை நிறைவு செய்து வெளியேறுவோரையும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறு வோரையும் அங்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் அளவில் இரண்டு தரப்பினரும் வெளி யேறியதும் இரண்டாம் தவணையில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்படும் - என்றார். (த-4-11)

மிகப் பிந்திய அதிரடி

சிங்கப்பூரில் படிக்க பகுதி நேரமாக
80000/=வரை
உழைக்க அரியவாய்ப்பு

2 மாதங்களில் பறக்கலாம்
9 பேருக்கு மட்டுமே
சட்ட ஆலோசனைக்கு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(41938) (6.1) www.thisaivisa.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் மாறியது வாழைக்குலை சந்தை

யாழ்ப்பாணம், ஜன.3

திருநெல்வேலி பொதுச் சந்தையின் வாழைக்குலைச் சந்தை. கட்டடத்தின் கீழ்ப்பகுதிக்கும் வாகனத் தரிப்பிடம் வாழைக்குலைச் சந்தை இருந்த பகுதிக்கும் நேற்று முன்தினம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களையும் சந்தையில் வைத்து விற்பனை செய்யக்கூடியதாக ஓர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகளிடமிருந்து வரிப்பணமாக நான்கு வீதம் அறவிடப்படும் என்றும் கொண்டுவரும் பொருள்களில் கழிவுகள் பெறப்படலாகாது என்றும் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நல்லூர்ப் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இடைத் தரகர் நடைமுறை புதன்கிழமை தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. சந்தைப் பகுதியில் பொலிஸாரின் கண்காணிப்பும் இருக்கும்.

சந்தைக்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டு வழங்கப்படும்வரை நல்லூர்ப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தற்காலிக கடமைகளை மேற்கொள்வர்.

இவ்வாறான விடயங்கள் சபையில் தீர்மானிக்கப்பட்டன. இதேவேளை நடைபாதைக் கடை வியாபாரிகளுக்கும் சந்தை உட்பகுதியில் இடம் ஒதுக்கிக் கொடுப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

" "

விவசாயிகளிடமிருந்து வரிப்பணமாக நான்கு வீதம் அறவிடப்படும் என்றும் கொண்டுவரும் பொருள்களுக்கு கழிவுகள் பெறப்படலாகாது என்றும் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நல்லூர்ப் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.



ரயில் சேவை நீடிப்பை விரைவாக மேற்கொள்ளும் நோக்கில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தைப் புனரமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெறுகின்றன. (வ-86-21)

# நோயாளர் நலன் கருதி கிளினிக் விரிவாக்கம்

## சாவகச்சேரி மருத்துவமனை நடவடிக்கை

தென்மராட்சி, ஜன.3

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நடத்தப்படும் பல்வேறு கிளினிக்குகளிலும் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இதன் சேவைகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடை பெற்றது. இதன்போதே மேற்கண்ட விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:-

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த வருடம் (2013) வெளிநோயாளர் பிரிவு, விடுதிகள் மற்றும் கிளினிக்குகளில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2009 தொடக்கம் 2012 வரையான காலப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் சிகிச்சை பெற வந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த வருடம் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களுக்கு மேலும் அர்ப்பணிப்பான சேவையை அனைவரும் ஒன்றிணைந்து வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 380 பேர் சிகிச்சை பெற்றுள் ளனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஒரு நோயாளி 10-16 நிமிடங்களில் தமது நோய்க்கான சிகிச்சை பெற்று வெளியேறு கின்றார்.

காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை தொடர்ச்சியாக வெளிநோயாளர் பிரிவு இயங்குவதால் தினமும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர்.

அத்துடன் மருத்துவமனையில் உள்ள விடுதிகளில் 11 ஆயிரத்து 740 பேர் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர். (வ-9)

# பூநகரி பிரதேச சபையின் 'பட்ஜெட்'நிறைவேற்றம்

வலி.தென்மேற்கு, ஜன.3

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நிர்வாகத்தின் கீழுள்ள பூநகரி பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்டம் ஓர் அதிகப்படியான வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தவிசாளர் பொ.சிறிஸ்கந்தராசா தலைமையில் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி சபை மண்டபத்தில் நடைபெற்ற ஆண்டிறுதிக் கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக த.தே.கூட்டமைப்பைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் எதிராக எதிரணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் வாக்களித்தனர். வரவு-செலவுத் திட்டம் ஒரு அதிகப்படியான வாக்கால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2012-2013 ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்டங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-115)

# கலைப்பீட மாணவருக்கும் பட்டமளிப்பு



யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 10, 11 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பில் கலைப்பீட மாணவர்களுக்கும் பட்ட மளிப்பு இடம் பெறவுள்ளதாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

இந்தமாதம் நடைபெறவுள்ள குறித்த பட்டமளிப்பு விழாவில் கலைப்பீட மாணவர்கள் இணைத்துக்கொள்ளப் பட மாட்டார்கள் என்று துணை வேந்தரால் கடந்த மாதம் தெரிவிக்கப்பட்டது.

கலைப்பீட பரீட்சை முடிவுகள் வெளியாவதில் தாமதம் நிலவியதனால் ஒழுங்குபடுத்தல் பணி நிறைவடையவில்லை என்றும் அதனால் கலைப்பீட மாணவர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் பட்டமளிப்பு விழா நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதனால் கலைப்பீட மாணவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோடு தமக்கும் ஜனவரியில் பட்டமளிப்பு விழா நடத்தப்படவேண்டும் என்று துணை வேந்தரிடம் வலியுறுத்தியிருந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் அது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு சட்டபீட மாணவர்கள் உட்பட கலைப்பீட மாணவர்களுக்கும் எதிர்வரும் 10, 11 ஆகிய திகதிகளில் பட்ட மளிப்பு இடம்பெறவுள்ளது என்று கலைப்பீடாதிபதி தெரிவித்தார். (வ-4)

# சட்ட ரீதியான குடி வகையால் புற்றுநோய் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.3

நாட்டில் பதிவு செய்யப்பட்ட குடிவகைப் பாவனை என்றுமில்லாத அளவு அதிகரித்துள்ளதால் புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு பொது குடும்பநல வைத்திய பிரிவின் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 1981 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்த அதிர்ச்சித் தகவலை அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 1981 ஆம் ஆண்டு தனிநபரின் பதிவு செய்யப்பட்ட குடிவகைகள் பாவனை 1.8 லீற்றராகவும் 1985 ஆம் ஆண்டு 2.6 லீற்றராகவும் 1988 ஆம் ஆண்டு 2.6 லீற்றராகவும் 1991 ஆம் ஆண்டு 3.55 லீற்றராகவும் 1994 ஆம் ஆண்டு 3.66 லீற்றராகவும் 1997 ஆம் ஆண்டு 4.42 லீற்றராகவும் 2000 ஆம் ஆண்டு 5.89 லீற்றராகவும் 2003 ஆம் ஆண்டு 7.37 லீற்றராகவும் உள்ளதாக புள்ளி விவரங்கள் மூலம் வெளியிட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மதுபான பாவனை அதிகரிப்பும் அதனுடன் புகைப்பிடிப்பதும் புற்றுநோய் அதிகரிப்புக்கு காரணமாகிறது. அத்துடன் உணவு வகையில் பழவகைகள், காய்கறி வகைகள் பயன்படுத்தாமை, களைப்படையக் கூடிய வேலைகள் செய்யாமை, வெயிலில் நின்று வேலை செய்தல், கண்ட இடங்களில் உணவு உட்கொள்வதால் இரைப்பையில் கிருமிகளின் தாக்கம், இனப் பெருக்க சுகாதாரம் கடைப்பிடிக்காமையால் பப்பி லோமா வைரஸ் தாக்கம், தொழிற்சாலைகளின் கழிவுகளால் சூழல் மாசடைதல், மஞ்சள் காமாலை போன்றவற்றால் புற்று நோய் உருவாக வாய்ப்புக்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

# இளவாலைச் சந்தைக்கு காணி வாங்க உதவுக

## வலி.தென்மேற்கு பிரதேச சபை கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஜன.3

இளவாலை பொதுச்சந்தைக்கு காணி வாங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை இதற்கான நிதியுதவியை வழங்குமாறு அந்தப் பகுதியிலுள்ள மக்களைக் கோரியுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் இளவாலையிலுள்ள பொதுச் சந்தை பல வருடங்களாகத் தனியார் காணியில் இயங்கி வருகின்றது. இங்கு கடலுணவு, இறைச்சி உட்பட மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

குறித்த பகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தைக்கு நிரந்தரக் காணி இல்லாததால் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் சந்தையை [illegible] முடி[illegible]. இந்த நிலையில் சந்தை இயங்கும் காணியின் உரிமையாளருக்கும் பதில் தவிசாளருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து, காணியை பிரதேச சபைக்கு விற்பதற்கு உரிமையாளர் முன் வந்துள்ளதால் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் காணியை வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள பதில் தவிசாளர் [illegible] நிதியுதவி [illegible] கோரியுள்ளார். (வ-115)

# முசலி பிரதேச செயலர் பிரிவில் புதிய பாடசாலை திறந்து வைப்பு



முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பிச்சை வாணிப நெடுங்குளம் கிராமத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய பாடசாலை நேற்று வியாழக்கிழமை காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மீள் எழுச்சித்திட்டத்தின் நிதியுதவியுடன் சுமார் 18 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மன்-இக்ரஃ அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டது.

தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலைக்கு அதிபர் ஒருவரும் 4 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான நியமனக் கடிதங்களையும் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் நேற்று வியாழக் கிழமை காலை நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு வழங்கினார்.

குறித்த நிகழ்வுக்கு முசலி பிரதேச சபையின் தலைவர் எம்.எம்.எஹியா, உப தலைவர் எஸ்.எம்.பௌறூஸ், மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் லியோன் ரெவல், அமைச்சர் றிஸாட் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் அலிக்கான் செரீப், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாவட்ட பணிப்பாளர் என்.எம்.முனைபர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஓ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அகதி முகாமில் பெண்ணொருவர் கொலை

சென்னை, ஜன.3
இந்தியாவின் சேலம் மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் இலங்கைப் பெண் ஒருவர் தலையணையால் முகத்தை அழுத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலையைச் செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் அவரது கணவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள நாகியம்பட்டி பகுதியில் இந்த அகதி முகாம் அமைந்துள்ளது.

அங்குள்ள இலங்கையைச் சேர்ந்த ஞானகுமாரி (வயது-24) என்பவருக்கும் மனோஜ் குமார் என்பவருக்கும் 7 ஆண்டுகளுக்கு முன்னர் திருணம் நடந்தது. மனோஜ் குமார் இந்திய மத்திய ரிசேர்வ் பொலிஸ் பிரிவில் பணியாற்றி வருகின்றார். அவர்களுக்கு இரு குழந்தைகள் உள்ளனர். புதுடில்லியில் பணியாற்றும் மனோஜ் குமார் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தார்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் வீட்டில் மயங்கி வீழ்ந்திருந்த ஞானகுமாரியைக் கண்ட அயலவர்கள் அவ்ரை மருத்துவமனையில் அனுமதித்தனர். எனினும் அவர் மூச்சுத் திணறலால் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்த மருத்துவர்கள் அதுகுறித்துப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

> "-"
> முகத்தில் தலையணையை வைத்துஅழுத் தியதாலேயே அவர் உயிரிழந் துள்ளார் என்று தெரிவித்தனர்.

முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் ஞானகுமாரியின் முகத்தில் தலையணையைவைத்துஅழுத்தியதாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்தனர்.

அதையடுத்து பொலிஸார் காணாமற்போயுள்ள மனோஜ் குமாரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை கணவன், மனைவிக்கு இடையே வாய்தகராறு ஏற்பட்டது என்று அயலவர்கள் கூறுகின்றனர்.

அதன் தொடர்ச்சியாகவே ஞானகுமாரி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ற)

# மீனவரை விடுவிக்குமாறு பாம்பனில் நேற்று ஆர்ப்பாட்டம்



தனுஷ்கோடி, ஜன.3
இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்யக்கோரி பாம்பனில் பஸ் நிலையம் அருகே நேற்று வியாழக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாம்பன் கிராமத் தலைவர் சைமன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் பெருந்திரளான பெண்களும் கலந்து கொண்டனர்.

கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி பாம்பன் நாட்டுப் படகு மீனவர்கள் 18 பேர் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளதைக் கண்டித்தும் மூன்றுமாதங்களாகஇலங்கைச் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் 256 பேரை விடுவிக்கக் கோரியும் ஆர்ப்பாட்டத்தில் கண்டனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசிய நிரபராதி மீனவர்கள் விடுதலை கூட்டமைப்புத் தலைவர் அருளானந்தம்.

"கடந்த இரண்டு வாரங்களின் முன் இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை நான் சந்தித்தேன். அவர்கள் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை சிறைச்சாலை உணவு அவர்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை.

மீனவர்கள் பேச்சு குறித்து அதிகாரபூர்வ தகவல் மீனவ பிரநிதி களுக்கு வரவில்லை.

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 81 படகுகளை மீட்பதில் தொடர்ந்து சிக்கல்கள் நிலவுகின்றன. படகுகளின் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் இலங்கை நீதிமன்றங்களில் நேரில் முன்னிலையாகி தகுந்த ஆவணங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே படகுகளை இலங்கை நீதிமன்றம் விடுவிப்பது குறித்து அடுத்த கட்டத்துக்கு நகரும்" - என்றார். (வ-10)

# ஐ.நா. உயர்மட்டக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்

### *பழ.நெடுமாறன் கோரிக்கை*



சென்னை, ஜன.3
மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாட்டுக்கு முன்னர் ஐ.நா. உயர்மட்டப் பார்வையாளர் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன். இந்தக் கோரிக்கை தொடர்பான மனு ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் கையளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இலங்கை அரசினதும், இராணுவத்தினரதும் அராஜகங்கள் தலை விரித்தாடுகின்றன. இலங்கையின் உண்மை நிலைவரங்கள் வெளியுலகத்திற்குத் தெரிந்து விடும் என்ற அச்சத்தால் இலங்கைக்கு செல்லும் வெளிநாட்டு ஊடகவி யலாளர்கள் மஹிந்த அரசாலும், அதன் படைகளினாலும் விரட்டப்படுகின்றனர். ஐ.நாவில் ஏற்கனவே நிறைவேற்றபட்ட இரண்டு தீர்மானங்களையும்நடைமுறைப் படுத்தாமல் காலத்தைக் கடத்திவருகின்றது இலங்கை அரசு. அது பேராபத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தும் இலங்கை அரசு தான் தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகின்றது.

> "-"
> எதிர்வரும்மார்ச்மாதம் ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கையில் உள்ள உண்மை நிலையைக் கண்டறிவதற்காக ஐ.நா வின் உயர்மட்ட பார்வையாளர் குழுவொன்றை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. சபையிடம் கோரிக்கை விடுக் கின்றோம்

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கையில் உள்ள உண்மை நிலையைக் கண்டறிவதற்காக ஐ.நா வின் உயர்மட்ட பார்வை யாளர் குழுவொன்றை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. சபையிடம் கோரிக்கை விடுக்கின்றோம். அது தொடர்பான மனுவை உலகத் தமிழர் பேரவை, ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் கையளிக்கவுள் ளது" - என்று தெரிவித்தார். (ற)

# மாங்குளம் பிரதான சந்தியில் பஸ் நிலையம் அமைக்கக் கோரிக்கை

### *மீண்டும் விடுத்தனர் பயணிகள்*

வடமாகாணத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான மாங்குளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பஸ் நிலையமொன்றை அமைக்க மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாங்குளம் சந்தி வெள் ளாங்குளம், முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய பகுதிகளை இணைக்கும் இடமாகக் காணப்படுகின்றது.

இங்கு தினமும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் கூடுகின்றனர்.

இந்த நிலையில் மாங்குளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பஸ் நிலையமொன்றை அமைக்க வேண்டுமெனப் பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டுள்ள போதிலும் அது இது வரை நிறைவேற்றப்படவில்லை.

இதனால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-55)

# அரச அலுவலர்கள் நேர்மையுடன் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்

### *கிளிநொச்சி அரச அதிபர் அறிவுரை*



அக்கராயன், ஜன.3
மக்களுக்காகச் சேவையாற்றக்கூடிய நேர்மையும் அர்ப்பணிப்பும் மிக்க அரச அலுவலர்களாக நாம் எல்லோரும் விளங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.

கடந்த 30ஆம் திகதி கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அலுவலர்கள் எப்போதுமே கோவைகளுக்குள் மூழ்கி இருப்பார்கள். வேலைப்பளு காரணமாக மிகுந்த மன அழுத்தங்களுடன் இருப்பார்கள். மன அழுத்தங் களிலிருந்து விடுபடுவதற்கு இவ்வாறான ஒன்றுகூடல்கள் மிகவும் அவசியமானவை. குறிப்பாக அரச அலுவலர்கள் பாடசாலை களிலும் பல் கலைக்கழகங்களிலும் கற்கின்ற போது கலையாற்றல்களை வெளிப்படுத்து பவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் வேலை கிடைத்தவுடன் எல்லாவற்றையும் மறந்து வேலைக்குள் மூழ்கிவிடுவார்கள்.

அந்தநிலை மாறவேண்டும். அரச அலுவலர்கள் தங்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு இவ்வாறான ஒன்றுகூடல்கள் உதவுகின்றன.

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் தமது கலை வெளிப்பாடுகளை அதிகளவில் வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் வழியில் அரச செயலகத்தில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் தமது கலை ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தின் உதவி அரச அதிபர் திருமதி ப.ஜெயராணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கவிதைக்களம், நடனம், வினாடி வினாப் போட்டி, இசை நிகழ்ச்சி என்பன சிறப்பாக நடைபெற்றன. (க-18)

ஆரம்பமான முதல் நாளே ஆர்ப்பரித்து எழுந்தது மக்கள் கூட்டம்
ஆஸ்திரேலியா குடும்பவிசா
(விசா வகை 888)
* 2 வருடங்களுக்கு PR பெறலாம்
* குடும்பமாக 5 மாதங்களுக்குள் பறக்கலாம்
(நிபந்தனைகளுடன்)
வடபுலத்தில் மேற்படி விசா ஆலோசனையில் நாங்களே முன்னோடிகள் இன்னும் என்ன தாமதம் விரையுங்கள்
திசைகாட்டி (பிறைவேற் லிமிற்)
175 பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 5689090
www.thisaivisa.com

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டைக் கட்டுப்படுத்த இரவில் மணி ஓசை


***பண்டத்தரிப்பு சந்தையில்***

வலி.தென்மேற்கு. ஜன.3

பண்டத்தரிப்பு பொதுச் சந்தையில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுக்க முன்வந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை, இரவு நேரங்களில் சந்தையைச் சுற்றி மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மணி ஒலி எழுப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்துடன் இணைந்திருக்கும் பண்டத்தரிப்பு பொதுச் சந்தையில் கடந்த காலங்களில் திருட்டுக்கள் நடைபெற்று வந்ததனால் அச்சமடைந்த வியாபாரிகள் திருட்டுக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையைக் கோரியிருந்தனர்.

வியாபாரிகளின் கோரிக்கையை அடுத்து திருட்டுக்களைத் தடுப்பதற்கு முன்வந்துள்ள பதில் தவிசாளர், சந்தைக்கு மட்டும் காவலாளியை நியமிக்க முடியாததால் சந்தையுடன் இணைந்துள்ள உப அலுவலகத்தில் கடமையாற்றும் இரவு நேரக் காவலாளிக்கு சந்தையையும் கண்காணிப்பதற்கு வசதியாக மணியை வாங்கிக் கொடுத்து மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மணியொலி எழுப்புமாறு தெரிவித்துள்ளார். (வ-115)



நாட்டில் உள்ள மக்கள் நலத்துடனும் அமைதியாக வாழவும் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலை தணிந்து மழை பெய்ய வேண்டி வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் ஆலயத்தில் மகாயாகம் இடம்பெற்றது. (வ-402)

# மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

வலி.தென்மேற்கு. ஜன.3

வலி.தென்மேற்கு. சிறுவிளான் பகுதியில் ஆரம்பிக்கப் படவுள்ள மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள் மதுபான நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று பிரதேச சபையைக் கோரியுள்ளனர்.

மதுபான நிலையம் அமைக்கப்படவுள்ள சுற்றாடலில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வருவதுடன் அந்தப் பகுதி மக்களின் குல தெய்வமாக விளங்கும் ஆலயம் ஒன்றும் அங்கு அமைந்துள்ளது. அத்துடன் குறித்த மதுபான நிலையம் அமைக்கப்படுவதால் கலாசார சீரழிவுகள் ஏற்படுவதுடன் அமைதிக்கும் பங்கம் ஏற்படக் கூடும்.

எனவே. மக்களின் நலன் கருதியும் கலாசாரத்தைப் பாதுகாக்கும் வகையிலும் மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்க கூடாது என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த நூறு பேர் கையெழுத்திட்டு உப தவிசாளருக்கும். எதிர்க்கட்சி உறுப்பினர் அன்ரன் ஜோன்சனுக்கும் மனு ஒன்றை அனுப்பியுள்ளனர். (வ-115)

"-"

**மதுபான நிலையம் அமைக் கப்படவுள்ள சுற்றாடலில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர் அத்துடன் குறித்த மதுபான நிலையம் அமைக்கப் படுவதால் கலாசார சீரழிவுகள் ஏற்படக் கூடும்.**

# சாவகச்சேரி மருத்துவமனையில் மாற்று திறனாளிகளுக்கு கிளினிக்

## பிரதி திங்கட்கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை

சாவகச்சேரி. ஜன.3

சாவகச்சேரி மருத்துவமனைக்கு சிகிச்சை பெறவரும் மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி புதிய 'கிளினிக்' ஆரம்பிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை கிளினிக் அறையில் பிரதி திங்கட் கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வைத்திய கலாநிதி சி.சிவபாலனால் கிளினிக் நடத்தப்படவுள்ளது. பிறப்பு. பரம்பரை. போர்க் காயங்கள், விபத்துக்கள், எலும்பு மூட்டு நோய். பரிசவாதம், கலிற்றர் மாற்றல், தோல். பல். கண் உட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளாக உள்ளவர்கள் கிளினிக் கில் கலந்து கொள்ள முடி யும்.

"-"

**படுக்கைப் புண் ஏற்பட்டவர் கள். நடக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் கிளினிக் கில் கலந்து கொள்வதற்கு வசதியாக 110 இலக்க அம்புலன்ஸ் வசதி ஏற்படுத்திக் கொடுக் கப்படவுள்ளது. நோய் தொடர்பான விவரங்கள் தனித் தனி கோவைகளாகப் பராமரிக்கப்படவுள்ளன.**



வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் மாற்றுத் திறனாளிகள் சிரமமின்றி சிகிச்சை பெறுவதற்கு வசதியாக வாரத்தில் ஒரு நாள் கிளினிக் நடத்தப்படவுள்ளது.

கலிற்றர் மாற்றுதல், மூக்குக் குழாய் மாற்றுதல் போன்ற நோயாளர்கள் கிளினிக்கில் மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுக்கைப் புண் ஏற்பட்டவர்கள், நடக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் கிளினிக் கில் கலந்து கொள்வதற்கு வசதியாக 110 இலக்க அம்புலன்ஸ் வசதி ஏற்படுத்திக் கொடுக் கப்படவுள்ளது.

இந்தக் கிளினிக்குகளில் கலந்து கொள்வோருக்கு அரச சார் பற்ற நிறுவனங்கள் மூலம் தொழில் பயிற்சிகள் வழங்கப் படுவதுடன் உதவிகள் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த கிளினிக்குக்கு வருவோரின் நோய் தொடர்பான விவரங்கள் தனித்தனி கோவைகளாகப் பராமரிக்கப்படவுள்ளன.

மாற்றுத் திறனாளிகளுக்காக தனியான கிளினிக் நடத்தப்படுவது இதன் மூலம் இரண்டாவது வைத்தியசாலையாக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை திகழவுள்ளது. ஏற்கெனவே போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளான (அங்கவீனரான) படையினருக்கு றாகம வைத்தியசாலை யில் தனியான கிளினிக் நடத்தப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)


# கடலாமை பிடித்த இருவர் கைது

வலி.வடக்கு. ஜன.3

சட்டவிரோமாகக் கடலாமை பிடிப்பதில் ஈடுபட்ட இருவர் குறித்து இளவாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப் பட்டதுடன் இரண்டு ஆமைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாதகல் கடற்கரைப் பகுதியில் கடலாமையைப் பிடித்தவர்களே இளவாலை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அ.அனுர நிஹறப் பிட்டி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரிடம் கடந்த 31 ஆம் திகதி மாட்டிக் கொண்டனர்.

அவர்கள் மீது கடல் உயிரினங்கள் பாதுகாப்பு சட்டம் 30 பிரிவு 2 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆமைகள் இரண்டும் கடலாமைகள்தான் என்பதை வனவிலங்கு அதிகாரிகள் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தி அவர்களை தொடர்ந்து ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவித்ததுடன் எதிர் வரும் 22 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



கடலில் பிடிக்கப்பட்ட சுமார் மூன்றரை அடி மற்றும் இரண்டரை அடி நீளமான இரண்டு ஆமைகளும் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக மீண்டும் பொலிஸாரால் கடலில் விடப்பட்டுள்ளன. (வ-86)

# பழைமையான இந்து மதம் பல வழிகளால் தாக்கப்படுகிறது

## வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஜன.3

பல்லாயிரம் ஆண்டு காலமாக பாதுகாக்கப்பட்டு வந்த எமது இந்து மதம் இன்று பல வழிகளால் தாக்குதலுக்கு உள்ளாகின்றது என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்தார்.

அண்மையில் ஆரம்பிக்கப் பட்ட சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் :

வெறுமனே இறை பக்தியை மட்டும் கொண்டதல்ல மதம். ஒரு சமூகத்தினுடைய பல விடயங்களை உள்ளடக்கியதே மதம். இவ்வாறான எமது மதத்தை அழித்தால் அல்லது பலவீனப்படுத்தினால் எமது இனத்தின் இருப்பும் பலவீனப்படும். இதுவே இன்றைய பிரதான நோக்கம். இந்த நோக்கத்தை அடையப் பல மார்க்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

எனவே அவைகளிலிருந்து எமது மதத்தைப் பாதுகாக்க வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இவ்வாறான ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து வருகிறோம் - என்றார். (வ-21)

# இலவச இரத்த பரிசோதனை

தென்மராட்சி, ஜன.3

தென்மராட்சி தெற்கு மறவன் புலோ பிரிவு மக்களுக்கான இலவச இரத்தப் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறும்.

40 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் கலந்து கொண்டு இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி முதியோர் பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ். எஸ்.அருளானந்தம் அறிவித்துள்ளார். (வ-9)

# மனிதனின் செயற்பாடுகளே இயற்கை அழிவுகளுக்குக் காரணம்

***யாழ்.மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு***

மனிதர்களின் செயற்பாடுகளே இயற்கை அழிவுகளுக்கு காரணம். எனவே மனிதனின் செயற்பாடுகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை உருவாக்கப்படவேண்டும் என்று யாழ்.மாவட்ட செயலக இடர்முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ச.ரவி தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய பாதுகாப்புத் தினமும் ஆழிப்பேரழிவின் 9 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும். கடந்த மாதம் 26 ஆம் திகதி சுழிபுரம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தின் பனை வளம் அதிகமாக அழிக்கப் பட்டு வருகின்றது. இதனால் எதிர்காலத்தில் பனை வளம் இல்லாது போகலாம். அத்துடன் கரையோர வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். இயற்கை இடர்களைத் தவிர்ப்பதற்கு இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். மனிதனின் செயற்பாடுகளே இயற்கை அழிவுகளுக்குக் காரணமாக உள்ளன. எனவே ஒவ்வொருவருடைய பங்களிப்பும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் இருக்க வேண்டும். இது தொடர்பாக விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும் - என்றார். (வ-14-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தைகிழக்கு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்-2012.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012.12.31ஆம் திகதியில் உள்ளபடியான மாந்தைகிழக்கு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 24.06.2013ஆம் திகதிய NP/05/01/GER/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் மாந்தைகிழக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் விண்ணப்ப இறுதி தினத்தன்று வசித்து வருபவராகவும் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிட சான்றிதழ் / வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
5. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் தேவையான தொழிற் தகைமை சான்றிதழையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. மாந்தைகிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா100.00 இனைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு செயலாளர், மாந்தைகிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் நிறுத்தப்படும்.

**விண்ணப்பம் முடிவுதிகதி**

2014.01.17ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**பதவிகள்**

1. காவலாளி (வெற்றிடம்01)
2. வீதி தொழிலாளி (வெற்றிடம்01)

**கல்வித்தகைமை**

ஆகக்குறைந்தது தரம் 08 சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள் அனுபவங்கள் என்பன விசேட தகைமைகளாகக் கருத்திற் கொள்ளப்படும்.

**சம்பளம்**

2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:06/2006(iv) இதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006-A ஆகும்.
ரூபா 11,730-120x10-130x10-145x10-160x12-17,600/=

**3.சாரதி (வெற்றிடம் 1)**

**கல்வித்தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (6) பாடங்களில் இரண்டு திறமைச்சித்தி உட்பட சித்தி பெற்றிரு[illegible] வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்[illegible] அத்துடன்

**ஏனைய தகைமைகள்**

1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவர[illegible] திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார் கார[illegible]ந்தருக்குக் குறையாத பார வண்டி செலுத்தக் கூடிய வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்[illegible] விண்ணப்ப இறுதிதிகதிக்கு மூன்று (3) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் [illegible]ம்.
2. மோட்டார் வாகன சாரதியாக 3 வருட[illegible]வத்திற்கான சான்றிதழ்
3. விண்ணப்பதாரி அகக்குறைந்தத 5[illegible]/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமு[illegible]யாற்றக்கூடிய உடல் உறுதியை கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையின்[illegible]காண்டவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கான மருத்துவ சான்றிதழ் பெற்றி[illegible] வேண்டும்.
5. பெருந்தெரு விதிமுறைகள்பற்றி சிறந்த [illegible]வக்கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24ஆம் திகதிய அரசா[illegible]ர்வாக சுற்றறிக்கை இல.06/2006(iv) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் [illegible]06-A ஆகும். இதற்கமைய மாதாந்தம் 12,470 - 130x10-145x10-160x10-170x12-18.[illegible] ள படிநிலையில் அமர்த்தப்படுவர்.

திருமதி கு.சண்முகலிங்கம்
செயலாளர்,
மாந்தை கிழக்கு, பிரதேச சபை,
பாண்டியன்குளம்.

01.01.2014 (சி/10915)(7.8)

## தீ விபத்தில் 200 குடிசைகள் நாசம்

புதுடில்லி, ஜன.3
ஆந்திர மாநிலம் கிழக்கு கோதா வரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் 200க்கும் மேற்பட்ட மீனவர்களின் குடிசை கள் எரிந்து நாசமாகியுள்ளன.
இந்தத் தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது. எனினும் சுமார் 500 குடும்பங்கள் இந்த தீ விபத்தில் வீடுகளை இழந்துவிட்டன. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்றியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## மகாராஷ்டிர மாநிலத்தில் பஸ் விபத்து: 4 பேர் சாவு

மகாராஷ்டிர மாநிலம், அகமது நகரில் பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். அகமது நகரில் இருந்து டோகோவடே நகருக்குப் பயணித்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத் தாக்கில் வீழ்த்துள்ளது. விபத்து நடைபெற்ற சமயம் பஸ்ஸில் 40 பேர் பயணித்தனர்.
இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். (ற)

## அணுசக்தி மையங்கள் குறித்து இந்தியா-பாக். தகவல் பகிர்வு

புதுடில்லி, ஜன.3
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் அமைந்துள்ள அணு சக்தி மையங்கள் குறித்த தகவல்களை இரு நாடுகளும் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பரிமாற்றம் செய்து கொண்டன.
எந்தச் சூழலிலும் அணு உலை கள் மீது பரஸ்பரம் தாக்குதல் நடத்தப்படாது என இந்தியாவும், பாகிஸ்தானும் 1988 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தங்களது அணுசக்தி மையங்கள் குறித்த தகவலை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று இரு நாடுகளும் பரிமாறி வருகின்றன.
அந்த வகையில், இரு நாடுகளும் தற்போது தகவல் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளன.
அதுமட்டுமின்றி, தங்களது சிறையிலுள்ள 281 இந்தியக் கைதிகள் குறித்த விவரங்களை பாகிஸ்தானும், இந்தியச் சிறையிலுள்ள 396 பாகிஸ்தான் கைதிகள் குறித்த விவரங்களை இந்தியாவும் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளன. (ற)

## பாதிக்கப்பட்டவர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு

*முசாபர் நகர் மக்கள் திண்டாட்டம்*

முசாபர்நகர், ஜன.3
முசாபர்நகர் கலவரத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் மீது பொலிஸாரும், வனத் துறையினரும் இணைந்து வழக்குப் பதிவு செய்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
உத்திரப்பிரதேச மாநிலத்தின் முசாபர் நகரில் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் நடந்த கலவரத்தில் பலர் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களைத் தற்காலிக முகாம்கள் அமைத்து மாநில அரசு தங்க வைத்திருந்தது. கலவரம் நடைபெற்று 4 மாதங்கள் ஆன நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் உயிருக்கு பயந்து தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பாமல் முகாம்களிலேயே தங்கியுள்ளார்.
இந்த நிலையில் குறித்த காலப் பகுதியில் தற்காலிக முகாம்களில் போதிய சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி இல்லாத மையால் 34 குழந்தைகள் உயிரிழந்துள்ளன. அதையடுத்துப் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ள அந்த மாநில அரசு, தற்காலிக முகாம்களை மூடும் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.
தற்போது முகாம்களை விட்டு வெளியேற மறுப்பவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கையிலும் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. முகாம்களை விட்டு வெளியேறி மன்சூரா, ஜின்ஹானா போன்ற கிராமங்களில் தங்கியுள்ள 100 குடும்பங்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். அந்தக் கிராமப் பகுதியை சுற்றியுள்ள வனப் பகுதியில் முகாமிட்டுள்ள சுமார் ஆயிரம் பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ள வனத்துறை யினர் அவர்களை அங்கிருந்து விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
இந்த நடவடிக்கைகளால் சொந்த கிராமங்களுக்கு செல்லாமல் இருக்கும் ஏராளமான குடும்பத்தினர். தங்குவதற்கு இடமின்றியும், என்ன செய்வது என்று தெரியாமலும் தவித்து வருகின்றனர். (ற)



பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங்கின் வீட்டின் முன்னால் நேற்றுமுன்தினம் இளைஞர் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. போராட்டம் நடத்தியவர்கள் பொலிஸ் தடைகளைத் தாண்டி வீட்டுக்குள் செல்ல முற்பட்டதை அடுத்து அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி விரட்டினர். அதில் பலர் காயமடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. கடந்த வாரம் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியின் வீட்டின் முன்னால் பா.ஜ.கவினர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இளைஞர் காங்கிரஸ் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. (ற)

## காங்கிரஸின் அடுத்த தலைவர் ராகுல்

*அஸாம் முதலமைச்சர் கூறுகின்றார்*



புதுடில்லி, ஜன.3
காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவராக அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல்காந்தி முன்னிறுத்தப்படலாம் என்று எதிர்வு கூறியுள்ளார் அசாம் மாநில முதலமைச்சர் தருண் கோகாய்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"ராகுல் காந்தி கட்சியை திறமையாகக் கையாண்டு வருகின்றார். காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவராக அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி முன்னிறுத்தப்படலாம்.
அதே வேளை, தற்போதைய பிரதமர் மன்மோகன்சிங் பிரதமர் பதவியில் இருந்து விலகப் போகிறாரா அல்லது முழுமையாகப் பதவி வகிப்பாரா என்பது குறித்து பல்வேறு ஊகங்கள் ஊடகங்களில் வெளியாகி வருகின்றன. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் ஐந்து ஆண்டு காலமும் முழுமையாக மன்மோகன்சிங் பதவி வகிப்பார். இந் தக் கருத்து என்னுடைய தனிப்பட்ட கருத்துத்தான்" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூர்சியின் சொத்துக்கள் முடக்கம்

கெய்ரோ, ஜன.3
எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முர்சியின் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை பயங்கரவாத குழுவாக அறிவித்துள்ளது எகிப்து அமைச்சரவை.
அமைச்சரவையின் இந்த அறிவிப்பை அடுத்து 500க்கும் மேற்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பைச் சேர்ந்த இஸ்லாமிய தலைவர்களின் சொத்துக்களை அந்த நாட்டு அரசு முடக்கியுள்ளது. அதில் முன்னாள் ஜனாதிபதி முகமது முர்சியின்சொத்துக்களும்அடங்கியுள்ளன என கூறப்படுகின்றது.
அமைச்சரவையின் இந்த அறிவிப்பால் அந்த நாட்டில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

## ஈரானில் நிலநடுக்கம்: ஒருவர் சாவு

தெஹ்ரான், ஜன.3
ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் இருந்து ஆயிரத்து 200 கி.மீ தொலைவில் உள்ள சிறிய நகரான பஸ்தக்கில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார். 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்மீட்புப்பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
2003 ஆம் ஆண்டு தென்கிழக்கு ஈராக்கிலுள்ள பாம் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் 26 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். (ற)

# தாக்குதல் நடத்துவதற்கு தயாராகின்றது ஜப்பான்

*அரசமைப்பில் விரைவில் மாற்றங்கள்*




டோக்கியோ, ஜன.3
தமது நாட்டு இராணுவம் பிற நாடுகளின் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏற்றவாறு அரசமைப்பை மாற்றியமைக்க ஜப்பான் தீர்மானித்துள்ளது.
இரண்டாம் உலகப் போரின் போது சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீது ஜப்பான் படையெடுத்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.
அதனைத் தொடர்ந்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதால், முப்படைகளும் நாட்டை பாதுகாப்பதற்குமட்டுமேபயன்படும்என்று வரையறை செய்யப்பட்டது.
இந்தநிலையில் சர்ச்சைக்குரிய தீவுகள் விவகாரத்தில் சீனாவின் அதிரடி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு ஜப்பான் அரசியல் சாசனத்தில் மாற்றங்களை செய்யவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுகுறித்து ஜப்பான் பிரதமர் ஷின்ஸா அபே கருத்துத் தெரிவிக்கையில்,
"எமது நாட்டின் அரசியல் சாசனம் இயற்றப்பட்டு 68 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தநிலையில், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப அதில் மாற்றம் கொண்டு வருவது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும். 2020 ஆம் ஆண்டுக்குள் ஜப்பானின் அரசியல் சாசனத்தில் மாற்றம் வரலாம். சுய பாதுகாப்புக்காக மட்டுமே இராணுவம் என்ற நிலை மாறுகையில், இந்த பிராந்தியத்தில் குலைந்துள்ள அமைதியும், ஸ்திரத்தன்மையும் மீண்டும் நிலைநிறுத்தப்படும்"என்று தெரிவித்துள்ளார். (ற)

# அகதிகள் நலன்கள் குறித்து கரிசனை கொள்ள வேண்டும்

*பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்*

ஜெருசலேம், ஜன.3
நகரங்களை வடிவமைப்பதில் மாத்திரம் கவனம் செலுத்தாது, இருப்பிடங்களை இழந்தவர்கள் மற்றும் அகதிகள் மீதும் கரிசனை கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்.
தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"கடந்தவருடம்இத்தாலியிலேயே அதிகளவான அகதிகள் தஞ்சமடைந்தனர். அதனைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நகரங்களை வடிவமைப்பதில் மாத்திரம் கவனம் செலுத்தாது, இருப்பிடங்களை இழந்தவர்கள் மற்றும் அகதிகள் மீதும் கரிசனை கொள்ள வேண்டும்." என்று அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ற)



அமெரிக்காவின் வடக்கு டகோடா மாகாணம் கேசெல்டன் என்னுமிடத்தில் கச்சா எண்ணெய் ஏற்றிவந்த ரயில் தடம்புரண்டு தீப்பற்றிக் கொண்டது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் ரயிலின் 56 பெட்டிகள் தீயில் சிக்கின. இலகுவில் எரிபற்று நிலையை அடையக் கூடிய கச்சா எண்ணெய் நிரப்பப்பட்ட ரயில் பெட்டிகளில் பற்றியுள்ள தீயை அணைப்பதற்கு தீயணைப்பு வீரர்கள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் இருநாள்கள் கடந்த நிலையிலும் கொழுந்துவிட்டெரியும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது திணறுகின்றனர். (177)

# போர் ஒன்று ஏற்படுமானால் அமெரிக்காவுக்கும் ஆபத்தே

*எச்சரிக்கின்றார் வடகொரிய ஜனாதிபதி*



சியோல், ஜன.3
கொரிய தீபகற்பத்தில் போர் ஒன்று ஏற்படும் சூழ்நிலை உருவானால் அங்கு அணு ஆயுதங்களால் பேரழிவு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் அமெரிக்கா எவ்விதத்திலும் பாதுகாப்பாக இருக்கமுடியாது" - என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்.
புத்தாண்டை முன்னிட்டு அந்த நாட்டு தொலைக்காட்சியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது,
"நாம் ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்டுவருகின்றோம். இராணுவத்தினரிடையே சிறு மோதல்கூட போருக்கு வழிவகுக்கக் கூடும். அமைதிக்காக நாம் யாரிடமும் கெஞ்சப் போவதில்லை, எதிரிகளிடமிருந்து எங்களைத் தற்காத்துக் கொள்ளவே அணு ஆயுதங்களை பயன்படுத்த முடிவு செய்துள்ளோம்." என்று தெரிவித்துள்ளார்.
அண்மையில் இராணுவச் சதியில் ஈடுபட்டார் என்று தெரிவித்து தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட தனது மாமாவான ஜாங் சாங் தேக் பற்றிக் குறிப்பிடும்போது "அவர் மிகவும் அழுக்கான நபர்" என்று குறிப்பிட்டார் கிம். (ற)

# பிரசவம் இலவசம்

*படையெடுக்கும் கர்ப்பிணிகளால் மிரள்கின்றது பிரிட்டன்*

லண்டன், ஜன.3
வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாவுக்கு வரும் கர்ப்பிணிகளைக் கண்டு மிரண்டு போயுள்ளது பிரிட்டன்.
பிரிட்டனுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அங்கு பிரசவித்தால் அதற்கான செலவை அந்த நாட்டு அரசே ஏற்றுக் கொள்கிறது. அதற்காக பிரிட்டன் ஆண்டுதோறும் சுமார் 60 கோடி ரூபா செலவு செய்கிறது.
இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் அயல்நாட்டுக் கர்ப்பிணிப் பெண்கள் பிரசவ காலத்தில் சுற்றுலா விஸாவில் பிரிட்டனுக்கு வந்து விடுகின்றனர். ஏனெனில் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள மருத்துவமனைகளில் பிரசவத்தின்போது நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபா அறிவிடப்படுகின்றது. இந்தக் கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்கள் குழந்தை பெற்றுக் கொள்ள பிரிட்டனுக்கு வந்து விடுகின்றனர். இலவசமாக பிரசவம் பார்ப்பித்து குழந்தையுடன் நாடு திரும்பி விடுகின்றனர்.
தற்போதுதான் பிரிட்டன் அரசுக்கு இந்த விடயம் கொஞ்சம் கொஞ்சமாக விளங்க ஆரம்பித்துள்ளது. அண்மையில் ருமேனியா, பல்கேரியா மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் சில நாடுகளைச் சேர்ந்த 300 கர்ப்பிணிகள் விமானங்களில் லண்டன் வந்து இறங்கினர். அவர்கள் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு மருத்துவர் குழு ஒன்றால் பரிசோதிக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் 36 வார கர்ப்ப காலத்தை தாண்டியவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து விமான நிலைய அதிகாரிகள் அவர்களை அந்தந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பினர். ஆனால் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.
அதையடுத்து இந்தவருடம் முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான பிரசவ விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வருவதற்கு பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## சீனப் போர்க் கப்பலின் சோதனை ஓட்டம் வெற்றி

பீஜிங், ஜன.3
சீனாவின் முதல் விமானம் தாங்கிக் கப்பல் அதன் முதல் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளது என்று அந்த நாட்டு இராணுவ அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.
உக்ரைன் நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் தாங்கி போர் கப்பல், கடந்த ஆண்டு சீனக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
சர்ச்சைக்குரிய சீன தென்கடல் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இந்தச் சோதனை ஓட்டத்தில் போர் நடைமுறைகள் உட்பட 100க்கும் மேற்பட்ட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
சீனாவின் இந்தச் செயல் சீன கடல் எல்லையைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்தது. ஜப்பான், அமெரிக்கா, தென்கொரியா, [illegible] நாடுகள் சீனாவின் இந்த நடவடிக்கைக்கும் கண்டனம் தெரிவித்திருந்தன. அதேவேளை, "இது சீனாவின் சாதாரண வழமையான சோதனை நடவடிக்கையே" என்று தெரிவித்துள்ளது சீனா. (ற)

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
Saravana Tex
770, கே.கே.எஸ்.வீதி (தட்டாதெருச் சந்தி)
யாழ்ப்பாணம்.
05 அதிர்ஷ்டசாலிகளுக்கு மடிக்கணினிகள் (Laptop)
புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும்
பிரமிக்க வைக்கும் விசேட விலைக்
கழிவும் பெறுமதிமிக்க
அன்பளிப்புக்களும்
இன்றே முந்துங்கள்

| | | |
|---|---|---|
| ஆண்களுக்கான கொட்டன் சேட் (Modern Shirt) | 1650/= | 800/= |
| ஆண்களுக்கான T.சேட் | 1290/= | 700 |
| சிறுவர்களுக்கான T.சேட் | 900/= | 450/= |
| ஆண்களுக்கான ரவுசர் ரெடிமேற் சோக்கோ | 2490/= | 1650/= |
| ஆண்களுக்கான (Wedding சேட்) | 1600/= | 900/= |
| கொட்டன் பஞ்சாபி துணிகள் | 1450/= | 850/= |

யார் அந்த 05 அதிர்ஷ்டசாலிகள்
மற்றும் சில்க் சாறிகள், கொட்டன் சாறிகள்,
பன்சி சாறிகள், பட்டு சாறிகள், சீக்குன்ஸ் சாறிகள்
மற்றும் றெடிமேற் சல்வார்கள், ரொப் வகைகள்
எனப் பல டிசைன்களில் புதுப் புது தெரிவுகள்
(C/10918)(7.6)
3000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்
குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடீஸ்வர திருடர்கள் சுதந்திரமாக தேங்காய்த் திருடர்கள் சிறைகளில்

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு குறித்து ஐ.தே.கட்சி எம்.பி.

கொழும்பு, ஜன3

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மீதான குற்றச்சாட்டு என்ன வென்றால், பெரிய சுறாக்கள் எல்லாம் சுதந்திரமாக சுற்றித் திரிகையில் மிகச் சின்னச் சின்ன மீன்களை குறிவைக்கிறார்கள் என்பதுதான். இன்று கோடீஸ்வரத் திருடர்கள் சுதந்திரமாக சுற்றித் திரிகிறார்கள். தேங்காய் திருடுவதில் ஈடுபட்டுள்ள ஏழைகள்தான் சிறைக்குப் போகிறார்கள். சமீபத்திய சம்பவம் ஒன்றில் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தார். அவர் மீது இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கொழும்பு சூதாட்ட நிலையம் ஒன்றை சோதனையிட்டார்கள் என்பதற்காக 23 பொலிஸார் இடமாற்றப்பட்டார்கள். இன்னொரு சம்பவத்தில் ஹெரோயின் போதைப் பொருள் பொதி யொன்றை விடுவிக்குமாறு ஒரு செயலாளர் கடிதம் கொடுத்திருந்தார். அவருக்கு என்ன நடந்தது? அவர் காவலில் வைக்கப்பட்டாரா? அவ்வாறு நான் ஒரு கடிதம் கொடுத்திருந்தால் பிணை கூட இல்லாமல் சிறை யில் அடைத்திருப்பார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரும் அரசையும் ஐ.தே. கவையும் கடுமையாக விமர்சிப்பவருமான நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஆங்கில பத்திரிகை யொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் சேரசிங்க தெரி வித்துள்ள மேலும் சில விடயங்கள் வருமாறு:

> "–"
>
> **சம்பூர், நுரைச்சோலை, மத்தள விமானநிலையம், ஹம்பாந் தோட்டை கிரிக்கெட் விளையாட்டரங்கு மற்றும் திருகோணமலை இறங்கு துறை முதலியவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள். இவை அனைத்தும் ஒரே சக்தியின் கீழ்தான் செயற் படுகின்றன.**

பத்திரிகையாளர் றிச்சார்ட் டிசொய்ஸா மற்றும் பலரது கொலை தொடர்பாக அப்போதைய ஐ.தே.கட்சி அரசு முறையாக புலனாய்வுகளைச் செய்திருக்க வேண்டும். அவர்கள் தவறி விட்டார்கள். அதற்காக அவர்களை நான் கண்டிக்கிறேன். அவர்கள் அதற்காக பதில் சொல்ல வேண்டியவர்கள். அது ஒரு கரும்புள்ளி எங்களுக்கு. ஆனால் இப்போது எத்தனை பத்திரிகையாளர்கள் காணாமற் போயுள்ளார்கள்- பட்டப் பகலில் எத்தனை பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். லசந்த விக்கிரமதுங்கவை எடுத்துக் கொள்ளுங்கள். உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் நான்கு பேரால் அவர் மிருகத்தனமாகக் குத்திக் கொல்லப்பட்டார். ஒளித்திருந்து அல்ல பகிரங்கமான இடத்தில் இது நடந்தது. அது நடந்துள்ள விதத்தைப் பார்த்தால் தொழில் முறையில் அது செய்யப்பட்டிருக்கிறது. செய்தவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. அநேகர் இப்போது நாட்டை விட்டு ஓடியிருக்கிறார்கள். எத்தனையோ பேர் காணாமற் போயுள்ளார்கள். எனவே இங்கே அமைதி நிலவு கின்றது. இது வாழ்வதற்கு நல்ல இடமாக இருக்கிறது என்று எப்படி சொல்ல முடியும்?

அபிவிருத்தி பற்றியே பேசப்படுகிறது. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் வருமானம் 420 மில்லியன் ரூபாய் மட்டும்தான். அதுவும் கூடத்தான். கொழும்பிலிருந்து கார்கள் இறக்கு மதி அந்தத் துறைமுகத்துக்கு மாற்றப்பட்டதனால். இது ஒரு குறிப்பு மட்டும்தான். மேலும் சம்பூர், நுரைச்சோலை அனல் மின் நிலையங்கள் மத்தள விமானநிலையம், ஹம்பாந் தோட்டை கிரிக்கெட் விளையாட்டரங்கு மற்றும் திருகோணமலை இறங்கு துறை முதலியவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். இவை அனைத்தும் ஒரே சக்தியின் கீழ்தான் செயற் படுகின்றன.

ஐ.தே.க. காலத்தில் எந்த ஒரு தலைவரும் இந்த வகையில் ஊழல் செய்ததாக குற்றஞ்சாட்டப்படவில்லை. இவை அனைத் துக்கும் ஒரு குடும்பம் தான் குற்றஞ்சாட்டப்படுகின்றது. 60 வீதமான வரவு - செலவுத் திட்டம் இந்தக் குடும்பத்தின் நேரடிக் கட்டுப் பாட்டில் வருகின்றது. இரண்டுதனிநபர்கள் சம்பந்தப்பட்ட வகையில் எல்லாமே சீன நிறுவனங்கள் கையாளப்படுகின் றன. அவ்விருவரும் இந்தக் குடும்பத்துடன் நெருக்கமானவர்கள். வரு கின்ற எந்த ஒரு தொழிலிலும் 20 சதவீதம் அவர்களுக்கு கிடைக்கிறது. இப்பொழுது தரகுப் பணம் மட்டுமல்ல முழுத் தொழில்களும் அவர்களுக்கு வரப் போகின்றன. கொழும்பில் காணி விவகாரங்கள் யாவும் ஜனாதிபதிக்கு நெருங்கிய ஒருவரின் கீழ் வருகின்றன. எங்கும் ஊழல்கள் நிறைந்து விட்டன. டாட்டா நிறுவன விடயத்தில் தரகு வேலை செய்தவர் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டிருந் தவருக்கு 20 மில்லியன் டொலர் தரகுப் பணம் கொடுத்ததாகக் கூறியிருந்தார். கிரிஷ் நிறுவன விடயத்தில் அரசைச் சேர்ந்த இரு அதிகார நபர் களுக்கு 200 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சைக் கவனித்தால் நாட் டின் முழு நிதியையுமே ஒரு தனி மனிதர் கையாள்கிறார். இந்த விடயத்தில் நாடாளுமன்றத்துக்கு எந்தவித தெரி வுகளுக்கும் இடமில்லை. ஊழல்கள் கண்காணிக்க அமைக்கப்பட்ட நிறுவனமும் ஊழல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளனர். (ப)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

ரவிநாத் உதயரஞ்சினி தம்பதியரின் செல்வப் புதல்வி

ஆராதனா




இன்று (03.01.2014) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

ஆராதனாவை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**தவறிவிட்டது**

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த கனகரத்தினம் கருணராஜா என்பவரின் தே.அ.அட்டை (901954062V), கோயிலாக்கண்டிக்கும், கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது.

தொடர்பு: 077 048 9302

**வீடு விற்பனைக்குண்டு**

கரவெட்டி சம்பந்தர் கடையடியில் அமைதியான சூழலில், சகல உட் கட்டுமான வசதிகளையும் கொண்ட அழகான வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: செ.யோகேஸ்வரி 077 004 7051

**உதயமாகும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி (திவிநெகும) திணைக்களத்தை மகிழ்வுடன் வரவேற்கின்றோம் - 03.01.2014**







welcome with pleasure

welcome with pleasure

மஹிந்த சிந்தனை மூலம் நிலையான அபிவிருத்தி நோக்கிப் பயணிக்கப் பாதை காட்டிய அதிமேதகு **ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ** அவர்களுக்கு நன்றி கலந்த வாழ்த்துக்களை உரித்தாக்கி உவகையடைகின்றோம். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ **பசில் ராஜபக்ஷ** அவர்களின் அர்ப்பணிப்பினை அகமகிழ்ந்து போற்றுகின்றோம். பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ **டக்ளஸ் தேவானந்தா** அவர்களின் ஓயாத பங்களிப்பினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் வாழ்வின் எழுச்சித் திட்டமாக மாற்றமடையும் இத்தருணத்தில் வேளாண்மை சிறந்திடவும் கைத்தொழில்கள் உயர்ந்திடவும் கடற்தொழில் மிளிர்ந்திடவும் கைகொடுத்திடுவோம்.

**வாழ்வின் எழுச்சி சமுதாய மட்ட வங்கிகள் மூலம் அனைத்துத் துறைசார் தொழில் முயற்சி விருத்திக்கும் உறுதுணை நின்றிடுவோம்.**

**சமுதாய மட்ட அமைப்புக்கள் சக்தி கொண்டு எழுந்திட உழைத்திடுவோம்**

**வாழ்வாதார அபிவிருத்தி பெருகிட சேவை நல்கிடுவோம்**

**வளமான வீடும் வியத்தகு நாடும் ஏற்றிடுவோம்.**

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் (திவிநெகும) திணைக்களத்தை மக்கள் பணியில் இணைத்திடுவோம்.**

முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்,
சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் (35)
யாழ் மாவட்டம்
முகாமைத்துவப் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள்
சமுர்த்தி மகாசங்கங்கள் (15) யாழ்மாவட்டம்

முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்
பிரதேசசெயலகங்கள், யாழ்மாவட்டம்
மாவட்ட பணிப்பாளர்,
உதவி ஆணையாளர், இணைப்பாளர்,
முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்,
மாவட்ட சமுர்த்தி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி/10902)(6.4)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா நன்னீர் மீனவர்களுக்கு கனகராயன் குளத்தில் ஓய்வு மண்டபம்

வவுனியா, ஜன.3

வவுனியா மாவட்டத்தில் முதன் முதலாக நன்னீர் மீனவர்களுக்கென அமைக்கப்பட்ட ஓய்வு மண்டபம் இந்த மாதம் இறுதிப் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக வவுனியா, மன்னார் மாவட்டங்களின் நீர்வள அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரியான பா.நிருபராஜ் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

கனகராயன் குளப் பகுதியில் மீனவர்களின் நலன்கருதி ஓய்வு மண்டபம் ஒன்று 1.85 மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் இந்த மாதம் இறுதிப் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் வவுனியா குளப் பகுதியில் "மீன்வித்து" உற்பத்தி நிலையம் வவுனியா மீனவர் அமைப்புக்கள், கமக்கார அமைப்புக்கள், நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வள அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் மேற்பார்வையுடன் இந்த மாதம் 30 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வவுனியாக் குளங்களில் மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் 100 பேருக்கு தலா ஒரு படகு வீதம் 100 படகுகள் கடற்றொழில் நீரியல் அமைச்சின் வருடாந்த அபிவிருத்தி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படவுள்ளன்.

இந்த 100 படகுகளும் வவுனியா மாவட்ட நீர்வள அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தை வந்தடைந்துள்ளன. இந்தப் படகுகளைத் தயாரிப்பதற்கு 6 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. கடந்த ஆண்டு வவுனியா மாவட்டத்தில் உள்ள 60 குளங்களில் 4 மில்லியன் ரூபா செலவில் 1.8 மில்லியன் மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் மீன் வளர்ப்புத்துறை அபிவிருத்தியடைந்து வருகின்றது. சுமார் 15 குடும்பங்கள் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன.

இருந்த போதிலும் கடந்த மூன்று மாதங்களாக போதிய மீன்கள் வவுனியா மாவட்ட மக்களுக்குக்கிடைக்கவில்லை. பருவமழை பொய்த் ததால் குளங்களில் மீன்குஞ்சு களை விடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மீன் இனப் பெருக்கம் குறைவடைந்துள்ளது. இந்த நிலையில் பிடிக்கப்படும் மீன்களில் பெரும்பாலானவை இடைத் தரகர்களால் இலாபமீட்டும் நோக்கில் அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த ஆண்டாவது இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கமக்கார அமைப்பினர், மீன்பிடி அமைப்புக்கள் என்பன முன்வர வேண்டும் -என்றார். (க-402)

## அட்டமஸ்கட தேரருக்கு பிணை அனுமதி

வவுனியா, ஜன.3

வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தேரருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி மேற்படி சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவன் ஒருவன் தெரிவித்த முறைப்பாட்டின் பிரகாரம் அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தின் காப்பாளரும் விகாராதிபதியுமான கல்யாண திஸ்ஸ தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.


இந்த நிலையில் கடந்த 31 ஆம் திகதி வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் தேரருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரின் அறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபர் பிணை வழங்குவதற்கு ஆட்சேபம் இல்லை எனத் தெரிவித்ததை அடுத்து ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் சந்தேகநபரான தேரர் விடுதலை செய்யப்பட்டார். (க-402)

# இடரை ஏற்படுத்துகின்றது வெட்டி வீழ்த்தப்பட்ட மரம்

வவுனியா, ஜன.3

வவுனியா பசார் பகுதியில் வெட்டி வீழ்த்தப்பட்ட பெரிய மரம் ஒன்று அகற்றப்படாத நிலையில் காணப்படுகின்றம். இதனால் பலரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



வவுனியா பசார் பகுதியில் 150 வருடங்கள் பழைமை வாய்ந்த 'வாகை மரம்' வீதித் திருத்த வேலைகளின் பொருட்டு வெட்டி வீழ்த்தப்பட்டது.

ஆனால் வெட்டப்பட்ட இந்த மரத்தின் பகுதிகள் அகற்றப்படாத நிலையில் அங்கேயே காணப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதிக்குச் செல்லும் மக்களும், இந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்களும் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த மரம் வீழ்ந்து கிடக்கின்ற இடத்தில் இரவு வேளைகளில் போதிய வெளிச்சமும் இல்லாததாலும் அபாய எச்சரிக் கையை வெளிப்படுத்தும் அடையாளங்கள் அமைக்கப்படாததாலும் இந்தப் பகுதியால்செல்பவர்கள் இந்த மரத்தின் மீது மோதி விழவேண்டிய நிலையில் உள்ளனர். எனவே இனியும் தாமதிக்காது இந்த மரத்தின் பகுதிகளை அப்புறப்படுத்துமாறு பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-421)

## எம்மையும் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் உள்வாங்குக

*வன்னி ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை*

கிளிநொச்சி, ஜன.3

இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கென ஆசிரியர்களை உள்வாங்கும்போது தம்மையும் கவனத்தில் கொள்ளுமாறு வன்னிப் பிரதேச ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்குப் புதிய ஆசிரிய மாணவர்களை உள்ளீர்ப்பதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுகளும் நடைபெறவுள்ளதாக அறிவித்தல்கள் வெளிவந்துள்ளன.

"_"

**நிரந்தர நியமனம் கிடைத்து மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்தவர்களே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இணைவதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற விதி காணப்படுகிறது**

ஆனால் நிரந்தர நியமனம் கிடைத்து மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்தவர்களே ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இணைவதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற விதி காணப்படுவதால் வன்னியில் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்களால் விண்ணப்பிக்க முடியவில்லை.

எனவே விசேட ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் தம்மையும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இணைத்துக் கொள்ளுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-426)


## மஹோற்சவ பெருவிழா

வவுனியா, ஜன.3

அருள்மிகு வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. தேர்த் திருவிழா 16 ஆம் திகதி வியாழக்கிழமையும், மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெற வுள்ளன.

இந்த மஹோற்சவப் பெருவிழாவில் தினமும் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவ, மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. தினமும் பகல் வேளையில் அன்னதானம் வழங்கப்படவுள்ளதாகவும் ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (க-402)

## வவுனியா கிராமங்களில் இறப்பர் பயிர்ச் செய்கை



வவுனியாவில் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்த இறப்பர் செய்கை வவுனியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆசிகுளம், கல்மடு, திருநாவல்குளம், ஓமந்தை ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.மணிவண்ணன் மேலும் தெரிவிக்கையில், வவுனியா பிரதேச செயலகத்துக்கு வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் 8 ஆயிரம் இறப்பர் மரக்கன்றுகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதுவரையில் 6 ஆயிரம் இறப்பர் மரக்கன்றுகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் முதல் தடவையாக இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படுவதால் இதில் மக் கள் அதிக ஆர்வம் காட்டவில்லை. சிலர் நீர்ப் பிரச்சினை ஏற்படுமெனவும் தெரிவிக்கின்றனர். ஆனால் தூவல் நீர்ப்பாசனத்தின் மூலமாகவும் இறப்பர் செய்கையை மேற்கொள்ள முடியும் -என்றார். (க)



வவுனியாக் குளங்களில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு வழங்கவென 100 வள்ளங்கள் வவுனியா நீர்வள அபிவிருத்தி அதிகார சபை அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. (க-402)


## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**மரியான் அருளப்பு**

(முன்னாள் பாதுகாவலர், யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி)

அன்னையின் மடியில்
18.05.1925

இறைவன் அடியில்
02.12.2013

அரசடி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், "அலன் மகால்" இல.28, செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் அருளப்பு அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து ஓடோடிவந்து உடனிருந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், யாழ். மாவட்டத்திற்குட்பட்ட இலங்கை வங்கியின் மாவட்டக் காரியாலயம் மற்றும் அனைத்துக் கிளைகளைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கும், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர், கௌரவ உறுப்பினர்கள், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைநகல் மூலம் துயர் பகிர்ந்துகொண்டவர்களுக்கும், இரங்கற் திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகளாருக்கும், ஏனைய அருட் தந்தையர்கள் - அருட் சகோதரிகள் ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது தந்தையின் 33 ஆவது நினைவு நாளாகிய இன்று (03.01.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து ஆலய மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது ஞாபக சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் யாருக்காவது அழைப்பு விட தவறியிருந்தால் பெருமனத்துடன் மன்னித்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

"அலன் மகால்"
இல.28, செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.
தொ.பே. 021 224 0490

குடும்பத்தினர்
மகன்: அருளப்பு வில்லியம் ஜேசுதாசன்
(ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்,
உறுப்பினர், வலிகாமம் தெற்கு
பிரதேசசபை, சுன்னாகம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரசபையின் 'பட்ஜெட்' நிறைவேற்றம்

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் நால்வர் வெளிநடப்பு

அம்பாறை.ஜன.3

கல்முனை மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் செவ்வாய்க் கிழமை நிறைவேற்றப் பட்டது.




கல்முனை மாநகரசபை மேயர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பரால் 31 ஆம் திகதி வரவு-செலவுத் திட்டச் சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வரவு-செலவுத் திட்டத்தைப் புறக்கணிப்பதுடன், எதிர்ப்பதாகவும் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு உறுப்பினர்களும், வரவு-செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படு முன்னரே சபையை விட்டும்வெளியேறிச்சென்றனர்.

வரவு-செலவுத் திட்ட அமர்வுக்காக மேயர், பிரதி மேயர் மற்றும் உறுப்பினர்கள் வருகை தந்த போது மாநகரசபை வாசலில், வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் சுலோகங்களைக் கொண்ட கொடிகளை ஏந்திய வாறு பெருந்தொகையானோர் திரண்டு நின்று வர வேற்றனர்.

நிலுவையான சோலை வரிச் சுமையை அகற்றிய வரவு-செலவுத்திட்டம் வெற்றி பெற வாழ்த்துகின்றோம்; 36 வீதத்தை அபிவிருத்திக்காக ஒதுக்கிச் சரித்திரம் படைத்த வரவு-செலவுத் திட்டம் இது. என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பல்வேறு அமைப்புக்கள் சார்பில் மக்கள் திரண்டு இந்த வரவேற்பை அளித்தனர்.

மேலும் முன்னர் மாநகர சபையின் முதல்வராயிருந்தவரான, பிரதி முதல்வர் முஹம்மட் சிராஸ் மீரா சாகிப்பும் சபை அமர்வுக்கு வருகை தந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்தும், பாராட்டியும் பேசினார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எச்.எம்.நபார் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து உரை யாற்றினாரெனினும், வாக் கெடுப்பின் போது சபை யிலிருக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நால்வர் சார்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் உரையாற்றி விட்டு சபையை விட்டு நால்வரும் வெளிநடப்பு செய்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச சபை தரமுயர்த்தல் விடயத்தில் முஸ் லிம் காங்கிரசும், முதல்வர் நிஸாம் காரியப்பரும் நடந்து கொள்ளும் எதிர்ப்பு நிலை தொடர்பாகவும், தமது தமிழ்ப் பிரதேச மக்களின் சில கோரிக்கைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளமை தொடர்பாகவும் உறுப்பினர் அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டிப் பேசிய பின்னரே நால்வரும் வெளி நடப்புச் செய்தனர்.

எனினும் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஏ. பஷீர் பிரேரிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் சீ.எம். முபீத் ஆமோதித்தார்.

பின்னர் சபையிலிருந்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் (மேயர் உட்பட) பதினொரு பேரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் மூவரும் ஆதரவளித்ததன் மூலம் ஏகமனதாக வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றினர்.

வரவு-செலவுத் திட்ட வரைவின் படி எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 172 மில்லியன் எனவும், எதிர்பார்க்கப்படும் செலவீனம் 169 மில்லியன் எனவும், மேலதிக வருமானம் 34 இலட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப் பட்டது. (வ-30)

# சட்டவிரோத வியாபாரம்; 446 கடைகள் சோதனை

மட்டக்களப்பு, ஜன.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் 446 வர்த்தக நிலையங்களில் சட்டரீதியாக வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெறுகின்றனவா என்பது குறித்து சோதனை மேற்கொள்ளப் பட்டதாக அள வீட்டு அலகுகள் மற்றும் நிய மங்கள் சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.


கடந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப்ப குதியில் மட்டக்களப்பு மாவட் டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்தச் சோதனை மேற் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரின் பணிப்புரையின் கீழ், அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்கள் சேவை கள் திணைக்களம் இந்தச் சோதனையை மேற் கொண் டதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், 169 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 2 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முத்திரையிடப்படாத நிறுத்தல் மற்றும் அளத்தல் கருவிகளை பாவித்தமை, நிறை குறைவாக உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை, எரி பொருள் நிரப்பு நிலையங்களில் முறைகேடான முறையில் கருவிகளை பாவித்தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களின் அடிப்படையிலேயே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ்)

# யானை தாக்கி ஒருவர் சாவு



மட்டக்களப்பு, ஜன.3

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட உன்னிச்சைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

மீனவர் ஒருவரே காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழந்தவராவார்.

இராசேந்திரம் முத்துலிங்கம் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இது தொடர்பில் விரிவான விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

# கல்முனை மாட்டிறைச்சிக் கடைகளுக்கு விசேட முறையில் அனுமதிப் பத்திரம்

அம்பாறை, ஜன.3

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில் இயங்கி வருகின்ற மாட்டிறைச்சிக் கடைகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் விசேட நடைமுறைகடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பரால் அறிமுகம் செயப்பட்டுள்ள இவ் விசேட நடைமுறைத் திட்டத்தின் கீழ் மாநகர சபைக்கு முதல் நாள் வருமானமாக 24 இலட்சம் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

கல்முனை, கல்முனைக்குடி,மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டதன் மூலமே இத் தொகை வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

கல்முனை மாநகர சபை வரலாற்றில் மாட்டிறைச்சிக் கடைகள் மூலம்வருடத்தின்முதல் ஒரே நாளில் இவ்வாறான கூடிய தொகையொன்று மொத்த வருமானமாகக் கிடைத்தமை இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய நடைமுறை நேற்று முன்தினம் புதன்கிழமை முதல்வர் நிசாம் காரியப்பர் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்களிடம் இருந்து நிலுவையுடன் புதிய கட்டணப் பணம் அறவிடப்பட்டு அதே இடத்தில் அவர்களுக்கான அனுமதிப் பத்திரம் கையளிக்கப்பட்டது. (வ்)

**லொறி விற்பனைக்கு**

இசுசு - 250,43 - XXXX,
அலுமினியம் Full body
லொறி விற்ப னைக்கு உண்டு.
தொ.பே: 077 229 0548/077 781 3913

**வீடும் கடையும் வாடகைக்கு**

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில்
இல.59இல் 3 அறைகொண்ட வீடும்,
வீட்டோடு இணைந்த கடையும்
வாட கைக்குண்டு. வீடும், கடையும்
தனியாக வும், சேர்த்தும் கொடுக்கப்படும்.
வீட்டின் முன்பகுதியையும்
கடையாகப் பிரயோகிக்கலாம்.
தொ.பே:077 372 4103/077 624 5051

**விற்பனைக்கு**

புன்னாலைக்கட்டுவன் வடக்கு
திடர்புலத்தில் கடைக் கட்டடத்துடன்
2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே.076 609 4999/ 077 824 7330
(41931)(45.3.6)

**வீடு வாடகைக்கு**

ராணிவீதி, நல்லூரில் சகல வசதி
களையும் கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத் தக்கது.
தொ.பே: 077 757 2232

**கோட்டக் கல்விப் பணிப்பாளர் (மன்னார், நானாட்டான்)**
**பதவி வெற்றிடம் நிரப்புதல்**

வட மாகாணத்தின் மன்னார் வலயத்தின் மன்னார்,
நானாட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இதற்கு ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லையுடைய இலங்கை கல்வி நிர்வாக சேவை III (பொது ஆளணி) மற்றும் வட மாகாண பாடசாலையைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை I,2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு இ.க.நி.சே.III இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.அ.சே I,2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் ஜனவரி 15ஆந் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வ.செல்வராசா,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,வடமாகாணம்.
(சி/10897)(7.6.3)

**இடமாற்றம்**

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கோர் அறிவித்தல்

யாழ்ப்பாணம்-பண்ணை சந்தையில்
இல-05 இல் இயங்கி வந்த
ஆட்டிறைச்சிக்கடை 01.01.2014
புதன்கிழமை முதல்
ஆனைக் கோட்டை கூழாவடி,
அரசடிச் சந்திக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை
தங்களுக்கு மிக்க மகிழ்ச் சியுடன் அறியத் தருகின்றோம்.

077 669 4017/
077 929 5926
(41930)(4.6.3)
உரிமையாளர்
அன்னராசா(கிளி)

**வட இலங்கைச் சங்கீத சபையினால் நடத்தப்படும் கலை வகுப்புக்கள்**

வட இலங்கைச் சங்கீத சபையினால் ஜனவரி மாதம் முதல் தரம் 1 தொடக்கம் தரம் 6 வரை சங்கீதம், வாத்தியங்கள், பரதம், பண்ணிசை, மிருதங்கம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு குறைந்த கட்டணத்துடன் வகுப்புக்கள் மருதனார்மடத்தில் உள்ள வட இலங்கைச் சங்கீத சபையின் கலை கலாசார மண்டபத்தில் நடத்த இருப்பதால் பங்குபற்ற விரும்பும் பயிலுனர்கள் அதற்குரிய படிவத்தை காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி 06.01.2014ஆந் திகதிக்கு முன் ஒப்படைக்கவும்.

செயலாளர்
(சி/10916)(7.6.3)

**Walk in Interview**

பின்வரும் வேலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) குடிசார் தொழில்நுட்பவியலாளர்கள்
2) படவரைஞர்கள்
3) வேலை மேற்பார்வையாளர்கள்
4) குடிசார் பொறியியல் ஆய்வு கூட உதவியாளர்

பின்வரும் தகவல்கள் விரும்பத்தக்கது
(a) நீர்பாசன வேலை அனுபவம்
(b) குடிசார் பொறியியல் அனுபவம்

வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
கொடுப்பனவுகள்: பேசித்தீர்மானிக்கலாம்
சுயவிவரங்களுடன் சமுகம் தரவும்

LNR CONSTRUCTIONS (PVT) LTD
37, VIKNESWARA ROAD, NELLIADY.
T.P: 021 226 1000, 077 728 6008
(43040)
(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்கிறது சுற்றிவளைப்பு; 365 பேர் கைது



கொழும்பு.ஜன.3
நாடு முழுவதும் கடந்த 24 மணித் தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 365 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 119 பேரும், ஓட்டோ சாரதிகள் 215 பேரும் இவர்களில் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த 24ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுவரும் சுற்றிவளைப்புகளில், மதுபோதையில் வாகனம் செலுத்திய 2 ஆயிரத்து 139 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டுள்ளவர்களில் ஆயிரத்து 84 பேர் மதுபோதையுடன் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, மதுபோதையுடன் பயணிகள் போக்குவரத்து பஸ்களை செலுத்திய எட்டு சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-சி)


## பஸ்-டிப்பர் மோதியதில் 7 பெண்கள் காயம்

கொழும்பு.ஜன.3
பியகம - கடுவல பிரதான வீதியில் சியம்பலாபே பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஆடைத் தொழிற்சாலை பெண் ஊழியர்கள் 7 பேர் காயமடைந்துள்ளனர்.
பியகம வர்த்தக வலய தொழிற்சாலை ஊழியர்கள் சிலரை ஏற்றிச் சென்ற பஸ் நேற்றுக் காலை டிப்பர் வாகனமொன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தில் காயமடைந்த ஆடைத் தொழிற்சாலை பெண் ஊழியர்கள் 7 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# இராஜதந்திர, தூதரக மட்டங்களில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது நாடு

### ஐ.தே.க. தலைமைத்துவ சபைத் தலைவர் கரு தெரிவிப்பு

கொழும்பு.ஜன.3
இலங்கை இராஜதந்திர மற்றும் தூதரக மட்டத்தில் பொருத்தமானவர்களைப் பதவிக்கு அமர்த்தாத காரணத்தால் இரு துறைகளும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றன. அரசு, ஊரிலுள்ள சண்டியர்களைப் போலச் செயற்பட்டு சர்வதேசத்துடன் தொடர்புகளைப் பேண முடியாது.
சர்வதேச தரத்துக்குக்கமையவே செயற்பட வேண்டும் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் தலைமைத்துவ சபைத் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.
மேல் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளருக்குப் பலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதால் முதலமைச்சர் வேட்பாளராக யாரை நியமிப்பது? முதலமைச்சர் வேட்பாளரை அறிவிப்பதா? இல்லையா? என்பது குறித்து தலைமைத்துவ சபை ஆராய்ந்து வருகின்றது என்றும் தெரிவித்தார்.
ஐ.தே.க. தலைமையகமான சிறி கொத்தவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-
நாட்டு மக்கள் மிகவும் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்ட வருடம் 2013ஆம் ஆண்டுதான். அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பால் மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர். மூன்று வேளையும் உணவு உண்ணமுடியாத பல்லாயிரக்கணக்கான மக்கள்



இங் குள்ளனர். அமெரிக்கா, பிரிட்டனை விட இலங்கையில் சில உணவுப் பொருள்களின் விலை அதிகம்.
சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள், சூதாட்ட நிலையம் உள்ளிட்ட பல விடயங்கள் நாட்டில் மலிந்து போயுள்ளன. இவற்றின் பின்னணியில் அரசின் அதிகாரம் மிக்கவர்களே இருக்கின்றனர். கசினோக்களுக்கு இடமளித்தால் துப்பாக்கி, விபசாரக் கலாசாரம்தான் நாட்டில் உருவாகும்.

**சவால்களை எதிர்கொள்ள புதிய பொறிமுறை**

2014 ஆம் ஆண்டில் புதிய மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே, இந்த ஆண்டில் எமக்கெதிரான அனைத்துச் சவால்களையும் எதிர்கொள்ளப் புதிய பொறிமுறையொன்றை வகுத்துச் செயற்படுகின்றோம்.

**ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார்**

இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் எனத் தகவல்களின் மூலம் அறிய முடிகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு நாம் தயார். இருப்பினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதே எமது நோக்கமாகும் - என்றார். (ஓ-சி)



லங்கா பெற்றோல் 92 ஒக்டேன் நேற்றுப் புதன்கிழமை முதல் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் லங்கா பெற்றோல் 90 ஒக்டேன் சந்தையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமையுடன் நீக்கப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பெற்றோலியத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுற்றிவளைப்புகளால் அரசுக்கு 470 பில்லியன் ரூபா வருமானம்

### சுங்கப்பிரிவினர் தகவல்

கடந்த வருடம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புக்களினால் அரசுக்கு 470 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இந்த நடவடிக்கைகளின் போது கடந்த வருடம் மாத்திரம் 15 கோடி ரூபா பெறுமதியான 25 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டதாகவும் சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.
சட்டவிரோதமான முறையில் நாட்டிலிருந்து தங்கம் கொண்டு செல்லப்பட்ட 290 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குற்றமிழைத்தவர்களிடம் இருந்து 54 இலட்சம் ரூபா பணம் அபராதமாக அறவிடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.
சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் பொருள்கள், விலை மனுக் கோரல் மூலம் விற்பனை செய்யப்பட்டு, அரசுக்கு 70 கோடி ரூபா பணம் செலுத்தப் பட்டுள்ளது.
நாட்டின் கலாசாரம் மற்றும் பல் வகைமையை சீர்குலைக்கும் வகையில் வெண் சந்தனம், வல்லபட்டை, புராதன பொருள்கள், உயிரினங்கள் கடத்திக் கொண்டுசெல்லப்பட்ட 35 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
அத்துடன், இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் [illegible] கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-சி)

நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி!
O/L பின்
School of Nursing IVA
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி
இம்முறை க.பொ.த சா/த
மாணவ மாணவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும்.
பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.



க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்
இலவசமாக சீருடையும், தாதியர் பாடநெறிக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியும், தூரப் பிரதேச மாணவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு.
After A/L
Medical Laboratory Technology Assistant
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி
நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்குத் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.
6 மாத நிறுவனத்தினுடனான பயிற்சிக்குப் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.



மருந்தாளர் பாடநெறி
தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையிலே மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள தகுந்த கல்வித் தகைமை இல்லாதவர்களுக்கு தொழிலுக்கு ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.
அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.
நடாத்துபவர் ( வைத்தியர் ராஜவேலாயுதம்
ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை
யாழ்ப்பாணம்: இல 323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-8722350, 0718-722 353
மட்டக்களப்பு: இல. 61/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352, 0718-722 353
வவுனியா: இல. 36/1, 88/1, 2ம். குறுக்கு வீதி, வவுனியா. தொ.பே. 0718-722 351, 0718-722 353
அனுராதபுரம்: இல 396/3, சுவசெவன வைத்தியசாலை, நீதிமன்ற பகுதி, கடதோனாஹ அனுராதபுரம். தொ.பே. 0718-722 355
பதுளை: இல 20/1/1, ஹுணுகொடுவ வீதி, பதுளை. தொ.பே.0718-722 354
கண்டி: சிங்கர் நிறுவனம், டி.எஸ். சேனாநாயக்க ,வீதி, கண்டி. தொ.பே. 0711-980 980, 0710-336 329
கம்பஹா: 77/1/4 யக்கல வீதி கம்பஹா. தொ.பே. 0718-657 775
பாணந்துரை: இல 36, சுவமேதுர வைத்தியசாலை, சுசந்த மாவதை, பானதுரை. தொ.பே. 0710-336 332
தங்கல்ல: ஆரோக்யா வைத்தியசாலை, முஹுது மாவத்தை, சம்பத் வங்கி அருகில், தங்கல்ல. தொ.பே. 0710-336 334
இரத்தினபுரி: இல 85, உள் சுற்று வீதி, இரத்தினபுரி. தொ.பே. 0715-980 980
Registered Education Institute in the republic of Sri Lanka
பிரதான காரியாலயம்
அய்வா
சர்வதேச தாதியர் பாடசாலை
இல 85, உள் சுற்று வீதி, லிபர்டி கட்டிடம், இரத்தினபுரி.
NTS P.V. 91973
ரூ 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவு செய்த கிளையை குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை அருகிலுள்ள எமது கிளைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
தொ.பே : 0454 980 980
0715 980 980 Fax : 045 2233000
E-mail : manojhewaduwa@yahoo.com
கையடக்கத் தொலைபேசி குறுந்தகவல் மூலம் விண்ணப்பத்தைப் பெறலாம். 0710 255 255
www.nursingiva.com
இல. P 07/0096 கீழ் தொழில் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சபையால் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை; அரசின் நிலைப்பாடு தான் என்ன.....?

இந்த நாட்டில்–எமது இலங்கையில்–கல்வித் துறை அரசியல் சூதாட்டத்துக்குள் ஆளாக்கப்பட்டுள்ளதா? கல்விசார் புலமையாளர்கள், புத்திஜீவிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என்று பல்வேறு தரப்பினர்களிடமும் இந்த வினா நெடிது உயர்ந்து நிற்கிறது.

இன்னமும் இரண்டு ஆண்டுகளில், 2016 ஆம் ஆண்டு தொடக்கம், ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்படும் என்று ஊடகவியலாளர்கள் மாநாடு ஒன்றில் (2013–12–20 ஆம் திகதியன்று) கல்வி அமைச்சர் அறிவித்திருந்தார்.

ஆனால், புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்படமாட்டாது. மாற்றங்கள் மட்டுமே கொண்டு வரப்படும் என்று இப்போது–பத்து நாள்களில் (2013–12–30 இல்) தடம் மாறியுள்ளார் கல்வி அமைச்சர். தாம் தெரிவித்த தகவலை ஊடகவியலாளர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று பழியை அவர்கள் முதுகில் சுமத்திவிட்டுள்ளார்.

ஆனால், ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தம்; இனிமேல் இல்லை என்ற தடுமாற்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்டதற்குக் கல்வி அமைச்சரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

நாட்டின் எதிர்காலக் கல்வி மாற்றம் ஒன்று குறித்து, ஊடகவியலாளர் மாநாடு நடத்துவதற்கு முன்னர், அமைச்சர் அவையிடம் திட்டத்தைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

அவ்வாறு செய்திருக்காவிடில்–

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை அவர் உதாசீனம் செய்துள்ளார் என்பது அம்பலமாகிறது.

நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் முதலாம் தவணைக்காக நேற்று ஆரம்பமாகிய நிலையில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சை குறித்த "குளறுபடி" பெற்றோர் மத்தியில் பெரும் குழப்பத்தை உண்டாக்கி உள்ளது.

ஒருவன் தானே பொல்லைக் கொடுத்து அடிவாங்கினான் என்று, கிராமப் புறங்களில் பேச்சு வழக்கில் அடிக்கடி சம்பந்தப்பட்டவர்கள் குறித்து சிலேடை மொழி பயன்படுத்தப்படுவது உண்டு. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்படும் என்றும், இல்லை இல்லை தொடர்ந்து நடத்தப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்திருப்பது அந்தச் சிலேடை மொழியையே ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறது.

இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு எதுவும் இன்றி, வசதி குறைந்தவர்களின் பிள்ளைகளின் கல்வி நிலையை உயர்த்துவதற்காக அப் போதைய கல்வி அமைச்சர் சி.டபிள்யு. கன்னங்கரா வினால் அறிமுகப் படுத்தப்பட்ட இலவசக் கல்வித் திட்டத் தின் ஓர் அங்கமே ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை.

அந்தப் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்கள் அரச மத்திய மகா வித்தியாலயங்களின் விடுதிகளில் தங்கியிருந்து பயின்று பின்னர் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று உயர் அரச பதவிகளை வகித்தமை அன்றைய கல்விப் பாரம்பரியமாக மிளிர்ந்தது.

கன்னங்கராவின் தீர்க்க தரிசனத்தினால் பண வசதி குறைந்திருந்தாலும் கல்வி அறிவைப் பெற்று சமூகத்தில் பல துறைகளில் முன்னணி வகித்தவர்கள் ஒரு புறம் இருக்க, நகரங்களைப் போலவே கிராமங்களும்–கிராமத்தவர்களும்–போட்டி போட்டு முன்னேறினர். இவை மாகாண, பிரதேச வேறுபாடு இன்றி, மொத்தமாக, நாடு முழுவதிலும் கல்வி ஊடான பல்துறை வளர்ச்சிக்கு வித்திட்டன.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தொடர்பாக அமைச்சரின்–அரசின்–முன்னைய முடிவு குறித்து, மனித உரிமை அமைப்புகள் சில ஆதரவு தெரிவித்திருந்தன. அதேவேளை ஆசிரியர் சங்கங்கள், ஹெல உறுமய போன்றவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இது விவகாரம் எதிர்காலச் சந்ததியினரின் நலன்களைப் பாதிப்புறச் செய்யும் என்பது மிக ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியதாகும். நான் சரி, நீ பிழை என்று ஒருவர் மேல் மற்றவர் விரல் சுட்டுவதை விடுத்து, சேறு அள்ளி வீசுவதைத் தவிர்த்து, மோசடி கலக்காத சர்வஜன வாக்கெடுப்பு (Plebiscite) அல்லது மக்கள் கருத்தை அறிவதற்கான விசேட தில்லு முல்லுகள் அற்ற கருத்துக் கணிப்பு (Referendum) ஒன்றை இவ்விடயம் குறித்து நடத்த வேண்டும்.

எதுவானாலும், அரசு தனது அதிகாரத் தனத்தை ஒட்ட நறுக்கிக் கொண்டு செயற்பட வேண்டும். அனைத்துலக கண்காணிப்பாளர்களை அழைத்து சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும். சாத்தியமா? நடக்குமா?

# விழிப்பாக இருக்க வேண்டியநேரம்

கந்தவனம் கோணேஸ்வரன்

நத்தாருக்கு முந்தைய தினத்தன்று வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுகூடி பல வாதப் பிரதி வாதங்களின்பின் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றப் போவதில்லை என்பது முதலாவதாகும்.

மற்றையது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக் குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வரவு - செலவுத் திட்டங்கள் தோல்வியடைவதற்குக் காரணமாயிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி பிரதி நிதிகளின் மீது கடுமையான ஒழுக் காற்று நடவடிக்கை எடுப்பது என்பது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச் சுக்குச் செல்ல வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படலாம். அரசுடன் பேசாமல் இவர்கள் எப்படி பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறார்கள் என்ற நியாயமான கேள்வியும் எழலாம்.

ஆயினும் தெரிவுக்குழு நிதானமிழந்து நடந்து கொண்டதால் பேச்சு இடைநடுவில் முறிவடைய நேர்ந்தது. தெரிவுக்குழுவோ அல்லது அரசோ தம்மால் வழங்கப்பட்ட வாக் குறுதிகளுக்கோ. உடன்பாடுகளுக்கோ இசைவாகச் செயற்பட மறுத்ததால் இவர்களுடன் பேசி வீணே காலங் கடத்துவதால் பயனில்லை என்று பத்தொன்பது சுற்றுப் பேச்சுகளின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிலிருந்து விலகிக்கொண்டது. இந்த முடிவைத் தமிழ்மக்களும் வரவேற்றிருந்தனர்.

### தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றும் அரச தலைவர்கள்

இலங்கை சுதந்திரமடைந்த காலந் தொட்டு இலங்கையின் அரசதலைவர்கள் அனைவரும் தமிழர்களை ஏமாற்றியே வந்திருக்கின்றனர். நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் அடுத்த தேர்தலில் கிடைக்கக்கூடிய வாக்கைப் பற்றிய கவலையே எல்லாத் தலைவர்களுக்கும் இருந்திருக்கிறது. இன்றைய ஜனாதிபதியும் இதற்கு விதி விலக்கானவர் அல்லர்.

போருக்குப் பின்பாவது தமிழர்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதிக்கோ. அவரைச் சார்ந்தவர்களுக்கோ இருக்கவில்லை. மாறாகத் தமிழ்மக்களின் மன. இன உணர்வுகளைத் தகர்ப்பதில்தான் அவர்கள் தமது ஆற்றலைச் செலவிட்டு வருகிறார்கள். தமிழர்கள் உரிமைக்காகப் போராடும் இனமாக அல்லாமல், தோல்விகண்ட இனமாக அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால், தமிழர்கள் சோர்ந்து போகவில்லை. வழிமுறைகளை மாற்றி வைரநெஞ்சத்தவர்களாகத் தொடர்ந்தும் தமது உரிமைக்காகப் போராடி வருகிறார்கள். தமிழர்களின் போராட்ட முறைகளும், உலக நாடுகளின் அழுத்தங்களும் அரசைப் பேசும்படி தூண்டின. பேசாமல் விடுவது பாதகமாகலாம் என்ற அச்சம் அரசுக்கு எழுந்தது. திறந்த மனதுடன் பேசுவோம் வாருங்கள் என்றார்கள். இரு வாரங்களுக்கு ஒருதடவை நிகழும் பேச்சில் முதல் அரைவாசிநேரம் அன்றாடப் பிரச்சினைகள் பற்றியும், அடுத்த அரைவாசி நேரம் தீர்வு பற்றியும் பேசலாம் வாருங்கள் என்றார்கள். தமிழ்ப்பிரதிநிதிகளும் அரசின் அழைப்பை மதித்துச் சென்றார்கள். பத்தொன்பது சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றும் தமிழர் நிலையில் இம்மியளவுகூட முன்னேற்றம் காணப்படவில்லை.

அரசு மனந் திருந்தவில்லை. மாறாகக் கபடத்தனங்களையே வளர்த்துக் கொண்டதுடன், ஒற்றுமை, அபிவிருத்தி, வடமாகாணசபைத் தேர்தல் என்ற வகையில் போலிப் பரப்புரைகளையும் செய்யத் தொடங்கியது. இவைகூட சர்வதேச நெருக்கடிகளின் காரணமாகத்தான் இடம்பெற்றன.

### சமத்துவத்தின் அடிப்படையிலதான் ஒற்றுமை வரவேண்டும்

அரசதரப்பினரின் ஒற்றுமை என்ற வார்த்தையைத் தமிழர்கள் எவருமே காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஒற்றுமையென்பது சமத்துவத்தின் அடிப்படையில்தான் எழவேண்டும் என்பது தமிழர்களின் நிலைப்பாடு. ஆண்டான் - அடிமை முறையில் ஏற்படும் தொடர்பால் ஒற்றுமை தோன்றாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்கள்.

வடக்குக்கிழக்கில் இடம்பெற்ற அபிவிருத்தியைத் தமிழ்மக்கள் தங்களுக்கான அபிவிருத்தியாக ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்களை அடிமைகள் போல் நடத்திக்கொண்டு தெருக்களை அகலப் படுத்துவதாலும், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதாலும் யாருக்கும் நன்மை இல்லை என்பதுதான் அவர்களது வாதம்.

இன்னொரு வகையில் பார்த்தால் வீதிஅகலிப்பு. மின்சாரஇணைப்பு என்பவை உலக ஒழுங்குகளால் ஏற்படும் மாற்றங்களின் விளைவு. தமிழர்களின் அழிவை நிவர்த்தி செய்கிறோம்; உதவி செய்யுங்கள் என்று உலக நாடுகளிடமிருந்துப் பெற்றுக்கொண்ட நன்கொடைகளின் வெளிப்பாடு; இதில் அரசின் சிறப்பான கரிசனைகள் எவையுங்கிடையாது.

### பொறியில் இருந்து தப்ப எடுக்கும் முயற்சிகள்

வடமாகாணசபைத் தேர்தலும் அரசு நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக நடத்தப்பட்ட ஒன்றேயன்றி தமிழர்களின் ஜனநாயகத்தை மீள்விப்பதற்கான திட்டமன்று. உண்மையில் தமிழர்களின் ஜனநாயகம் மீள்விக்கப்படுவதில் அரசுக்கு அக்கறையிருக்குமானால் வடமாகாணசபை இயக்கத்துக்கு அரசே இடையூறு செய்துகொண்டிருக்காது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தைவிட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் முழு மூச்சுடன் நடைபெறுகின்றன என உலகத்தை நம்ப வைக்க வேண்டும்; இதன்மூலம் காலங்கடத்த வேண்டும் என்ற எண்ணமே அரசிடம் மேலோங்கி நிற்கிறது. எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் காத்திருக்கும் பொறியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள அரசு எடுக்கும் முயற்சிகளே இவை.

ஜனாதிபதியின் அழைப்பையேற்றுத் தமிழர்கள் பேச்சுக்குப் போவார்களேயானால், நாங்கள் இருசாராரும் அன்னியோன்னியமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம்; இரண்டொரு மாதங்களில் அனைத்தும் பூர்த்தியாகி, நேர்த்தியான தீர்வை நடைமுறைப்படுத்தி விடுவோம், அதற்கு அவகாசம் தாருங்கள் என்று அரசு சர்வதேசத்திடம் கேட்பதற்கு வசதியாக இருக்கும். இதற்கு வழிவகுப்போமானால் நாம் அரசை நம்பி அழிந்து போகின்றவர்களாவோம்.

### உள்ளூராட்சி தலைமைகளின் தில்லு முல்லு

உள்ளூராட்சிச் சபைகளின் வரவு - செலவுத்திட்ட அறிக்கைகள் தோல்வியடைவதற்குக் காரணமாயிருந்த உள்ளூராட்சிப் பிரதிநிதிகள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதென்ற தீர்மானம் ஆழமற்ற ஒரு முடிவாகவே தென்படுகிறது. இந்த முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்துத் தலைவர்களும் நேர்மையானவர்கள் என்ற கருதுகோளின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகவே தெரிகிறது. ஆனால், உண்மை அதுவன்று. அனேகமான உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் வாக்களித்த மக்களாலேயே மோசமாக விமர்சிக்கப்படுமளவுக்குத் தாழ்ந்து போயிருக்கிறார்கள். பதவியேற்கும் முன்னர் அவர்களது வாழ்க்கைத்தரம் ஒரு நிலையிலும், பதவியேற்றுச் சில மாதங்களின் பின்னர் அவர்களின் வாழ்க்கைத் தரம் மிகச்சிறப்பான நிலையிலும் இருப்பதை மக்கள் அனுபவரீதியாகக் காண்கிறார்கள்.

சபைக்கூட்டத்தின்போது தலைவரின் முறைகேடுகள் பற்றி யாராவது உறுப்பினர்கள் பேசத் தொடங்கினால் உடனேயே சபை ஒத்திவைக்கப்படுகிறது. உங்களால் முடிந்ததைப் பாருங்கள், நான் அப்படித்தான் நடப்பேன் என்று பகிரங்கமாகவும் துணிந்தும் கூற வல்லவர்களாக உள்ளூராட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள்.

உள்ளூராட்சித் தலைவர்கள் பற்றிய முறையீடுகள் எவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடத்துக்குக் கிடைக்கவில்லை என்று கூறமுடியாது. அத்தகைய முறைப்பாடுகள் சரிவரக் கவனிக்கப்படாது போயிருக்கலாம் என்பதுதான் நிதர்சனம். நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது முறைப்படியான நகர்வுகள் சார்ந்தது. தில்லுமுல்லுகளில் பட்டப்படிப்பை முடித்துவந்த ஊராட்சித் தலைவர்களுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தலையெடுக்கவிடாமல் தடுப்பதென்பது வெல்லம் சாப்பிடுவதுபோன்ற சாதாரண நிகழ்ச்சி.

இத்தகைய சிக்கல்களுக்கான காரணம் ஆழமானது. இப்போது அரசியலில் ஈடு படுபவர்களில் பலபேரிடம் சமுதாயப்பார்வை இல்லாது போய்விட்டது. எப்படியாவது பணம் சேர்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. 201[illegible] இற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நுழைந்த புதியவரவுகளில் விரல்விட்டு எண்ணக்கூடியோரைத் தவிர்த்து அனேகமானோர் இப்படித்தான் இருக்கிறார்கள். போர்க் காலத்திற்கூட தமிழர்களின் அவலங்களின்மேல் பணந் திரட்டியவர்களும், ஆளுங்கட்சிக்குப் பின்னால் சென்று தேச கீர்த்தி விருதுபெற்றவர்களும் புது வரவில் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு இனப்பற்றோ மொழிப் பற்றோ கிடையாது. கட்சிப்பற்றோ. கட்சி கொண்டிருக்கும் இலட்சியத்தின் மீதான பற்றோ கிடையாது. உயிருக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதை உத்தரவாதப்படுத்திக்கொண்டு அரசியலில் நுழைந்து தங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

தந்திரசாலிகள் உள்ளூராட்சித் தலைவர்களாகிவிட, கொள்கையும் இலட்சியப்பற்றும் கொண்டவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஜனநாயகத் தீர்ப்பின்படி செயற்பட வேண்டும் என்பதால் அடங்கிக்கிடக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டிய நேரமிது. எழுந்தமானத்தில், பதவி ஆசையில்தான் வரவு - செலவுத்திட்ட அறிக்கைகள் தோற்கடிக்கப்படுகின்றன என்று கூறிவிடுவது அறிவுடைமையாகாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச கட்சி போல் செயற்படமுடியாது. அவர்கள் வல்லமையும், செயற்பாடும் வேறு, எங்கள் வல்லமையும், நோக்கமும் வேறு. தமிழ்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலை இயக்கமாகத்தான் பார்க்கிறார்கள். ஒற்றுமையாகச் செயற்பட்டு, விடுதலையை நோக்கித் தங்களை அழைத்துச்செல்ல வேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது இருப்பு குறித்து தானே அஞ்சும் மஹிந்தர்



சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்: வீ.எஸ்.ரீ

ஜனாதிபதி மஹிந்த இந்த நாள்களில் எவர் குறித்து அதிகமாக அஞ்சுகிறார் என்ற கேள்விக்கு உடனடியாகவே எமது காதுகளில் விழும் பதில் சந்திரிகாவுக்கே அவர் அதிக அளவில் அஞ்சுகிறார் என்பதே ஆகும். சரி, ஏன் அவர் ஷிராணி பண்டாரநாயக்கா குறித்து அச்சப்படவில்லையா என்ற கேள்விக்கு 'அதுவும் உண்மைதான் ; ஆனால் மற்றெல்லோரையும் விட ஜனாதிபதி மஹிந்த மிக அதிகமாக அச்சப்படும் ஒருவர் உள்ளார்' என்றதொரு குரல் எதிரொலிக்கிறது. அது யாரென்றுதான் கூறுங்களேன்? என்ற கேள்விக்கு ஒரு விநாடிகூடத் தாமதமில்லாமல் பதில் வெளி வருகிறது. "அது வேறு யாருக்குமல்ல : தமக்குத் தாமே- மஹிந்தவுக்கே. மஹிந்த அச்சப்படுகிறார்" என்ற பதில் எந்தவிதத் தயக்கமுமின்றி உறுதியாக வெளிவருகிறது.

அது உண்மையிலும் உண்மை. ஸ்ரீபதி சூரியாராச்சியையும், மங்கள சமரவீரவையும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றிய வேளையிலேயே, மஹிந்த தனக்குத்தானே அஞ்சுகிறார் என்பது புரிந்தது. அவர்கள் இருவரையும் தனக்கு எதிரான தனது பிம்பமாகவே மஹிந்த கருதினார்.

**அரசில் இருந்து கொண்டே அரசை விமர்சிக்கும் போக்கு**

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், அரசு தரப்பில் இருந்துகொண்டே அரசை விமர்சிக்கும் ஒருவராக மஹிந்த தம்மை இனங்காட்டிக் கொண்டார். அந்த வேளையில் அமைச்சரவையில் விவாதிக்கப்படும் விடயங்களையும், மேற்கொள்ளப்படும் தீர்மானங்களையும், விமர்சிப்பது மட்டுமல்லாமல் மறுதினம் ஊடகங்களுக்கு அவை பற்றிய விவரங்களை வழங்குவதையும் மஹிந்த தமது ஒரு வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். இதனாலேயே சந்திரிகா அந்த வேளையில் மஹிந்தவை 'ரிப்போர்ட்டர்' என்ற விதத்தில் விமர்சித்து வந்ததுண்டு. சந்திரிகா எந்த அளவுக்கு இத்தகைய விதத்தில் மஹிந்தவை கேலி செய்த போதிலும், மஹிந்த தமது அந்தப் பழக்கத்தைக் கைவிடவே இல்லை. அரச தரப்புக்குள் தாம் ஒரு போராட்டக்காரர் என்று நிலை நிறுத்தினால் மட்டுமே ஊடகங் களின் பார்வையில் வீராதி வீர னாகத் தன்னை வெளிக்காட்டிக் கொள்ள இயலுமென மஹிந்த நம்பினார். அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானங்கள் குறித்து மட்டுமல்லாமல், தொழிலாளர் பிரகடனம் மற்றும் சந்திரிகாவின் இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பொதி குறித்தும் கூட மஹிந்த வெளிப்படையாகவே விமர் சித்து வந்தார். அது மட்டுமன்றி ஒரு சமயம் பொருள்களின் விலை உயர் வைக்கட்டுப்படுத்த நிதி அமைச்சின் செயலாளர் ஏ.எஸ்.ஜெயவர்த்தன தவறி வருகிறார் எனக் குற்றஞ் சாட்டியது மட்டுமன்றி, அவர் சந்தி ரிகாவின் அரசை வீழ்த்த முயலும் ஐ.தே.கட்சி அனுதாபி என்று கூட விமர்சித்து சுதந்திரக்கட்சிக்காரர்கள் மத்தியில் தனது துணிச்சல் தனத்துக்காக பாராட்டும் பெற்றுக் கொண்டார். அரசில் அங்கம் வகித்துக் கொண்டே தமது வழமையான கேலி, கிண்டல் பாணியில் அரச தரப்பினரை விமர்சிக்கும் தன்மை காரணமாக அவர் சுதந்திரக் கட்சிக் காரர்கள் மத்தியில் பெருமைக்கு உரிய ஒருவராகத் தம்மை நிலை நிறுத்திக்கொண்டார்.



**தனது இருப்புக் குறித்த மன அச்சம்**

சந்திரிகாவின் அரசில் மங்கள சமரவீரவும், ஸ்ரீபதி சூரியாராச்சியும், தம்மை ஓரங்கட்ட முயன்றதை மனதில் பதித்து வைத்திருந்த மஹிந்த. தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு அவர்கள் இருவரையும் தமது அரசில் வைத்திருந்தால் அவர்களால் தமது பெருமைக்கும் கீர்த்திக்கும் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் காரணமாக சாதுரியமாகக் காய் நகர்த்தி அவர்கள் இருவரையும் இலேசான விதத்தில் ஓரம் கட்டிவிட்டார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ, நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவுடன் முரண்பட்ட வேளையிலும், அமைச்சர் சம்பிக்க ரணவக்க மின்விநியோகம் தொடர்பாக ஏறுக்கு மாறாக விமர்சித்த வேளையிலும், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பாக ராஜித சேனாரத்ன ஆதரவுக்குரல் கொடுத்த வேளையிலும், இவர்களெல்லாம் தனது அரசுக்குள் மற்றொரு மஹிந்தவை உருவாக்க முனைகிறார்களோ என்ற சந்தேகத்தில் மஹிந்தவுக்கு கடும் கோபம் ஏற்பட்டது. அவர் விமல் வீரவன்ஸ விடயத்தில் ஜயசுந்தரவுக்கு ஆதரவு வழங்கியதும், சம்பிக்க ரணவக்கவின் சிறகுகளை வெட்டும் விதத்தில் அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்ற முயன்றதும், ராஜித சேனாரத்னவுக்கு வெளியேறும் வாசலைச் சுட்டிக்காட்டியதும், அவர்கள் அரசுக்குள் மற்றொரு மஹிந்தவை உருவாக்கி விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகவே.

**அடுத்த பிரதமர் குறித்த மஹிந்தவின் அச்சம்**

தற்போது மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ள புதிய அச்சம் அடுத்த பிரதமர் குறித்த அச்சமேயாகும்.

மஹிந்த, தி.மு.ஜயரத்னவைப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தமை தமது அரசியல் பாதுகாப்புக்காகவே. ஏனெனில் சந்திரிகா தம்மைப் பிரதமர் பதவிக்கு நியமிக்கத் தீர்மானித்ததன் மூலம் கையைச் சுட்டுக்கொண்ட அனுபவம் குறித்து மஹிந்த நன்கறிந்திருந்தார். பிரதமர் ஜயரத்ன கடும் சுகவீனமுற்ற வேளையில் அவரை அமெரிக்காவுக்கு அனுப்பிக் குணப்படுத்த மஹிந்த கடும் அக்கறை எடுத்துக் கொண்டதும் கூட, அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினால் அரசுக்குள் டசின் கணக்கில் மஹிந்தமார் உருவாகிவிடுவர் என்ற அச்சம் காரணமாகவே.

**பிரதமர் பதவியை இலக்கு வைத்துச் செயற்படுவோர்**

ஜயரத்னவுக்குப் பின்னர் பிரதமர் பதவி தமக்கே கிட்டுமென நம்பியவர்களில் ஒருவர் பஸில் ராஜபக்ஷ ஆவார். 2010 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின் பின்னர் தாம் பிரதமராக நியமிக்கப்படக்கூடுமென பஸில் நம்பிய போதிலும், தி.மு.ஜயரத்ன பிரதமராக நியமிக்கப்பட்டபோது அவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் தி.மு.ஜயரத்ன பிரதமராகி விட்டால் நாட்டின் உத்தியோகப் பற்றற்ற பிரதித் தலைவர் தாமே என்று நிலைநாட்டி விடலாம் என அவர் நம்பினார்.

பிரதமர் பதவியை இலக்கு வைத்துக் காத்திருந்த மற்றொருவர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆவார். 2010 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் சமயத்தில் 'மைத்திரிபால யுகம்' என்றதொரு அலையை சிங்கள மக்கள் மத்தியில் அவர் உருவாக்கி வைத்திருந்தார். மஹிந்தவைப் பிரதமராக நியமிப்பதற்குச் சந்திரிகாவைச் சம்மதிக்க வைத்த தனது உதவிக்குப் பிரதி உபகாரமாகத் தமக்குப் பிரதமர் பதவி வழங்கப்படுமென அவர் பெரிதும் நம்பியிருந்தார். ஆனாலும் கடைசியில் அவர் பஸ்ஸைத் தவறவிட்ட பயணியாக நேர்ந்தது. சிரேஷ்ட நிலையில் ஜயரத்னவுக்கே பிரதமர் பதவி வழங்க முடிவு செய்யப்பட்டபோது, பிரதமர் பதவியை விடச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தமக்கு பெறுமதி மிக்கதென்ற முடிவில் மைத்திரிபால சிறிசேன பிரதமர் நியமனம் குறித்து எதிர்ப்பேதும் வெளியிடவில்லை.

ஊவா மாகாணத்தைச் சேர்ந்தவருக்கே அடுத்த பிரதமர் பதவி என்ற கோஷத்துடன் பொதுத் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டு வந்த மற்றொரு சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான நிமல் ஸ்ரீபால டி சில்வா, பிரதமர் பதவிக்கு தி.மு. ஜயரத்னவின் பெயரை ஜனாதிபதி முன்மொழிந்தபோது தனது மனதைத் தேற்றிக்கொண்டு ஒதுங்கிக் கொண்டார்.

இந்த நிலையில் அண்மைக்காலமாக பிரதமர் ஜயரத்ன கடும் சுகவீனமுற்றதையடுத்து, அடுத்த பிரதமர் பதவி தமக்கே வாய்க்கும் என இவர்களெல்லோரும் கணக்குப் போட்டுக் கொண்டார்கள்.

பஸில்ராஜபக்ஷவின் பிரச்சினையை உள்வீட்டு மட்டத்தில் தீர்த்துக் கொள்ள இயலுமென நம்பினாலும், மைத்திரிபால சிறிசேன மற்றும் நிமல் ஸ்ரீபால டி சில்வா ஆகியோரின் பிரச்சினைக்கு இலேசில் தீர்வு காண முடியாதென்பதை மஹிந்த நன்கறிவார். இந்த இருவரில் எவரொருவருக்குப் பிரதமர் பதவியை வழங்கினாலும் மற்றவர் தன்மீது கோபம் கொள்வார் என்பது மட்டுமல்லாமல், இவர்கள் இருவரில் எவருக்குப் பிரதமர் பதவியை வழங்கினாலும், அவர், சந்திரிகாவின் அரசில் இருந்து கொண்டே தாம் சந்திரிகாவின் மதிப்புக்கு ஏற்படுத்திய பாதிப்புக்கள் குறித்து வெளிக்கொணர மாட்டார்கள் என்று நம்ப மஹிந்த தயாரில்லை. கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் பிரதமர் ஜயரத்னவின் மகனுக்கு முதலமைச்சர் நியமனம் வழங்கவில்லை என எதிர்ப்புத் தெரிவித்து, பிரதமரும், அவரது மகனும் தமது ஆதரவாளர்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். அதற்கு முன்னர் மகாநாயக்க தேரர்கள் பிரதமர் ஜயரத்னவுக்கு எதிராக மஹிந்தவிடம் கருத்து வெளியிட்டிருந்தனர். அண்மையில் பிரதமர் ஜயரத்னவின் பிரத்தியேகச் செயலாளர் பாகிஸ்தானிலிருந்து வந்த போதைப் பொருள்கள் அடங்கிய கொள்கலனை சுங்கப் பகுதியி னரிடமிருந்து விடுவிக்க பிரதமரின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டதாகக் குற்றஞ்சாட்டி பிரதமரைப் பதவியிலிருந்து நீக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் மஹிந்தவை வற்புறுத்தினர்.

ஆனால் மஹிந்த, பிரதமர் ஜயரத்னவுக்கு எதிரான இத்தகைய எதிர்ப்பலைகள் குறித்து கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. இந்தவிதம் ஜயரத்னவைப் பிரதமரைப் பதவியிலிருந்து அகற்றுவிக்க முயல்வோர் அனைவருமே, அரசுக்குள் தமக்கெதிராக மற்றொரு மஹிந்தவை உருவாக்க முயலும் தரப்பினர் என்றே மஹிந்தவின் மனதுக்குப் படுகிறது.

ஒருவேளை, 'நீங்களும் உங்களது அரசும், பிரதமர் ஒருவரின் கைகளாலேயே வீழ்த்தப்படுவீர்கள்' என்று மஹிந்தவுக்கு அவரது சோதிடர்கள் கூறியிருப்பார்களோ தெரியவில்லை.

**பிரதமர்களாலேயே பதவியை இழக்க நேர்ந்த ஜனாதிபதிகள்**

இலங்கையில் பதினொரு ஆண்டுகள் காலமாக பதவி வகித்த ஜனாதிப திகள் இருவரும் தத்தமது அரசுகளின் பிரதமர்களினாலேயே தத்தமது பதவியிலிருந்து ஓய்வுபெற வைக்கப்பட்டனர். 1988 ஆம் ஆண்டில் மூன்றாவது தடவையாகவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தக்க வகையில் அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்ள ஜே.ஆர். முயன்றவேளை, அவ்வேளைய பிரதமர் பிரேமதாசாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும்படி ஐ.தே.கட்சிக்குள்ளிருந்தே ஜே.ஆருக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது.

> சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், அரசு தரப்பில் இருந்துகொண்டே அரசை விமர்சிக்கும் ஒருவராக மஹிந்த தம்மை இனங்காட்டிக் கொண் டார். அந்த வேளையில் அமைச்சரவையில் விவாதிக்கப்படும் விடயங் களையும், மேற்கொள்ளப் படும் தீர் மானங்களையும், விமர்சிப்பது மட்டுமல்லாமல் மறுதினம் ஊடகங்களுக்கு அவை பற்றிய விவரங்களை வழங்குவதையும் மஹிந்த தமது ஒரு வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

அதே போன்று 2005 ஆம் ஆண்டில் சந்திரிகாவின் ஆதரவாளர்களின் தோள் மீது ஏறி மஹிந்த ஜனாதிபதி வேட்பாளராக ஆகியதன் காரணத்தாலேயே சந்திரிகா தமது பதவியிலிருந்து ஓய்வு பெற நேர்ந்தது.

மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தக்க விதத்தில் அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்திக்கொண்ட போதிலும், தம்மைப் போன்ற குயுக்தி மிக்க ஒருவரைப் பிரதமராக நியமித்தால், தமது கட்சியினராலேயே தாம் பதவியை இழந்து வீட்டுக்குச் செல்ல நேரிடும் என்பதை மஹிந்த நன்கறிந்து வைத்துள்ளார்.

ஆனால், தற்போதுள்ள பிரச்சினை பிரதமர் ஜயரத்னவால் இன்னமும் எவ்வளவு காலத்துக்குப் பிரதமர் பதவியில் தொடர்ந்திருக்க இயலும் என்பதே.

மஹிந்தவால் இன்னமும் எவ்வளவு காலம் ஜனாதிபதிப் பதவியில் நீடித்திருக்க இயலும் என்பதன் அடிப்படையிலேயே அது குறித்து முடிவு செய்ய இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்**:சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்க ளெல்லாம் இன்று சுமுகமாக முடியும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**இடபம்**: கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளை பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருந்துவீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள்.

**மிதுனம்**: உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவு வார்கள். மாலை 3 மணி முதல் சந்திராஷ்டமம் தொடங் குவதால் எதிலும் முன்எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**கடகம்**: வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதி காரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்**: திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**கன்னி**: எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். தாய்வழி உறவி னர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்ப டுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**துலாம்**: திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத் தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிட்டும்.

**விருச்சிகம்**: சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர் கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிக ளின் சந்திப்பு நிகழும்.

**தனுசு**: உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடி வெடுக்கப் பாருங்கள். திட்டமிடாத செலவுகளும், பய ணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர் கள்.

**மகரம்**: அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியால் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். எதிலும் அவசரப்பட வேண்டாம்.

**கும்பம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலை களைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப் பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக் கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் சுபகாரியங்கள் ஏற்பாடாகும். வெளியூர் பய ணங்கள் மகிழ்ச்சி தரும்.

தருவது வித்தியா

## குறிக்கோளும் அடையும் முறைகளும்



### விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

உலகம் முழுவதும் ஒரே மதத்தை மேற்கொண்டு, ஒரே வகையான வழி பாட்டையும், ஒரே வகை யான நெறியையும் என்று பின்பற்று கிறதோ, அன்றே ஒரு பெரும் கெடு காலம் ஆரம்பித்துவிடும் எனலாம். சமய முன்னேற்றமும், ஆன்மிக முன்னேற் றமும் இதனால் ஒழிந்தே போகும். ஒரே மதம் என்ற இந்த ஆபத்தை விரைவில் வரவழைக்கும் முயற்சியை விட்டுவிடுங் கள். ஒவ்வொரு சமயத்தவர்களும் தத்தம் நெறியில் முன்னேறி உயர்ந்த குறிக்கோளை அடையவும், வழியில் உள்ள தடைகளை விலக்கவும் முயலுங் கள். உலகத்துக்கே பொதுவான ஒரு சம யம் ஏற்படுத்தும் முயற்சியை விட்டு விடுங்கள்.

இறைவனிடம் மீண்டும் சென்று சேர் வதும் ஒவ்வொருவருக்கும் இயல்பான தெய்வத் தன்மையை மீண்டும் பெறு வதும், மனித சமூகத்தின் குறிக்கோள். எல்லா மதங்களின் குறிக்கோளும் அதுவே. மனப் பக்குவத்துக்கு ஏற்றவாறு முறைகள் வேறுபடலாம்.

குறிக்கோளையும் அதை அடைவதற் குரிய முறைகளையும் 'யோகம்' என்னும் சொல்லால் குறிக்கிறார்கள். 'யோக்' (Yoke) என்ற ஆங்கிலச் சொல்லின் மூலமும், யோகம் என்ற சொல்லின் மூலமும் ஒன்றே- சேர்ப்பது அல்லது இணைப்பது; இறைவன் அல்லது நமது உண்மைத் தத்துவத்துடன் நம்மை இணைப்பது என்பதே இதன் பொருள். இத்தகைய யோகங்கள் அல்லது இணைப்பு நெறிகள் பல இருந்தாலும், கர்மயோகம், பக்தி யோகம், ராஜ யோகம், ஞான யோகம் என்பவையே முக்கியமானவை ஆகும்.

ஒவ்வொரு மனிதனும் தன் இயல் புப்படியே முன்னேற வேண்டும். விஞ் ஞான முறை ஒவ்வொன்றும் முன்னேற ஒவ்வொரு வழி இருப்பது போல், ஒவ்வொரு சமயமும் முன்னேற ஒவ் வொரு வழி இருக்கிறது. சமயத்தின் குறிக்கோள் அல்லது முடிவை அடை வதற்குரிய வழிகளை நாம் யோகம் என்று சொல்கிறோம்; மக்களின் மனப் பக்குவங்களுக்கும் தகுதிக்கும் ஏற்றபடி பலவாறு அவை அமைகின்றன.

## காந்த சக்தி மனிதனின் புதிய சாதனை



ஜோர்ஜியாவைச் சேர்ந்த காந்த சக்தி மனிதன் புதிய சாதனை நிகழ்த்தியுள்ளார். ஜோர்ஜியாவின் டிபிலிசி நகரில் வசிப்பவர் எலிபெர் எல்ஷியேவ்(வயது 42).

குத்துச்சண்டைப் பயிற்சி யாளரான எலிபெர், அபார காந்த சக்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அதாவது, இரும்பு பொருள் கள் அவரது உடலில் ஒட்டிக் கொள்கின்றன. கடந்த 2011 ஆம் ஆண்டில் பொது மக்கள் மத்தியில் தனது உடலில் 50 கரண்டிகளை (ஸ்பூன்) ஒட்ட வைத்துச் சாதனை நிகழ்த்தினார்.

சில தினங்களுக்கு முன்பு அவரே இந்த சாதனையை முறியடித்துள்ளார்.தற்போது தனது மார்பு, முதுகுப் பகுதியில் 53 கரண்டிகளை ஒட்டவைத்து பார்வை யாளர்களை அசத்தினார்.

இதுகுறித்து எலிபெர், காந்த சக்தி இயற்கையாகவே தனது உடலில் அமைந்து விட்டதாகவும், எதிர்காலத் தில் வாய்ப்புக் கிடைத்தால் குட்டி விமானம், வெற்று ரயில் பெட்டி ஆகியவற்றை இழுத்து சாதனை படைக்க ஆசைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

### நாளை

மார்கழி-20

சனிக்கிழமை 04.01.2014

திதி: திருதியை மு.ப.10.45 வரை

நட்சத்திரம்:

திருவோணம் காலை.06.56 வரை

சுபநேரம்:

03.31- 05.01 வரை

இராகுகாலம்:09.31-11.01 வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 1 | 4 | 7 | 2 | 6 | | 8 |
| | 3 | 2 | | 6 | 1 | | | |
| | | 6 | | | 5 | | | |
| | 5 | | 2 | 4 | 3 | | | |
| | 4 | | | | | | 5 | |
| | | | 8 | 5 | 6 | | 7 | |
| | | | 7 | | | 1 | | |
| | | | 6 | 1 | | 5 | 2 | |
| 1 | | 9 | 5 | 3 | 4 | 8 | | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை [illegible]கள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 7 | 4 | 6 | 1 | 9 | 8 | 5 |
| 6 | 9 | 8 | 2 | 5 | 3 | 1 | 4 | 7 |
| 5 | 4 | 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 9 | 5 | 2 | 6 | 3 | 4 | 8 | 7 | 1 |
| 7 | 3 | 6 | 8 | 1 | 2 | 4 | 5 | 9 |
| 8 | 1 | 4 | 5 | 9 | 7 | 6 | 3 | 2 |
| 4 | 8 | 3 | 1 | 2 | 5 | 7 | 9 | 6 |
| 1 | 6 | 5 | 7 | 8 | 9 | 3 | 2 | 4 |
| 2 | 7 | 9 | 3 | 4 | 6 | 5 | 1 | 8 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] ஜப்பானியச் [illegible] 1986 இல் ஜப்பானிய நிறுவன[illegible] இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 700 மடங்கு கிருமிகளை உருவாக்கும் ஹெட்போன்



ஒரு மணிநேரம் தொடர்ந்து நீங்கள் ஹெட் போனைப் பயன்படுத்தினால், அது உங்கள் காதுகளில் உள்ள கிரு மிகளை 700 மடங்கு அதிகரிக்கும். உலகின் அதிக அளவு மனித உயிர்கள் பலியாகக் காரணமாக இருக்கும் ஒரே உயிரினம் கொசு. ஓர் ஆய்வின்படி வலது கை பழக்க முடைய மனிதர்கள், இடது கைப்பழக்கமுடைய மனிதர் களைவிட, சுமார் ஒன்பது வருடங்கள் அதிகமாக வாழ்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# அப்பிளிக்கேஷன் ஸ்டோரிலிருந்து HERE Maps அப்பிளிக்கேஷனை நீக்கும் Nokia




**இந்த அப்பிளிக்கேஷனை நொக்கியா நிறுவனம் அப்பிளின் அப்பிளிக்கேஷன் ஸ்டோ ரிலிருந்து நீக்குவதற்கு முடிவு செய்துள்ளது.**

நொக்கியா உருவாக்கிய மேப் அப்பிளிக்கேஷனான ஹெயமப்ஸ் ஆனது ஐ.ஓ.எஸ். உட்பட அதிகமான இயங்குதளங்களில் செயற்படக்கூடியது.
இந்த அப்பிளிக்கேஷனை நொக்கியா நிறுவனம் அப்பிளின் அப்பிளிக்கேஷன் ஸ்டோரிலிருந்து நீக்கு வதற்கு முடிவு செய்துள்ளது.
அப்பிள் நிறுவனம் தனது இயங்குதளத்தின் பிந்திய பதிப்பான ஐ.ஓ.எஸ். 7 ஐ வெளியிட்டதன் காரணமாக. அதற்கு ஏற்ற வகையில் தனது அப்பிளிக்கேஷன்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவே இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

# Huawei அறிமுகப்படுத்தவுள்ள Ascend Mate 2 தொடர்பான தகவல்கள்



Huawei நிறுவனமானது Ascend Mate 2 என்ற ஸ்மார்ட் கைபேசியை வடிவமைத்து வருகின்றது.
இந்நிலையில் தற்போது அந்தக்கைபேசியின் புகைப்படம் ஒன்றும் சில தகவல்களும் வெளியாகியுள்ளன.
அதன்படி 6.1 அங்குல அளவுடைய பெரிய தொடுதிரையுடன் வடிவமைக்கப்படுவதுடன், Quadd Core Huawei Kirin 910 Processor, பிரதான நினைவகமாக 2 ஜிபி. றம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது. மேலும் கூகுளின் அன்ரோயிட் Androi- 4.4 இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண் டுள்ளதுடன், 13 மெகாபிக்சல்களை உடைய கமராவையும் உள்ளடக்கியுள்ளது. இக்கைபேசி இம்மாதத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

# பாதிக்கப்பட்ட பயனர்களுக்காக அமேசான் வழங்கும் சலுகை

கிறிஸ்துமஸ் காலப் பகுதியில் தமது நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு தாமதம் அடைந்தவர்களுக்கு அமேசான் நிறுவனம் சலுகை ஒன்றை வழங்குகின்றது.
இதன்படி அவர்களுக்கு 20 டொலர் பெறுமதியான பரிசுத்தொகையை வழங்கவுள்ளது.
இந்த நத்தார் விடுமுறை தினங்களில் செக்கன் ஒன்றுக்கு 426 பொருள்கள் என்ற வீதம் அமேசான் தளத்தில் வியாபாரம் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக சில பயநர்களுக்கான பொருள்களை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர்களை மகிழ்வூட்டும் நோக்கில் இந்த அதிரடிச் சலுகையை வழங்கியுள்ளது.

# கொலஸ்ரோல் அளவை கண்டறிய அப்பிளிக்கேஷன்






பல தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்படும் ஸ்மார்ட் கைபேசிகள் தற்போது மருத்துவத் துறையிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
இதன் மற்றுமொரு பயன்பாடாக, எதிர்காலத்தில் உடலிலுள்ள கொலஸ்ரோலின் அளவைக் கண்டறிய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கான விசேட அப்பிளிக்கேஷன், கோர்ணல் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் பயனர்களே தமது கொலஸ்ரோல் அளவை இலகுவான முறையிலும் விரைவாகவும் கண்டறிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணினிகளை சிறந்த நிலையில் பராமரிக்க உதவும் மென்பொருள்



கணினிகள் தொடர்ச்சியாக பாவிக்கப்படும்போது அவற்றில் கோளாறுகள் ஏற்படுவதுடன் அவற்றின் வேகம் மந்த நிலையை அடைதல் வழமையான ஒன்றாகும்.
இப்பிரச்சினையிலிருந்து விடுபட பல மென்பொருள்கள் காணப்படுகின்றன. அவற்றினைப் போன்றே PC Shower 2014 என்ற மென்பொருளும் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
இம் மென்பொருளைப் பயன் படுத்தி அநாவசியமானதும், தற்காலிகமானதுமான கோப்புக்களை நீக்க முடிவதுடன், கணினியில் ஏற்படக்கூடிய கோளாறுகளையும் இலகுவாகச் சரிசெய்து கொள்ள முடியும்.


# ஒரே நேரத்தில் பல மொபைல்களை சார்ஜ் செய்யும் சாதனம்



ரேப்லட், ஸ்மார்ட் கைபேசிகள் போன்ற, ஒன்றிற்கு மேற்பட்ட சாதனங்களை ஒரே நேரத்தில் சார்ஜ் செய்யக்கூடிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
Octafire எனப்படும் இச்சாதனம் 100-240 வோல்ற் 47-63Hz மின்சாரத்தில் செயற்படக்கூடியதாகவும், 2.1 அம்பியர் அல்லது 5 வோல்ற்றை வெளியிடக் கூடியதாகவும் காணப்படுகின்றது.
இதன் மூலம் அதிகபட்சமாக 8 வெவ்வேறு வகையிலான மொபைல்களை சார்ஜ் செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**மகேஸ்வரி சுப்பிரமணியம்**

தாயின் மடியில்
15 * 12 * 1936

மண்ணின் பிடியில்
26 * 12 * 2011

திதி:துதியை 03.01.2014

எமக்கெல்லாம் நல்வழி
காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுச்
சென்று ஆண்டுகள் இரண்டு
உருண்டோடி விட்டதே!
நம்ப முடியவில்லை?
உங்கள் இனிய அன்பான
கதைகள் எம் காதுகளில்
ஒலிக்கின்றது
உங்கள் சிரித்த முகம் அன்பான
பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது.
எம்முடன் கூடவே
இருக்கின்றீர்கள் நீங்கள்
மறையவில்லை என்றென்றும்
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்
நல்லூர் கந்தன் துணையிருப்பார்.

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இல.04, செட்டித்தெரு,
நல்லூர்.

(41856)(6.4)

# அச்சுறுத்தப்படும் மக்களை பாதுகாப்பது எமது கடமை

## *வடமாகாண சபை உறுப்பினர் விந்தன்*

யாழ்ப்பாணம்,ஜன.3

கொலை, கொள்ளை, பலாத்காரம் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பன 2009 ஆம் ஆண்டுக்குப்பின் இங்கு இல்லை என அரசு கூறிக்கொண்டிருக்கும் நிலையில்தான் அரசு சார்பான கட்சியைச் சேர்ந்த ஒரு பிரதேச சபைத் தலைவரின் கொலை இடம்பெற்றுள்ளது. நாட்டில் இது போன்ற நிலைமைகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமேஇருக்கின்றன. இந்தநிலையில் எமது மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை, தம்பாட்டி காந்திஜி முன்பள்ளி கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

> **“கடந்த காலங்களில் தீவகத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள் தமது கட்சி ஆதரவாளர்களதும் பணம் படைத்தவர்களின் நலன்களுக்குமாகவே செயற்பட்டு வந்தனர்”**

எமது மக்கள் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வடக்கு மாகாண சபை தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

கடந்த காலங்களில் தீவகத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள் தமது கட்சி ஆதரவாளர்களதும் பணம் படைத்தவர்களினதும் நலன்களுக்குமாகவே செயற்பட்டு வந்தனர். சாதாரண மக்கள் புறக்கணிப்பட்டே வந்தனர்.

இந்த நிலைமையை மாற்றிப் பாரபட்சமின்றி அனைத்து மக்களதும் உரிய பிரச்சினைகளைத் தீர்க்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படும்.

தம்பாட்டி கிராம மக்கள் பல்வேறு அச்சுறுத்தல்களைச் சந்தித்த போதும், தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்ற உறுதியுடன் தமது பணியை முன்னெடுத்துள்ளனர் இந்தக் குழந்தை களின் கல்வியிலும், கலாசார நிகழ்வுகளிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் காட்டி வரும் ஆர்வத்தை பிள்ளைகளின் திறமைகளில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. முன் பள்ளி ஆசிரியர்களின் சம்பளம்தொடர்பாகவும்நாங்கள் நடவடிக்கைஎடுத்திருக்கின்றோம். கல்வியிலும்ஏனையஅபிவிருத்தியிலும் ஒரு நல்ல முன்னேற்றத்தைக்காணமாகாணசபைமூலம் எல்லா முயற்சி களை யும் முன்னெடுப்போம்-என்றார். (ந-7)

# தையல் கண்காட்சியும் விற்பனையும்

வலி.வடக்கு, ஜன.3

தூபவி தையல் பயிற்சி நிலையமாணவர்களின் உற்பத்திப் பொருள்களின் வருடாந்தக் கண்காட்சியும் விற்பனையும் மருதனார் மடம் வீதியில் அமைந்துள்ள மருத்துவர் தயா சோமசுந்தரம் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தையல் பயிற்சி ஆசிரியை செல்வி க.சுகந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிர காசும், சிறப்பு விருந் தினராக உடுவில் பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட கணக்காளர் ரி.சுரேஸ்குமார், தூபவி தையல் பயிற்சி நிலைய செயலாளர் எஸ்.யூதராஜும் கலந்துகொள்வர்.

(ந-86)

# நெஞ்சைவிட்டகலாத 5 ஆம் ஆண்டு அஞ்சலி



திருமதி **இந்திராணி கதிர்காமத்தம்பி**

**தோற்றம்** 26.10.1950

**மறைவு** 30.12.2008

**திதி: வளர்பிறை திருதியை**

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
ஐந்தாண்டும் ஆயிற்றோ
நீவிர்எம்மைவிட்டுப்பிரிந்து?
சொந்தபந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே!
என்றும் உம்மை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்!
பெற்றிடுக சாந்தி! ஓம் சாந்தி

அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்

(41847)(45.6)

என்றும் அன்புடன் நினைவுகூருகின்ற
- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மார்கட்டில் சிறுவர் கிராமம் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.3
யாழ்ப்பாணம் எஸ்.ஒ.எஸ். சிறுவர்களின் கிராமம் நாளை மறுதினம் ஞாயிறு நல்லூர் நாயன்மார்கட்டில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றது.
இலங்கை எஸ்.ஒ.எஸ். சிறுவர்களின் கிராமங்கள் நிறுவனத்தின் கொழும்பு அலுவலக நிதி அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல் உதவிப் பணிப்பாளர் சங்கா வன்னியாராச்சி இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் எஸ்.ஒ.எஸ். சர்வதேச சிறுவர் கிராமங்கள் அமைப்பின் தலைவர் சித்தார்த்த கவுல் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## அதிகாரிகள் ஒத்துழைப்பு மாகாண சபைக்கு அவசியம்

*வடக்கு ஆளுநர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.3
வடக்கு மாகாண நிறைவேற்று அதிகாரிகள் அனைவரும் வடமாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒரு நாடு என்ற ரீதியில் மத்திய அரசுடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வேண்டுகோள் விடுத்தார். ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற உயர்தர மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.
ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-21)

## அபிவிருத்தி காணாத தம்பாட்டிக் கிராமம்

யாழ்ப்பாணம், ஜன.3
ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராமத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்திப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் ஏனைய பகுதிகளில் வீதிகளுக்குத்தார் போடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற போதும் தம்பாட்டியில் உள்ள வீதிகள் இன்னமும் வெறும் மக்கிகளைக் கொண்டே சீரமைக்கப்பட்டு வருவதாகவும் தம்பாட்டி மக்கள் தெரிவித்தனர்.
தீவுப் பகுதியில் கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்கள் தம்பாட்டி கிராமத்தைப் புறக்கணித்தே வந்துள்ளனர். எனவே மாகாண அரசு தம்பாட்டி கிராமத்தின் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தம்பாட்டி கிராம மக்கள் தெரிவித்தனர். (வ-7)

## வெள்ள வாய்க்காலுக்கு விடிவு கிடைக்குமா?

பிரான்பற்று வீதி, சங்கானையிலிருந்து சங்கானை மண்டிகைக் குளத்துக்குச் செல்லும் வெள்ள வாய்க்கால் பற்றைக் காடாக காணப்படுவதால் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் உள்ளது. இதனால் வாய்க்காலின் அருகில் அமைந்துள்ள வயல்களின் விவசாயிகள் மற்றும் கள்ளுத் தவறணைக்குப் போகும் மதுப்பிரியர்கள் உட்பட இந்த வழியைப் பாவிக்கும் அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
இதனைவிட வெள்ள வாய்க்காலில் உரப்பைகளில் கட்டப்பட்டு மாட்டி றைச்சிக் கழிவுகள் மற்றும் கோழி இறைச்சிக் கழிவுகள் வீசப்பட்டு வருகின்றன. இதனால் இந்தப் பாதையைப் பாவிப்போர் துர் நாற்றத்தால் மூக்கைப் பிடித்துக்கொண்டு சொல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.
இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களப் பரிசோதகர், மற்றும் கமநல சேவை நிலைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-29)

## சாவகச்சேரி நகரசபை பிரிவில் சிரமதானங்கள்

தென்மராட்சி,ஜன.3
சாவகச்சேரி நகரசபை சுகாதாரக் குழுவினரின் மாதாந்த சிரமதானத் திட்டத்தின் கீழ் ஜனவரி மாதத்தில் பின்வரும் திகதிகளில் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நகர சபையின் சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்சன் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் ஜனவரி மாதத்தில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ள இடங்கள் குறித்த விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
இதன் பிரகாரம் எதிர்வரும் 6 ஆம் திகதி நான்காம் வட்டாரத்திலும் (கல்வயல்) 10 ஆம் திகதி மயானப் பகுதிகளிலும், 15 ஆம் திகதி ஐந்தாம் வட்டாரத்திலும் (நுணாவில் மேற்கு) சிரமதானப் பணிகள் இடம்பெறும்.
இந்த நாள்களில் அந்தந்தப் பகுதி பொது அமைப்புகளும், பொது மக்களும் பங்களிப்புச் செய்யுமாறு நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-9)

## அதிபர்கள் சங்க சேவை நயப்பு விழா

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்ட, மற்றும் இளைப்பாறிய அதிபர்களுக்கு தென்மராட்சி பாடசாலைகளின் அதிபர்கள் சங்கத்தின் சேவைநயப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சங்கத் தலைவர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார்.
இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அ.கயிலாயபிள்ளை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி சி.சிவநாதன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), திருமதி வ.மேகலிங்கம் (நாவற்குழி ம.வித்தி.), வே.கந்தசாமி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.) ஓய்வு பெற்ற திருமதி கா. நகுலேஸ்வரன் (நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை), வ.சடாச்சரம் (எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தி.), ச.தர்மலிங்கம் (இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.), வி.விநாயக மூர்த்தி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) இடமாற்றம் பெற்ற எஸ்.மனோகரன் (உசன் இராமநாதன் ம.வித்தி.) ஆகியோர் சங்கத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-9)

8ஆம் ஆண்டு உங்கள் நினைவுகளில் நாம்
திருமதி அழகம்மா நடராசா
அன்னையாக 02.06.1926
தெய்வமாக 22.12.2006
இறந்தும் இறவாமல் எம் இதயங்களில்
தெய்வச் சுடரொளியாய் வீற்றிருக்கும்
எங்கள் அன்னையே!
உங்கள் அன்பு வழி நின்று
நல்லறம் பேணி இவ்வுலகில் வாழ
உங்கள் ஆசீர்வாதம்
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
அன்புடன் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டிகள்.
10/2, அம்பக்கர் லேன், பிரம்படி, கொக்குவில்.
(41934)


## நெல்லியடி மத்தி ம.வி. கல்லூரியாக மாற்றம்

நெல்லியடி, ஜன.3
நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பெயரை அதன் தமிழ்ப் பிரயோகத்தில் திருத்தம் செய்து நெல்லியடி மத்திய கல்லூரி என மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
இதற்கான கோரிக்கையை கல்லூரிச் சமூகம் முறைப்படி சமர்ப்பித்ததின்பேரில் கல்வி அமைச்சின் கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சினால் ஜனவரி முதலாம் திகதிய கடிதத்தின் மூலம் கல்லூரி அதிபருக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## பரிசில் நாள் நிகழ்வு

தென்மராட்சி,ஜன.3
கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சமயப் பாடசாலையின் 61 ஆவது பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். விழா வில் "அற நெறி அமுதம்" சஞ்சிகை வெளியீடும் மாணவர்களின் பஜனை, நடனங்கள், கதை கூறும் பேச்சு, யோகாசனம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-9)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.3
பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். (ந-28)

★ ★ ★

முழங்காவில், ஜன.3
முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மேலும் மேற்படி ஆலயத்தின் ஏற்பாட்டில் திருவெம்பாவை வீதிப் பஜனையில் கலந்து கொண்டவர்கள் திருவெம் பாவை இறுதி நாளில் கௌரவிக்கப்பட்டனர்.
அத்துடன் ஆலய [illegible] சபைத் தலைவர் [illegible] மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பெரியவர்களுக்குச் சால்வைகளும் வழங்கப்பட்டன.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்
மலர்வு 10 ★ 09 ★ 1933
உதிர்வு 05 ★ 12 ★ 2013

அமரர் ரூத்செல்வராணி இராசேந்திரம்
வாழ்க்கை எனும் ஓடத்தில் எமைச்சுமந்த அன்புப் பெட்டகமே அன்பாக அரவணைத்த உன் கணவர் பண்பாய் நீர் வளர்த்த பிள்ளைகள் பாசமாய் பார்த்திருந்த உன் மருமக்கள் உடன் பிறப்புக்கள் செல்லமாய் T.P. இல் கதை சொல்லும் பேரன், பேர்த்திகளின் கொஞ்சும் மொழி கேட்பாய் உன் பூட்டன் பூட்டிகள் உறவுகள் இத்தனையும் தவிக்க விட்டு எங்கு சென்றாய் எம் கண்ணில் நீர் சொரிய
கடந்த (05.12.2013) கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நாளை (04.01.2014) சனிக்கிழமை ஒரு மணியளவில் அன்னாரது வீட்டில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு செபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது ஆறாத்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, இணையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்தநன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
'றூபி இல்லம்', உடுவில் கிழக்கு, சுன்னாகம். T.P:077 138 7258
குடும்பத்தினர்.
(41920)(6.4)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கந்தையா செல்வராசா
கடந்த 05.12.2013 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (03.01.2014) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், நாளை (04.01.2014) சனிக் கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தோற்றம் 01.01.1956
மறைவு 05.12.2013
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.
கோபிலாமனை, கொடிகாமம்.
(41922)(12.6)
குடும்பத்தினர்.

31ஆம் நாள் நிகழ்வு
தோற்றம் 14 . 10 . 1934
மறைவு 05 . 12 . 2013

எமது குடும்ப விளக்கு
திருமதி அன்னலக்ஸ்மி கந்தசாமி
அவர்களின் 31ஆம் நாள் நிகழ்வுகள்
கொழும்பு 4, Community Centre இல்
இன்று (03.01.2014) வெள்ளிக்கிழமை நடைபெறும்
என்பதை அறியத்தருகின்றோம்.
தோம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
குடும்பத்தினர்
(41541)(12.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல்

**குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம்**

மேற்படி ஆலயத்தின் பொதுச்சபைக்கு குப்பிழா னைச் சார்ந்த அங்கத்துவ உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான சகல விவரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவத்தை ரூபா 20/= (இருபது) செலுத்தி ஆலய கருமபீடத்தில் செயலாளர்/ தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப் பப்படிவங்கள் 03.01.2014 இருந்து 11.01.2014 வரை தினமும் மாலை -5 மணியிலிருந்து 6 மணிவரை விநியோ கிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்கள் 11.01.2014 இருந்து 16.01.2014 வரை மேற்குறிப்பிட்ட நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆலய பரிபாலன சபையினர்,
குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம்.
(41941)(4.6.3)



# பெற்றோர்களே!

**வாங்கிவிட்டீர்களா உங்கள் குடும்ப முன்னேற்றத்துக்கான ஜனவரிமாத இதழ்**

OLI ARAZI மாத சஞ்சிகை

**ஒளி அரசி**

இல்லத்தரசிகளின் தோழி

உங்கள் பிள்ளைகளின் மேலதிக திறமைகளை வளர்ப்பதற்கும் (கவிதை எழுதல், பழக்க வழக்கங்களை மேம்படுத்தல், ஆங்கில பாடல் அறிதல், வர்ணம் தீட்டுதல், சொற்றொடர் ஆக்கத்திறன், ஒப்பீடு செய்யும் திறன், தரம் 05 மாணவர்களுக்கான தரமான 10 வினாக்களுக்குப் பயிற்சி அளிக்கும் திறன், மூளைக்கு வேலை, கணித புதிர், விளையாட்டு, அறிவுத்திறன், பொது அறிவு, பொது விவேக, சமய அறிவுப் போட்டி, பாலர்களுக்கான ஆறு பக்க விசேட ஆக்கங்கள், சாதாரண தர மாணவர்களுக்கான தரமான வினாத்தொகுப்பு, வர்த்தக, கணித, விஞ்ஞான உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கான தரமான வினாத்தொகுப்பு) உங்களின் குடும்ப அறிவைப் பெருக்குவதற்கும் ஏற்றவகையில் **"ஒளி அரசி"** எனும் சஞ்சிகை ஒவ்வொரு மாதமும் சுடர்ஒளி கல்விப் பிரிவினரால் வெளியிடப்படுகிறது. ஜனவரி மாத இதழ் பல சுவாரசியமான அம்சங்களுடன் தற்போது வெளிவந்துள்ளது. 60/= விலையுடைய அரசியல், பாலியல் கலக்காத ஓர் பரிமாணப்படைப்பான கையேட்டை ஒரு தடவை வாங்கிப் படித்தால் அதன் பயன் அறிந்து மகிழ்வீர்கள். உங்கள் சகல வயதுப் பிள்ளைகளினதும் அறிவு விருத்திக்கு இது கைகொடுக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

**உங்கள் பிரதிகளை அருகிலுள்ள பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக தொடர்புகளுக்கு :
**கொழும்பு - 071 4273035**
**யாழ்ப்பாணம் -**
**077 6569617 / 071 8182182**


# மேட்டு நில வெங்காயச் செய்கை ஆர்வம் காட்டும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ். மாவட்ட விவசாயிகள் மேட்டு நிலங்களில் வெங்காயப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான முன்னாயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர்.

காலநிலை மாற்றங்களால் பெரும்போக நெற்செய்கையாளர்களும் தமக்குரிய மேட்டுநிலங்களில் வெங்காயத்தைநடுகை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக அளவெட்டி, அம்பனை, தெல்லிப்பழை, மல்லாகம், கந்தரோடை, சண்டிலிப்பாய், இளவாலை பகுதி விவசாயிகள் இந்த வெங்காய நடுகைக்கான முன்னாயத் தங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்போக நெற்செய்கையில் ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடுசெய்வதற்காகவே வெங்காயச் செய்கையைமேற்கொள்ள விருப்பதாக விவ சாயிகள் தெரிவித்துள்ளனர். (ந-14-36)

## சாரதிகள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.3

வடமாகாணத்திணைக் களங்களுக்கு சாரதிகளுக்கான நியமனமும், வடமாகாண ஆங்கில ஆசிரியர் நியமனமும் நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

145 சாரதி வெற்றிடங்களில் 97 நியமனங்களும் ஐந்து ஆங்கில ஆசிரியர் நியமனங்களும்வடமாகாணஆளுநரால் வழங்கப்பட்டன. (வ-21)

## கௌரவிப்பு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்வடமாகாணத்தில் மாவட்ட ரீதியில் முதல் நிலைகளைப் பெற்றமாணவர்களுக்கானகௌரவிப்புவிழா நேற்று வடமகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் நான்கு மாணவர் வீதம் இருபது மாணவர்கள் வடமாகாண ஆளுநரால் கௌரவிக்கப்பட்டனர். (வ-21)

## பரிசளிப்புவிழா

வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் நலிவுற்றோருக்கு நிதி சேகரிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அதிர்ஷ்டஇலாபச் சீட்டிழுப்பின் பரிசளிப்பு விழாவும், வலயத் தலைவர்வருணையும்நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி [illegible] நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.


**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி பெரிய அரசடி ஆசிரியர் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
தொடர்பு : 077 632 0956 (33062) (7.8)

**கடை வாடகைக்கு**

A9 வீதி, பரந்தன் சந்தியில், 16'x 50' கொண்ட கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு:077 904 8117, 077 235 7915
(29725)(4.6.3)

**தவறிவிட்டது**

உப்புக்குளம் மன்னாரைச் சேர்ந்த **தாமோதரஜயர் மகோதரன்**என்பவருடைய **(922870950V)** தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் கன்னைக்குக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது.
தொடர்பு:077 655 8933
(41940)(4.6.3)

**NEW SCIENCE HALL**
**KANNATHIDDY JAFFNA**

# 2016 A/L

**தொழில்நுட்பவியல் கற்கை நெறி**

**TECHNOLOGY SUBJECT STREAM**

- பொறியியல் தொழில் நுட்பவியல் (ENGINEERING TECHNOLOGY)
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO SYSTEMS TECHNOLOGY)
- தொழில் நுட்பவியல் விஞ்ஞானம் (SCIENCE FOR TECHNOLOGY)

இத்துறைசார் ஆசிரியர் குழாம்
(நேர அட்டவணையை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
(41935)(4.6.3)

ஆரம்பம்: 05.01.2014 SUN: 1.00p.m



**மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்**
**(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)**

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 06.01.2014**

அழகுக்கலை டிப்ளோமா ( பேசியல் 20, பிறைடல் மேக்கப் 4, பார்ட்டிமேக்கப், ஈவினிங்மேக்கப், கென்வகேஷன்மேக்கப், டேமேக்கப், டான்ஸ்மேக்கப், ஒயிலி மேக்கப், ஹோம்மேக்கப், வோட்டபுறூம்மேக்கப், பிம்பிள்றீட்மென்ட், அல்ரா சொனிக் பேசியல், திரெட்டிங் வக்சிங், ஹெயா கலரிங், ஹெயா கட்டிங், றீபொன்டிங், பேமிங் ஹென்னா றீட்மென்ட், ஸ்பாட்றீமென்ட், கொட் ஒயில் மசாச், பெடிக்கியூர், மெனிக்கீயூர், நெயில்ஆர்ட், மெகந்தி டிசைன், கிளீனப் பிளக்பொட் றீட்மென் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகிறது. கிறியேட்டிவ் மேக்கப்

* பயிற்சி கட்டணம் 8000/= மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உண்டு மேலும் கேக் ஐசிங், டிப்ளோமாகோர்ஸ், சாறிவேர்க், ஹொன்ட்வேர்க், தையல் பயிற்சிகளும் இடம்பெறுகின்றது. பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். குறைந்த கட்டணம் நிறைந்த சேவை.

**மகளிர் மட்டும்**

**பிறைடல் மேக்கப் - 18000/=, றெஜிஸ்ரேசன் மேக்கப் - 12000/=**
**பூப்புனித நீராட்டு மேக்கப் - 15000/=, கென்வக்கேஷன் மேக்கப் - 2500/=**

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

தொடர்புகளுக்கு : 077 9362642 மதுரா அழகு கலைப்பயிற்சி நிலையம், பழைய வீதி கோப்பாய்.

# பொருளியற் கல்லூரி / BARATHY

எமது மூன்று நிறுவனங்களிலும் ← **A/L 2016** → கலை, வர்த்தகம், தொழிநுட்பம்

**ஆரம்பம் 05.01.2014 ஞாயிறு**

**நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசிரிய குழுவினால்**

| பாடம் | பொருளியற் கல்லூரி | | BARATHY |
|---|---|---|---|
| | நாவலர் றோட், யாழ்ப்பாணம் | கே.கே.எஸ். றோட், இணுவில். | பிரதான வீதி, சித்தங்கேணி |
| * பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் | மகேந்திரன் |
| * கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| * வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| * தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் | பாலா |
| * இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | N.T. தரன் | N.T. தரன் |
| * புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| * நாடகமும்-அரங் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| * வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| * அரசியல் | கோகுலன் | கோகுலன் | கோகுலன் |
| * அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் | R.P. சர்மா |
| * கிறிஸ்தவ நாகரிகம், கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| * இந்து சமயம் | N.T. தரன் | N.T. தரன் | N.T. தரன் |
| * ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் | ஆனந்தன் |
| * இலகு கணிதம் | செந்தூரன் | செந்தூரன் | செந்தூரன் |
| * சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் | சிறிஸ் |
| * சங்கீதம் | குமுதினி | குமுதினி | குமுதினி |
| * மனைப்பொருளியல் | றஜிதா | றஜிதா | றஜிதா |
| * ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| * I.C.T | அம்பி | அம்பி | அம்பி |
| * விவசாயம் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் |

**TECHNOLOGY**

* Engineering Technology : நீக்லஸ்
* Bio Systems Technology : விஸ்ணு
* Science for Technology : பிரதீபன், குகானந்தன், ரவீந்திரன், அம்பிகைபாகன்.
* I.C.T : நா.அம்பி

ஏனைய தொகுதிப் பாடங்களுடன் யாழ் நகர், இணுவில், சித்தங்கேணி ஆகிய எமது மூன்று நிறுவனங்களிலும் ஆரம்பமாகின்றது.

| | யாழ் நகரில் | இணுவில் | BARATHY |
|---|---|---|---|
| கலைப்பிரிவு | 8.00 A.M | 9.00 A.M | 11.00 A.M |
| வர்த்தகப்பிரிவு | 8.00 A.M | 2.00 P.M | 8.00 A.M |
| தொழிநுட்ப பிரிவு | 8.00 A.M | 2.00 P.M | 11.00 A.M |

**அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்**

(சி/10921)(10.6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விடத்தற்பளை சங்கம் முதலிடத்தில்

வரணி,ஜன.3
தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் இயங்கும் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் சங்க மாக விடத்தற்பளை கிராமிய அபிவிருத்திச் சங்கம் முதல் நிலை வகிப்பதாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ரவிகரன் குறிப்பிட்டார். கடந்த சனிக்கிழமை தென்ம ராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கலந்துரையாடல் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குறித்த கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஒரு மருத்துவமனையின் முழுநேர மருத்துவர். தனது கிராம அபிவிருத்தி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்.
ஏனைய கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும்- என்றார். (ந-122)

## பயன் தராத நல்லின பசுக்கள்

அக்கராயன், ஜன.3
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட நல்லின பசுக்களால் தமக்குப் பயன் எதுவும் கிடைக்கவில்லையென கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.
துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. உதவி அமைப்பு ஒன்றினால் வழங்கப்பட்ட பசுக்கள் நன் றாகப் பராமரிக்கப்பட்ட போதி லும் இனப்பெருக்கத்துக்குத் தயாராகாது மலட்டுத் தன் மையுடன் காணப்படுவதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. (க-18)

## புராணபடன உரைக்கு கௌரவம்

கிளிநொச்சி, ஜன.3
கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் அம்பாள் ஆலயத்தில் புராணபடன உரையை வழங்கிய அ.ஐயம்பிள்ளை கௌரவிக்கப்பட்டுள்ளார்.
இந்த ஆலயத்தில் பத்து நாள்கள் திருவெம்பாவை நிகழ்வு மற்றும் திருவாதவூரர் அடிகளாரின் புராண படன உரை என்பன இடம்பெற்றன.
இதில் புராண படன உரையைத் தொடர்ந்து வழங்கி வந்த கிளிநொச்சி கண்டா வளை பெரிய குளத்தைச் சேர்ந்த அப்பாக்குட்டி ஐயம்பிள் ளைக்கே கௌரவம் அளிக்கப் பட்டது.
ஆலய அறங்காவலர் சபையினர் "வாதவூரர் வாருதி" என்னும் சிறப்புப் பட்டத்தை இவருக்கு வழங்கியதுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்துள்ளனர். (க-6)

# அழிவடையும் நிலையில் கிளிநொச்சி நெற்பயிர்கள்


### மழை பெய்யாததால் இந்த அவலம்

கிளிநொச்சி, ஜன.3
பருவமழை பெய்யாததால் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நெற்பயிர்கள் அழிவடையும் நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.
காலபோக நெற்செய்கை மழை நீரை நம்பியே செய்கை பண்ணப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இம்முறை அதிக அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. வயல் நிலங்களில் நெற்பயிர்கள் வளர்ந்துள்ள போதிலும் நீர் இல்லாததால் அவை வாடிய நிலையில் காணப்படுகின்றன. தொடர்ந்தும் மழை பெய்யாது விட்டால் நெற்பயிர்கள் முழுமையாக அழிவடைந்து தமக்கு பெரிய நட்டம் ஏற்படுமென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

> "-"
> தொடர்ந்தும் மழை பெய்யாது விட்டால் நெற்பயிர்கள் முழுமையாக அழிவ டைந்து பெரிய நட்டம் ஏற்படுத்தும்


கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன், உமையாள்புரம், முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, வட்டக்கச்சி, தருமபுரம், இராமநாதபுரம், உருத்திரபுரம், புதுமுறிப்பு, அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள வயல்நிலங்களே நீர் இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்தப் பகுதி விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த காலங்களில் பெரு மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் பயிர்கள் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க-426)

## இந்து மயானத்தின் நுழைவாயில் திறப்பு



நெல்லியடி, ஜன.3
வதிரி ஆலங்கட்டை இந்து மயானத் தின் நுழை வாயில் கடந்த ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக் கப்பட்டது.
அமரர் ஆறுமுகம் ஞாபகார்த்தமாக 12 லட்சம் ரூபா பெறுமதியில் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டது.
அதலங்கட்டை மயானத்தின் பராமரிப்பு தலைவர் மு.க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கர வெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன், மாகாண சபை உறுப் பினர்கள் சிவலோகன், கஜ தீபன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-422)

# அரச ஊழியர் விடுதிகளில் அட்டகாசம் புரியும் குரங்குகள்




வவுனியா, ஜன.3
வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள அரச ஊழியர் விடுதிகளில் குரங்குகளின் அட்டகாசம் எல்லை மீறிக் காணப்படுகின்றது.
அண்மைக் காலமாகவே குரங்குகளின் அட்டகாசம் வவுனியாவில் அதிகரித்துக் காணப்படுகின்றது. குரங்குகள் பெருமளவில் காடுகளில் இருந்து நகர்ப் புறத்துக்கு வருகை தந்து தொல்லைகளை ஏற்படுத்தி வருகின்றன.
இவை வர்த்தக நிலையங்களில் நுழைந்து பொருள்களைச் சேதப்படுத்துவதுடன் தொலைத் தொடர்பு இணைப்புக்கள், மின்சார இணைப்புக்கள் ஆகியவற்றையும் சேதப்படுத்தி வருகின்றன.
மேலும் வீடுகளுக்குள் புகுந்து அங்கு இருப்பவர்களுக்கு துன்புறுத்தல்களை ஏற்படுத்துகின்றன. இவை அரச விடுதிகளிலும் புகுந்து அட்டகாசம் புரிந்து வருகின்றன.
இந்தக் குரங்குகள் உணவகங்களுக்கண்மையிலும் உணவைத் தேடி அலைவதையும் அவதானிக்க முடிகின்றது.
இந்தக் குரங்குகள் பாடசாலை செல்லும் மாணவர்களைத் துரத்திச் செல்வதையும் காண முடிகின்றது. (க-402)

## வயல் நிலங்களின் துப்புரவில் சேவா லங்கா

அக்கராயன், ஜன.3
போர் காரணமாக கவனிப்பாரற்ற நிலையில் காடுகள் வளர்ந்து காணப்படும் வயல் நிலங்கள், நீர் வாய்க்கால்கள் ஆகியவற்றைத் துப்புரவு செய்யும் பணியில் சேவா லங்கா நிறுவனம் ஈடுபட்டுள்ளது.
இந்த வகையில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 1000 ஏக்கர் பகுதியில் 807 ஏக்கர் வரையான பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும் சேவா லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.
போர் இடம்பெற்ற போது நீர்ப்பாசன குளங்களின் கீழான பல ஏக்கர் நெல் வயல்கள் காடுகளாக மாறியுள்ளன. இவற்றைத் துப்புரவு செய்யும் நிலையில் மீளக்குடியமர்ந்த விவசாயிகள் இல்லையென்பதால் சேவா லங்கா நிறுவனம் இதில் ஈடுபட்டுள்ளது.
துணுக்காய் அம்பலப் பெருமாள் குளத்தின் கீழ் மட்டுமே 175 ஏக்கர் வயல் நிலம் காடுகளாக மாறிக் காணப்படு வதாக இந்தப் பகுதி கமக்கார அமைப்புத் தெரிவித்துள்ளது. (க-18)

## றிஸாத் தலைமையில் மன்னாரில் கூட்டம்

மன்னார், ஜன.3
மன்னார் மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் அவசர கூட்டம் ஒன்று அமைச்சர் றிஸாத் பதியுதீன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இதன்போது அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் இடர்களின் போது பாதிக்கப்பட்டு வரும் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.
விவசாயத்தை மேற்கொள்பவர்கள் மழை இல்லாததால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், மாற்றுப் பயிர்களைப் பயிரிடுதல் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.
இதேவேளை இடர்களினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் நட்ட ஈடு. நிவாரணம் ஆகியவை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.
மன்னார் மாவட்டத்தில் 26 ஆயிரம் விவசாயிகளும், 9 ஆயிரம் மீனவர்களும் பாதிப்படைந்துள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.
இந்த அவசரக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல், கடற்றொழில், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன அதிகாரிகள், திடீர் இடர் முகாமைத்துவ அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-12)

## மோசமான நிலையில் காணப்படும் பூநகரி வீதி



அக்கராயன், ஜன.3
கிளிநொச்சியிலிருந்து அக்கராயன் வழியாக பூநகரியின் பல்லவராயன்கட்டுச் சந்தி வரையான வீதி சேதமடைந்து மோசமான நிலையில் காணப்படுகின்றது.
கிளிநொச்சி நகரில் இருந்து புதுமுறிப்பு கிராமத்தின் எல்லை வரை இந்த வீதி புனர மைக்கப்பட்டாலும் ஊற்றுப்புலத்திலிருந்து கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன் , வன்னேரிக்குளம் , ஜெயபுரம், பல்லவராயன் கட்டுச் சந்தி வரையான பகுதி வரை புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது.
முழங்காவில் மருத்துவமனையிலிருந்து அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சி மருத்துவமனைக்குச் செல்வதில் பெரும் இடர்கள் காணப்படுகின்றன.
இதேவேளை பூநகரியின் மேற்கு கிராமங்களான வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி ஆகிய கிராமங்களுக்கான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. பூநகரிப் பிரதேசம் அபிவிருத் தியடையவில்லை என்பதற்கு இங்குள்ள வீதிகளே சாட்சியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மின்விநியோகப் பணிகள் நிறுத்தம் ஏமாற்றத்தில் முல்லைத்தீவு மக்கள்

முல்லைத்தீவு.ஜன.3
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில கிராமங்களுக்கான மின்னிணைப்புப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் அந்தக் கிராம மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்சிலைமடு, பண்டாரவன்னியன் கிராம மற்றும் முத்துஐயன்கட்டு கிராமங்களுக்கான மின்விநியோக இணைப்பு வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வந்த நிலையில் அவை அண்மையில் காரண மின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
ஒட்டுசுட்டானிலிருந்து நடப்பட வேண்டிய மின்சாரத் தூண்கள் இடைநடுவிலே அதாவது கற்சிலைமடுவில் இருந்து ஆரம்பித்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரை நடப்பட்டு வயர்கள் மிக அவசர அவசரமாக இணைக்கப்பட்டன.

> "-"
> ஒட்டுசுட்டானிலிருந்து நடப்பட வேண்டிய மின்சாரத் தூண் கள் இடைநடுவிலே. அதாவது கற்சிலை மடுவில் இருந்து ஆரம்பித்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரை நடப்பட்டு வயர்கள் மிக அவசர அவசரமாக இணைக்கப்பட்டன

அதேவேளை ஒட்டுசுட்டானிலிருந்து கற்சிலைமடு வரையிலான பகுதிகளுக்குரிய மின்சாரத் தூண்களும் தருவிக்கப்பட்ட நிலையில் அவற்றை நடும் பணிகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.
இதனால் மிகவும் அவசர அவசரமாக தமது வீடுகளுக்கு மின் இணைப்பு வேலைகளை மேற்கொண்டவர்கள் தற்போது ஏமர்ந்த நிலையில் உள்ளனர்.
எனவே உரிய அதிகாரிகள் மின்சார விநியோகத்தை விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டும் என மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனத்தில் பழுக்க வைத்த பழ வகைகள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு.ஜன.3

"எத்தபோன்" என்ற இரசாயனத் திரவத்தைப் பயன்படுத்திப் பழுக்க வைக்கப்பட்டு விற்பதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 75 ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட பழங்கள் கொழும்பு மனிங் சந்தையிலிருந்து கடந்த 27 ஆம் திகதி கைப்பற்றப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிக்கிறது.



எத்தபோன் பயன்படுத்தி பழுக்க வைத்த 100 லட்சம் ரூபா பெறுமதியான வாழைப்பழம், பப்பாசி, மாம்பழம், விளாம் பழம் போன்ற பழங்கள் கைப்பற்றப்பட்டன.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸன் பெர்னாண்டோவின் உத்தரவுக்கு அமைய நுகர்வோர் அதிகாரசபையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

இந்த இரசாயனத் திரவத்தை நேரடியாக பழவகைகளுக்கு விசிறக்கூடாது என அந்த இரசாயனம் உள்ளடங்கியுள்ள பொதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட மனிங் சந்தையிலிருந்து கைப்பற்றப் பட்டிருந்த பழ வகைகளின் மீது எத்தபோன் இரசாயனம் நேரடியாக விசிறப்பட்டிருந்ததாக நுகர்வோர் அதிகார சபை தெரிவிக்கிறது.

மேலும், மனிங் சந்தையிலுள்ள சுமார் 80 வரையிலான பழக்கடைகளில் சோதனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## பொருள்களின் காலாவதி திகதியில் மாற்றம் செய்த நபர் கைது

நாட்டிலுள்ள பிரபல வர்த்தகக் குறியீடுகள் கொண்ட உற்பத்திப் பொருள்களின் காலாவதித் திகதியில் மாற்றம் செய்து, விற்பனை செய்தமை நுகர்வோர் அதிகார சபையினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கிரான்ட்பாஸ் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் இதனுடன் தொடர்புடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக சபையின் பிராந்தியத்துக்குப் பொறுப்பான அசேல பண்டார தெரிவித்தார். (எ)

# நஞ்சற்ற உணவுப் பொருள் கொள்வனவுக்கு புதிய சந்தை


கொழும்பு.ஜன.3

நாட்டில் தொற்றாத நோய்களைத் தடுப்பதற்கு விஷத்தன்மையற்ற உணவுப் பொருள்களை அறிமுகம் செய்யும் செயற்றிட்டமொன்றை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ளது.

அதற்காக தேசிய முறைமைகளைக் கைக்கொண்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள அரிசி, மரக்கறிகள் மற்றும் பழ வகைகள் அடங்கிய சந்தையொன்று கொழும்பில் கடந்த 29 ஆம் திகதி ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

இரசாயன உரவகைகளோ, இரசாயன கிருமிநாசினிகளோ பயன்படுத்தப்படாது செய்கை பண்ணப்பட்டுள்ள அரிசி வகைகள், புத்தம் புதிய மரக்கறிகள், பழ வகைகள் உட்பட தேசிய உற்பத்திகள் பலவற்றையும் 'செத்சுவ மெதுர' என்ற சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும்.

'செத்சுவ மெதுர' என்ற இந்த பாதுகாப்பான உணவுகள் மையம் கொழும்பு- 07, ஸ்ரீ சம் போதி விஹாரைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. (எ-22)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தென் மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்குமிடையில் நேற்று முன்தினம் தங்காலையில் நடைபெற்ற சந்திப்பின் போது.....

# குற்றச்சாட்டுக்கு எதிராக வழக்கு

## தொடரப் போவதாக சரத் பொன்சேகா தெரிவிப்பு

தற்கொலைத் தாக்குதல் நடத்த வந்த பெண்ணுக்கும் எனக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததாக பிரதியமைச்சர் சரண குணவர்தன சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதற்கு எதிராக வழக்கு தொடராமல் இருக்க வேண்டுமாயின் 14 நாள்களுக்குள் 500 மில்லியன் ரூபாவை செலுத்துமாறு கோரி சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சரத் பொன்சேகா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதியமைச்சர் சரண குணவர்தனவுக்கு கடந்த 19 ஆம் திகதி சட்டத்தரணி ஊடாக வழக்குத் தொடரப் போவதாக கடிதம் அனுப்பியுள்ளோம். முன் னாள் இராணுவத் தளபதியான எனக்கு ஏற்படுத்திய அவதூறுக்கு இழப்பீடாக 500 மில்லியன் ரூபாவை வழங்க வேண்டும் என அதில் கேட்டுள்ளோம்.

எனக்கு ஏற்படுத்திய அவதூறுக்கு தொகையை நிர்ணயம் செய்ய முடியாது. எனினும் பிரதியமைச்சருக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்பதால் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். என் மீது தற்கொலை தாக்குதல் நடத்த வந்த பெண்ணுடன் எனக்கு தொடர்பு இருந்தது எனக் கூறி பிரதியமைச்சர் எனக்கு மட்டுமல்ல, முழு இராணுவத்திற்கும் கறையை ஏற்படுத்தியுள்ளார் என்றார். (எ)


**A/L வரலாறு**

மாவட்ட தேசிய மட்டங்களில் உயர் பெறு பேறுகள் பெறுவதற்கு வழிகாட்டும் உங்கள் ஆசான்

M. பதுமன் M.A. (History)

* என்னிடம் கற்று மாவட்டத்தில் முதலாவதாக வந்த உமாகரன் துளசி
* "A" தர சித்திகளை அள்ளிக்கொண்டோர்
* 100 சித்திபெற்ற எனது அன்புக்குரிய அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்

D.M.I கற்பிக்கும் இடங்கள் புகழ்

யாழ்.நகர் உயர்கலைக்கல்லூரி ஞானப்பிட்டி மானிப்பாய்


# மரண அறிவித்தல்

## பொன்னையா இராசதுரை



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசதுரை நேற்று (02.01.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக்கணவரும் வடிவாம்பிகை, இராசசேகரன், வசந்த மலர், சுதாகர் (கனடா), இராசதுரை, சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பா.இராசசேகரன் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் யாழ். கல்வி வலயம்), சிவராசா, சுதாகர் (கனடா) ஆகியோரின் மாமனும் இ. யதுசன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), சு.வினோத் (கனடா), சு.வினித் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2014) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 1 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

585 சிங்கராயர் ஒழுங்கை, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு.

தகவல்: குடும்பத்தினர். 021 300 7359

## போதைக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு

போதைப்பொருள் பழக்கத் துக்கு அடிமையான ஆயிரம் பேருக்கு வருடாந்தம் புனர் வாழ்வளிப்பதற்கு புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவ லகம் திட்டமிட்டுள்ளது. பொலன்னறுவை புனர் வாழ்வு முகாமில் இந்தக் குழுவினருக்கு புனர் வாழ்வளிக் கப்ப டவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாய கம் மேஜர் ஜெனரல் ஜகத் குண திலக்க தெரிவித்தார்.

தற்போது போதைப்பொருள் பழக்கத்துக்குள்ளான 275 பேருக்கு புனர்வாழ்வளிக் கப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் பழக்கத் துக்குள்ளான வேறுபட்ட வய தினர் கைதுசெய்யப்படுவது, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்திக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. (எ)

## விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

மஹியங்கனை - ரிதிமாலி யத்த கமநல சேவை மத்திய நிலையத்துக்கு முன்னால் ஆயி ரத்துக்கும் அதிகமான விவசா யிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 1750 ஏக்கர் விவசாய நிலத்துக்கு உரம் கோரியே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ரிதிமாலியத்த பிர தேச செயலகத்துக்கு உட் பட்ட கனுகொல்ல, யட்டபேவெல லிஹினியாகல நாராங் அத் பத்தியாய பகுதி களைச் சேர்ந்த விவசாயிகளே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். 2 வார காலத்துக்குள் உரம் வழங்கப்படா விட்டால் போராட்டம் தீவிரமடையும் என்று எச்சரிக்கை விடுத்து விவ சாயிகள் தமது ஆர்ப்பாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளனர்.


**வேலை வாய்ப்பு**

1. உதவிக் கணக்காளர்

(கணக்கியல் துறையில் அறிவும், அனுபவமும் உள்ளவர்களும், A/L வர்த்தகத் துறையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். (பெண்கள் விரும்பத்தக்கது)

2. சமையல் உதவியாளர்

(தங்குமிடமும், உணவும் வழங்கப்படும்)

தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின்பு, சுயவிவரக் கோவை, சான்றிதழ்கள் என்பவற்றுடன் நேரில் வரவும்.

தொடர்பு : 021 492 5521

'ஸ்ரார் றெஸ்ற்' ஹோட்டல்

A9 வீதி, பரந்தன்.

(29726)(7.6)


# மரண அறிவித்தல்

## திருமதி தங்கமுத்து கதிரவேலு



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், புத்தூர், மாதடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தங்கமுத்து 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலன், நாகம்மாவின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தவசி, தேனியன் அன்பு மருமகளும், காலஞ் சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா மார்க்கண்டு, சுப்பைய்யா, சரஸ்வதி, துரைமணி, கிருஷ்ண பிள்ளை, குணசிங்கம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன், (ஜேர்மனி), பாலச்சந்திரன் (நோர்வே), பாலசரஸ்வதி (கொழும்பு), பாலேந்திரன் (நோர்வே), கிருஷ்ணபாபு (ஜேர்மனி) சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவராசா (கொழும்பு), செளந்தி (ஜேர்மனி), லதா (நோர்வே), சுபாசினி (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமியும், விதுர்சன், துவாரகா, தரணிகா (கொழும்பு), கிரிஷாந், அபிசாந் (நோர்வே), அங்கனி, அபிஷ்னா (ஜேர்மனி), கிரிசான், சமீரா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2014) தற்காலிக வசிப்பிடமாகிய உடுவில் லவ் லேனில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லவ்லேன், உடுவில். (C-7505) (4.6.3) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் புவிராசசிங்கம்

( ஓய்வு பெற்ற இராணுவ RSM )



அரியாலையைப் பிறப்பிடமாகவும், கெற்பேலி மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் புவிராசசிங்கம் நேற்று (02.01.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பார்வதி தம்பதியரின் மூத்தமகனும் அன்ரனி தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்றவர்களான சிவானந்தம், மதுராம்பாள், சுலோசனா, விபுலானந்தன் மற்றும் மனோகரன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மேரியின் அன்புக் கணவரும் மற்றில்டா, புஸ்பராணி, கமலேந்திரன், தங்கா, ரவீந்திரன், சிரோமா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு பொறளை மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பொறளை இந்து மயானத்தில் பி.ப. 4.30 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

106 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P : 021 3008618

தகவல்: சு. மனோகரன் (ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பள்ளிவாசல் மீது தாக்குதல்; ஐவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம்.ஜன.3

கண்டி, பூஜப்பிட்டிய பிரதேச சபைக்கு உட்பட்ட அம்பதென்ன, முல்லேகம பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்தில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் அஸாத் சாலி தெரிவித்ததாவது:-

இன்று இந்த நாடு சாபத்துக்கு ஆளாகி வருகின்றது. அரசாங்கமே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றது. இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டுவிட்டன. இந் நிலையிலும் இப்பள்ளிவாசலிலும் தொழுகை நடத்தக் கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோத செயற்பாடுகள் நடைபெறும் இடங்களை கண்டுகொள்ளாமல் பள்ளிவாசலை மட்டும் அரசு தடை செய்ய முயற்சிக்கின்றது. இது தொடர்பில் பிரதமருடன் பேசி எவ்வித பயனும் இல்லை எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் சம்பவம் இடம்பெற்ற இரு தினங்களுக்கு முன் குறித்த பள்ளிவாசலுக்கு வந்த இனந்தெரியாதோர் புதிதாக தொழுகை நடத்த வந்த இமாமை தேடினர் என்றும் அவர் இல்லை என்றதும் கல்வீசித் தாக்குதல் நடத்தினர் என்றும்கடுகஸ்தோட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-10)

# சுகாதார வைத்திய அதிகாரியை தாக்க முயற்சித்தவர் கைது

யாழ்ப்பாணம். ஜன. 03

கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் சுகாதார வசதிகள் தொடர்பில் ஆராயச் சென்ற தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியைத் தாக்குவதற்கு முற்பட்ட ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை மதியம் சுகாதார வைத்திய அதிகாரி சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல தாதியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் குறித்த முகாமுக்குச் சென்றனர்.

அதே முகாமில் ஆயிரத்து 500 பேருக்கு மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். அவர்களில் 10 குடும்பங்களுக்கு ஒரு மலசல கூடம் என்ற அடிப்படையில் 18 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த எண்ணிக்கை போதாமலுள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றில் 10 மலசல கூடங்கள் வரை பயன்படுத்த முடியாத அளவுக்கு உடைந்து காணப்படுகின்றன. அங்கு ஒரு மலசல கூடம் 10 குடும்பங்களுக்கு பயன்பாட்டில் இருக்கின்ற நிலையில் வெளிநாட்டில் வசித்துவிட்டு அங்கு வந்துள்ள ஒருவர் தனது குடும்பத்தினருக்கும் தனது உறவுடைய மற்றொரு குடும்பத்துக்கும் மட்டும் ஒரு மலசல கூடத்தைப் பயன்படுத்தி வருவதோடு அதனை பிறர் பயன்படுத்த முடியாதவாறு பூட்டுப் போட்டுள்ளார்.

அது தொடர்பிலும் அங்குள்ள சுகாதாரப் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்து 10 குடும்பங்களுக்கு ஒரு மலசல கூடம் என்ற நடைமுறையைப் பின்பற்றுமாறு கோரியமையால் ஆத்திரமுற்ற இந்த நபர் அங்கிருந்த பொருட்களை போட்டு உடைத்ததுடன் சுகாதார வைத்திய அதிகாரியையும் பொலிஸார் முன்பாகவே தாக்க முற்பட்டுள்ளார். இதனால் அவரைப் பொலிஸார் கைது செய்தனர். (த-4)

## கருத்தடையால் சாவடைந்த பெண்ணின் தந்தை நேற்றுமுன்தினம் தூக்கிட்டு சாவு

கிளிநொச்சி, ஜன. 3

கட்டாய கருத்தடைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் உயிரிழந்த கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த பெண்ணின் தந்தை தூக்கிட்டு சாவடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளத்தைச் சேர்ந்த செல்லச்சாமி இராசரட்ணம் (வயது-58) என்பவரே இவ்வாறு சாவடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மின் இணைப்பு வயறை பயன்படுத்தி இவர் தூக்கிட்டுள்ளார். சடலம் கிளிநொச்சி மருத்துவமனை யில் ஒப்படைக்கப்பட்டு விசாரணயின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மகளின் சாவுக்குப் பின்னர் உளரீதியாக பாதிக்கப்பட்டிருந்த இவர் அதன் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த பெண்ணின் சாவு தொடர்பில் அவரது கணவன் யாழ். நீதிமன்றில் தொடுத்துள்ள வழக்கின் விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தனியார் பஸ்கள் தொடர்பாக ஸ்கைப் மூலம் முறைப்பாடு

கொழும்பு.ஜன 03

தனியார் பஸ்கள் தொடர்பாக ஸ்கைப் (Skype) தொழில் நுட்பத்தினூடாக முறைப்பாடு செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இதற்கென தனியார் போக்குவரத்து அமைச்சில் விசேட நடவடிக்கைப் பிரிவொன்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. இரத்நாயக்காவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஸ்கைப் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி புதிய முறைப்பாட்டுப் பிரிவுடன் தொடர்புகொண்ட அமைச்சர் தமிழ் முறைப்பாட்டுப் பிரிவுடன் உரையாடினார். தனியார் பஸ்கள் குறித்த முறைப்பாடுகளை 0716550000 எனும் இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு முன்வைக்க அவகாசம் உள்ளதோடு அமைச்சின் Privatetransportservices எனும் ஸ்கைப் முகவரியுடன் தொடர்பு கொண்டும் முன்வைக்க முடியும்.

பஸ் சாரதிகள்,நடத்துநர்கள் தொடர்பான முறைப்பாடுகள், பஸ் சேவை பற்றிய முறைப்பாடுகள், சத்தமாகப் பாடல் ஒலித்தல், மோசமான படங்களைக் காண்பித்தல் போன்ற சகல விடயங்கள் குறித்தும் இங்கு முறையிட முடியும் என அமைச்சர் தெரிவித்தார். (சி)

## வால்வெட்டுக்கு இலக்காகி ஐவர் நேற்று சிகிச்சைக்கு

### அச்சுவேலியில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜன. 03.

அச்சுவேலி ராசாவின் வீதியில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் வீட்டுப் பிரார்த்தனை நகிழ்வில் ஈடுபட்டிருந்த வேளை அங்கு வந்த இனந்தெரியாதோரின் வாள் வெட்டில் இருவர் காயமடைந்தனர். அத்தோடு வீதியால் சென்ற மூவரையும் இவர்கள் வாளால் வெட்டிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சிறு காயங்களுக்கு இலக்கான அந்த மூவருக்கும் அச்சுவேலி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரார்த்தனையில் ஈடுபட்ட இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த குணசீலன் துஷாந்தன் (வயது - 17), செபஸ்ரியன் மஜீவ் காந்த் ஆகிய இருவருமே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ- 4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தாதியர்கள்

வடக்கு மாகாணத்துக்கு எனக் கோரப்பட்ட தாதியர் எண்ணிக்கையை விடக் குறைந்த அளவில் தாதியர் நியமிக்கப்பட்டமை மட்டுமன்றி அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் 14 தாதியரை மீளப் பெற்றுக் கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களை மீண்டும் வடக்குக்கு நியமிக்குமாறு கோரியுமே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் சிவயோகம் மேலும் தெரிவித்ததாவது,

எமது சங்கம் வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை தொடர்பில் எடுத்துக்கூறி தாதியர்களை நியமிக்குமாறு கோரி சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடியிருந்தது.

இதன்படி வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைக்கு என 80 தாதியரை நியமிப்பதாக அமைச்சு கூறியது. ஆனால் 46 தாதியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டனர். நியமன முறைமைக்கு மாறாக அந்த 46 பேரில் 5 தாதியரை மீளப் பெற்றுக் கொண்டுவிட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையிலும் நூற்றுக்கணக்கான தாதியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. அது பற்றிக் கலந்துரையாடிய போது 250 தாதியர்களைத் தருவதாகக் கூறினர். பின்னர் 100 பேரையே தருவோம் என்று கூறினர். இப்போது 70 தாதியர்களை மட்டுமே நியமித்தனர். ஆனால் அந்த 70 பேரில் 9 பேரை மீளப்பெற்றுக் கொண்டுள்ளனர்.

அவ்வாறு மீளப் பெற்றுக் கொண்ட 14 தாதியர்களையும் வடக்குக்கு மீண்டும் தரு மாறு கோரி போராட்டத்தை முன்னெடுக்கிறோம் - என்றார். (த-4)

### அகதிகள்

னாள் இராஜதந்திரியான புருஸ் ஹெய்க் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹிட்லர் காலத்தில் யூதர்களின் கருத்துகள் கேட்கப்படாமல், அவர்கள் அழிக்கப்பட்டனர். அதேபோன்று தற் போது ஆஸ்திரேலிய அரசு இலங்கை அகதிகளை கேள்விகள் இன்றி நாடு கடத்தி வருகிறது

அத்துடன், அகதி அந்தஸ்து கோருகின்றவர்கள் சட்டத் தரணிகளை சந்திப் பதற்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

### அடுத்த

எனினும் இந்த வீடமைப்பு திட்டத்தை 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருப்பதாகவும் அந்த அதிகாரி தொழிலாளர்களிடம் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வருடத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகிய போதும் அதனை அரசு மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

### இந்திய

அப்போது இந்திய இராணுவத்தின் 53 ஆவது காலாற் படைப்பிரிவின் கீழ் செயற்பட்ட கூர்க்கா படைப்பிரிவு ஒன்றின் கட்டளை அதிகாரியாக லெப்.ஜெனரல் தல்பீர்சிங் சுகக் போரில் பங்கெடுத்திருந் தார். புலனாய்வு உள்ளிட்ட கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளில் நிபுணரான இவர், காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும், ஆயுதப் போராட்டங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்ற வராவார்.

எதிர்வரும் ஜூலை மாதத்துக்குப் பின்னர் லெப்.ஜெனரல் தல்பீர்சிங் சுகக் இந்திய இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

### மாகாண

தப்பட்டது.

குறிப்பாக விதவைகள், இடம்பெயர்ந்தோர், போரினால் பெற்றோரை இழந்தோர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் அதிக தேவை உடைய வடக்குச் சமூகம் ஆகியவை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது என்றும் இந்தப் பேச்சில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டிய விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி இந்தப் பேச்சின் போது குறிப்பிட்டார் என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிறந்துள்ள புத்தாண்டில் இருவருக்கும் இடையில் இடம்பெற்றுள்ள இந்த முதல்சந்திப்பின்போது இருவரும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்க, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

### நவிப்பிள்ளையின்

அதேவேளை, இலங்கையின் நிலைவரங்கள் தொடர் பில் நேரடியாக பேச்சு நடத்துவதற்கு தமக்கு நேரம் வழங்குமாறுகோரி சில மனித உரிமைகள் அமைப்புகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதன்படி, ஜெனிவாவில் நடைபெறும் உபமாநாடுகளின் போது பெரும்பாலும் இந்தச் சந்திப்புகள் இடம்பெறலாம் என ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா. ஆணையாளருடன் சந்திப்புக்கு நேரம் கோரப்பட்டுள்ளது என்பதை ஒரு முக்கிய அமைச்சு நேற்று மாலை உதயனிடம்உறுதிப்படுத்தியது.

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, இலங்கையின் மனித உரிமை நிலவரம் தொடர்பிலும், தமது பயணத்தின் பின்னரான இலங்கையின் செயற்பாடுகள் குறித்தும் அறிக்கை வெளியிடவுள்ளார். கடந்த செப்ரெம்பர் மாத தொடரில் அவர் வாய்மூல அறிக்கையை வெளியிட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

### இந்தியர்

குடும்பத்தினரை ஹைஏஸ் வாகனம் மோதியுள்ளது. இதில் முக்கொம்பன் வீதியைச் சேர்ந்த செந்தூரன் லக்சனாவும் (வயது 22), 27 நாள்களேயான செ. கிங்ஸ்லி என்ற ஆண்குழந்தையும் உயிரிழந்தனர். பெண்ணின் கணவரான செந்தூரன் படுகாயமடைந்த ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

வேகமாக வந்த ஹஏஸ் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவர்களை மோதிவிட்டு அதன் பின் வீதியை விட்டு விலகி அருகில் இருந்து கடல் பகுதிக்குள் பாய்ந்தது. நேற்றுப் பிற்பகல் அதனை மீட்ட பொலிஸார் அதனை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். உயிரிழந்தவர்கள் படு காயமடைந்தவர் ஆகியோரை அவ்வழியே வந்த டிப்பர் வாகனம் ஒன்றில் படையினரும் பொதுமக்களும் ஏற்றி கிளிநொச்சி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதனை அடுத்து டிப்பர் மோதியே அவர்கள் உயிரிழந்தனர் என முதலில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் ரயில் பாதைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய நிறுவனத்தின் பணியாளர்கள் பயணித்த ஹைஏஸ் வாகனமே அவர்களை மோதியது என்று பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். குறித்த இந்திய நிறுவன ஊழியர்களும் உறுதிப்படுத்தினர். (உ-ஐ)

### காணாமற்

வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காணாமற் போனோரைத் தேடி கண்டறியும் குழுவினால் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில், அங்கு கடமையிலிருந்த பொலிஸார் பாராமுகமாக நடந்து கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காணாற்போனோரைத் தேடி கண்டறியும் குழுவின் தலைவரான சுந்தரம் மகேந்திரன் திருகோணமலை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு பதிவு செய்வதற்காக சென்றிருந்தபோது தான் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார். தமிழ் மக்களை ஒன்றிணைத்து சிங்கள மக்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டிப் பிரச்சினைகளை ஏற்படுத்த முற்படுவதாக நீதிமன்றத்தில் தம் மீது வழக்கு தொடரப்படும் என்றும் வேண்டுமானால் நீதிமன்றத்தில் சந்திக்கலாம் என்றும் கூறி பொலிஸ் பொறுப்பதிகாரி தம்மை அச்சுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார். (த)

### விபத்தில்

குமார் யோகநாதன் (வயது -58) என்பவரே உயிரிழந்தவராவார்.


விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விபத்தை அடுத்து மோட்டார் சைக்கிளையும் சம்பவ இடத்தில் போட்டுவிட்டுத் தலைமறைவான இளைஞரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் .(த-4-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாய அமைச்சு நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

## பொன்னாலைத் திடலில் 14 ஆம் திகதி



யாழ்ப்பாணம். ஜன.3
தமிழர் திருநாளான தைப் பொங்கல் தினத்தன்று வடக்கு மாகாண விவசாய அமைச்சு மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண விவசாய அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழாவாகத் தைப்பொங்கல் விழா தொன்றுதொட்டு இடம்பெற்று வருகிறது. உழவுத் தொழிலில் நல்ல விளைச்சலைக் கொடுத்தமைக்காக இயற்கைக்கும், உழைத்த கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாகக் கொண்டாடப்பட்டுவரும் இந்தத் தைத்திருநாளையொட்டித் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் இடம்பெறுவீது வழக்கம்.

எனினும் போர்க் காலத்தில், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்தப் பாரம்பரிய விளையாட்டுக்குப் போதிய முக்கியத்துவம் தரப்படவில்லை.

அந்த வகையில், வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்த மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி மூளாய் பொன்னாலைச் சவாரித் திடலில் தைப்பொங்கல் நாளான 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

காளைகளை எந்தவிதத்திலும் துன்புறுத்தலாகாது என்ற நிபந்தனையுடன் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு இந்த மாதம் 10 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பப் படிவங்களை 295, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விவசாய அமைச்சின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த மாபெரும் மாட்டுவண்டிச் சவாரியில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கான பரிசுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ள உழவர் பெருவிழாவின் போது வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

"-"

**தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும் இடம் பெறுவது வழக்கம்.**

# காலிறுதி ஆட்டங்கள் மாவத்தை மைதானத்தில்



யாழ்ப்பாணம். ஜன.3
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

6 ஆம் திகதி இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

"-"

**இரண்டாவது காலிறுதியாட் டத்தில் அண்ணா விளையாட் டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நாமகள் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.**

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# விளையாட்டு கழகங்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி. ஜன.3
தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச விளையாட்டு அலுவலர் சக்திவேல் அறிவித்துள்ளார். (த-9)

# கிண்ணம் வென்றது வதிரி பொம்மர்ஸ்



யாழ்ப்பாணம். ஜன.3
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை வை. எம்.சி.ஏ.வடமராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் சம்பியனானது.

கடந்த திங்கட்கிழமை கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்



வவுனியா, ஜன.3
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 'சாந்தன், யூட்கசன்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக, மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனிய வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் அம்மன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

*　　*　　*

யாழ்ப்பாணம், ஜன.3
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து கரவை சுடர் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

(த-23)

# மின்னொளியில் இன்று கரப்பந்தாட்டப் போட்டி



யாழ்ப்பாணம், ஜன .3
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருவிழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுழிபுரம் நாவலர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலையொளி விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து அளவெட்டி கணேச விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# அண்ணா, நாமகள் ஆட்டங்களில் அசத்தின



வலி.வடக்கு. ஜன.3
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும், அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் அண்ணா விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கும், தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதிக் கொண்டதில் நாமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று [illegible] யாடத் தகுதி பெற்றது. (த-86)

# வென்றது பூமகள் அணி

பருத்தித்துறை, ஜன.3
நட்புறவை வளர்க்கும் நோக்குடன் அம்பாறை அல்குறைஸ் அணிக்கும் கொற்றாவத்தை பூமகள் அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இரு அணிகளுக்குமான ஆட்டம் பரபரப்பாக நடைபெற்றது. இதனால் முற்பாதி ஆட்டம் இரு அணிக்கும் சவாலாகவே இருந்தது. அப்போது 12 ஆவது நிமிடத்தில் பூமகள் அணிவீரன் தங்கேஸ் தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி கோலாக்க ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. அதன் பின்னர் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியாது போக இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் பூமகள் அணி முன்னிலை வகித்தது.


இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்த போது அல்குறைஸ் அணியின் ஆட்டத்தில் வேகமும் நுட்பமும் தெரிந்தது. இதனை அந்த அணியின் வீரர் சைமன் 9



ஆவது நிமிடத்தில் மிகச் சிறப்பான ஒரு கோலைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினார். இதனால் வியூகத்தை பூமகள் அணியினர் மாற்றினர். இதனால் பூமகள் அணியினரின் பந்துப் பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அல்குறைஸ் அணி திணறியது. அப்போது பூமகள் அணியைச் சேர்ந்த பிரதீஸ் 14 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டுத் தனது அணியை முன்னிலைப்படுத்தினார். அதன் பின்னர் இரு அணிகளாலும் கோல் போடும் வாய்ப்புக்கள் இழக்கப்பட இறுதியில் கொற்றாவத்தை பூமகள் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மைக்கல் சூமாக்கருக்கு 2 ஆவது சத்திர சிகிச்சை



முன்னாள் போமியூலா 1 கார்ப்பந்தய உலகச் சம்பியான மைக்கல் சூமாக்கருக்கு 2 ஆவது சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் அவர் ஆபத்தான நிலையில் இருந்து இதுவரை மீளவில்லை என சூமாக்கருக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள் கூறியுள்ளனர். பிரான்ஸ்சில் பனிச்சறுக்கலில் ஈடுபட்டிருந்த போது விபத்திற்குள்ளான அவர் கவலைக்கிடமான நிலையில் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். தற்போது சூமாக்கரின் உடல்நிலை ஒரளவு தேறியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


சூமாக்கருக்கு சிகிச்சை அளிக்கும் விடயத்தில் சிலவேளை வெற்றி கிட்டலாம் என தெரிவித்துள்ள மருத்துவர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம் எனவும் கூறியுள்ளனர். (த)

# அண்டி முரே தோல்வி



விம்பிள்டன் சம்பியன் அன்டி முரே காயத்தில் இருந்து மீண்ட பின்னரான போட்டியில் தோல்வி கண்டுள்ளார். ஜேர்மனியைச் சேர்ந்த பிலோரியன் மேயருடன் இடம்பெற்ற கட்டார் ஓபன் ரென்னிஸ் போட்டியில் அவர் 3-6, 6-4 மற்றும் 6-2 என்ற கணக்கில் தோல்வி அடைந்தார். சத்திரசிகிச்சை ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் தாம் பங்குபற்றிய முதல் போட்டியில் வெற்றிகண்டிருந்த அண் முரே, இந்தப் போட்டியில் தோல்வி கண்டுள்ளார். (த)

# உலக சாதனை பற்றி நினைக்கவேயில்லை




ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பெறப்பட்ட வேகமான சதம் என்ற சாதனையைப் படைத்த கொரே அன்டர்சன், அப்போட்டியில் துடுப்பெடுத்தாடும்போது அந்தச் சாதனை தனது மனதில் இருந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக நேற்று இடம்பெற்ற போட்டியில் அதிரடியாக ஆடிய நியூசிலாந்தின் கொரே அன்டர்சன், 36 பந்துகளில் சதத்தினைப் பெற்றார். இது 17 வருடங்களாக ஷயிட் அப்ரிடி வைத்திருந்த 37 பந்துகளில் பெறப்பட்ட சதம் மூலமான வேகமான சதம் என்ற சாதனையை உடைத்தெறிந்தது.


35 பந்துகளில் 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த கொரே அன்டர்சன், நிக்கித்தா மில்லர் வீசிய பந்தை 6 ஓட்டங்களுக்கு விளாசியே சதத்தைப் பெற்றிருந்தார்.

எனினும் இது குறித்து கருத்துத் தெரிவித்த கொரே அன்டர்சன், துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது வேகமான சதத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணம் தனக்கு இருக்கவில்லை எனக் குறிப்பிட்டார். சதத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தை விட, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வேகமாக ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற எண்ணமே காணப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

களமிறங்கியதும் தனக்குச் சிந்திக்க நேரம் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், தன்னால் முடிந்த அத்தனை பந்துகளையும் வேகமாக அடித்தாட முயற்சித்ததாகவும், அது தனிப்பட்ட பெறுபேறு என்பதை விட அணிக்கான பெறுபேறாகவே காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்தப் போட்டியில் நியூசிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜெஸி றைடர் 46 பந்துகளில் தனது சதத்தைப் பூர்த்தி செய்ததோடு, அவர் வேகமான 6ஆவது சதத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# மற் பிரயர் தொடர்பில் முரண்பாடான கருத்து



இங்கிலாந்தின் இலக்குக் காப்பாளர் மற் பிரயர் தொடர்பாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கும், இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர் குக்கும் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் உப தலைவரான மற் பிரயர், தொடர்ச்சியாக மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக 3ஆவது ஆஷஸ் போட்டியின் பின்னர் இங்கிலாந்திலிருந்து நீக்கப்பட்டதோடு, 4ஆவது போட்டியில் ஜோனி பெயர்ஸ்ரோ இங்கிலாந்தின் இலக்குக் காப்பாளராகச் செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில், 5ஆவது போட்டிக்கு முன்னதாகக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க், 5ஆவது போட்டிக்காக மற் பிரயர் மீண்டும் இங்கிலாந்து அணிக்கு அழைக்கப்படாவிட்டால் ஆச்சரியப்பட வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டார். சிரேஷ்ட வீரரான மற் பிரயரின் அனுபவம், போரிடும் குணம், அவரது பெறுபேறுகள் ஆகியவை முக்கியமானவை எனக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், இங்கிலாந்து அணியின் முக்கிய வீரராக மற் பிரயர் நீண்ட காலமாகச் செயற்பட்டார் எனக் குறிப்பிட்டார்.

# சென்னை அணியில் முதல் 5 வீரர்கள் யார்?



ஏழாவது பிரிமியர் கிரிக்கட் தொடர் வீரர்களுக்கான ஏலம் எதிர்வரும் பெப்ரவரி 12, 13இல் நடக்கவுள்ளது. இதற்கு முன் ஒவ்வொரு அணி நிர்வாகமும், எந்தெந்த வீரர்களைத் தக்க வைக்கின்றன என்ற விவரத்தை இம்மாதம் 10ஆம் திகதிக்குள் வெளியிட வேண்டும்.

இதன்படி, சென்னை அணியில் தலைவர் டோனி நீடிப்பது உறுதி. 2010, 2011இல் சென்னை அணி சாதிக்க முக்கிய காரணமாக இருந்த அஷ்வின், சகலதுறை வீரர் ரவிந்திர ஜடேஜா, ரெய்னா ஆகியோர் அணியில் இருக்கலாம்.

கடந்த தொடரில் 18 போட்டிகளில் 32 இலக்குகள் சாய்த்த மேற்கிந்திய வீரர் டுவைன் பிராவோவும் தொடரலாம். அதேநேரம் மோகித் சர்மா, ஆல்பி மோர்கல், மைக்கல் ஹசி ஆகியோரின் நிலை என்னவாகும் எனத் தெரியவில்லை.

மும்பை அணியை பொறுத்தவரையில் தலைவர் ரோகித் சர்மா, தினேஷ் கார்த்திக், பொலார்ட், மலிங்கவுடன், சமீபகாலமாக வேகத்தில் மீண்டும் மிரட்டி வரும் மிட்சல் ஜோன்சன் என, ஐந்து பேர் உறுதியாக இருக்கலாம். அனுபவ வீரர் ஹர்பஜன் சிங் ஏலத்தில் மீண்டும் வாங்கப்படலாம்.

**காம்பிர் நீடிப்பு:**

கொல்கத்தா அணிக்கு கடந்த 2011இல் இருந்து தலைவராக உள்ள காம்பிர், 2012இல் கிண்ணத்தை வென்று கொடுத்தார்.

இவருடன், மனோஜ் திவாரி, யூசுப் பதான் மற்றும் பங்களாதேஷின் சாகிப் அல் ஹசன் தக்க வைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. ராஜஸ்தானை பொறுத்தவரையில் ரகானே, வாட்சன், பல்க்னர், டாம்பே நீடிக்க வாய்ப்பு உள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வவுனியாவில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவம் உள்ள முகாமையாளர் தேவை. உங்கள் சுயவிவரக்கோவையை 10.01.2014 இற்கு முன் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

C/O உதயன்
விளம்பர இல : 4482
361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

## Auto CAD

2D-Drawing 3D-Modeling
Personal & Group Classes
Contact No:071 8617972
Jaffna-Vavuniya University of Peratheniya University of Moratuwa

## DCM யாழ். நகர்

A/L 2016
கலை, வர்த்தகம், தொழில்நுட்பப் பிரிவுகள் ஆரம்பம்
ஜனவரி 05 காலை 9 மணி

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2016
வர்த்தகப்பிரிவு ஆரம்பம் 05.01.2014 8 மணி

ACC. திரு.M.அசோக்குமார்
Eco. திரு.ஞா.ஞானச்சந்திரன்
B.Stu. திரு.S.நிருஷ்மா

யாழ் பிரபல தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை. (சி/10912) (7.8)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

சட்டமாணி — சனி, ஞாயிறு, 1.00 மணி
SLEAS — சனி, ஞாயிறு, 9.00 மணி
விசேட ஆராய்ச்சி உதவியாளர் — சனி, 1.00 மணி
Subra, EB — சனி, ஞாயிறு, 9.00 மணி

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
0754164564

## விற்பனைக்கு

227 xxxx இலக்க Lx 20 வானும், 13 -xxxx இலக்க லான்சர் மிற்சுபிசி காரும் விற்பனைக் குண்டு. T.P : 075 0410210

## Computer Courses

கல்வியாண்டு 2014 க்குரிய அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I: 05.01.2014 காலை 10.00மணி
பிரிவு II: 06.01.2014

2013 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே இவ் விஷேட பிரிவுகள் ஆரம்பம். இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளும் அதே வேளை ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயில முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 222 2831

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவில் அருகாமை), யாழ்ப்பாணம்
T.P : 021 222 2831 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

## முதல் முறையாக ஆபரண மலிவு விற்பனைச் சந்தை யாழ்ப்பாணத்தில்

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேர்ல்ஸ், ரோடியம் முலாம் பூசப்பட்ட கொரியன் கல் பதித்த ஆபரணங்கள் முதலியனவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

10 இலட்சத்திற்கும் மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

ரூபா 200/- மற்றும், ரூபா 400/- மட்டுமே.

இடம் : வீரசிங்கம் மண்டபம்
12, கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்

4 நாள்கள் மட்டும் 3, 4, 5, 6ம் திகதி ஜனவரி 2014
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் திங்கள்கிழமை (நேரம் – காலை 10மணி முதல் மாலை 8மணி வரை)

ஒவ்வொன்றும் ரூபாய் 2000 முதல் ரூபாய் 4000 வரையான ஏற்றுமதி விலை கொண்ட ஆபரணங்கள் ரூபாய் 200 முதல் ரூபாய் 400 வரை மட்டும் விற்கப்படவுள்ளன.

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாமையால் சில மட்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கொரியன் ஸ்டோன் ஸ்ட்ஸ ........ Rs.200/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான ப்ரேஸ்லட் ........ Rs.200/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் மோதிரம் ........ Rs.200/- மட்டும்
- வெஸ்டன் ஸ்டைல் தோடு ........ Rs.200/- மட்டும்
- தங்கம் முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் ........ Rs.200/- மட்டும்
- கொரியன் ஸ்டோன் தோடு ........ Rs.200/- மட்டும்
- வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு ........ Rs.200/- மட்டும்
- ஓசன் ப்ளூ டயமண்ட் மோதிரம் ........ Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் ........ Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட வளையல் செட் ........ Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி ........ Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை பின் ........ Rs.400/- மட்டும்
- கிளசிக் பேர்ள் நெக்லஸ் செட் ........ Rs.400/- மட்டும்
- சுஹாகன் மங்கல் சூத்ரா ........ Rs.400/- மட்டும்

விசேட சலுகை : திருமணம் மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரணங்கள் ரூபாய் 500/= முதல் ரூபாய் 16000/= வரையான விலைகளில் விற்கப்படும்.

Entry Free | CONTACT : 0774032706 | Sunday Open

*Presented by : S&G International Agencies (Pvt) Ltd*

## NEC

பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி. யாழ்நகர்.

A/L 2016
கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம் Jan 05 9.00Am
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L DAY CLASS கலைப்பிரிவு
ஆரம்பம் 06.01.2014 - 8 மணி

Tam குழந்தை H/C N.T.தரன் Log வாகீஷன்
Geo சர்மா Hist தாஸ் P/sci ஸ்ரீரங்கநாத்
Chri சுயந்தன் Dram கஜீதரன் (சி/10911) (7.6)

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## IBS கல்வி நிறுவனம்

கண்டுக்குளி, யாழ்ப்பாணம்

புதிய கல்வியாண்டு 2014 ஆரம்பம்
காலம்: 05.01.2014
நேரம்: 09.30 a.m
தரம் 4,5,6 முதல் O/L வரை
A/L கணக்கீடு
A.P. பகீரதன் (சி/10862)(4.6.3)
புதிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2016 கலைப்பிரிவு
ஆரம்பம் 05.01.2014 - 8

| | |
|---|---|
| Eco. | திரு.ஞா.ஞானச்சந்திரன் |
| Tam | திரு.குழந்தை, குகன் |
| H/C | திரு.பத்மராஜா |
| Log | திரு.வாகீஷன் |
| Geo | திரு.சர்மா |
| Hist | திரு.தாஸ் |
| P/sci | திரு.ஸ்ரீரங்கநாத் |
| Chri | திரு.சுயந்தன் |
| Dram | திரு.கஜீதரன் |

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (சி/10910) (7.6.3)

## 23 ஆவது வெற்றி ஆண்டு SUBRA கல்வி நிறுவனம்

சித்தன்கேணி - கிளை- வட்டுக்கோட்டை

A/L 2016 DAY CLASS

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான, தொழில்நுட்பப்பிரிவுகள்
எமது வழமையான ஆசிரியர் குழாமுடன்
ஆரம்பம்: 05.01.2014 ஞாயிறு காலை 9.30

தரம் 1 முதல் O/L வரை
தமிழ் மொழி மூலம் - ஆங்கில மொழி மூலம்
புதிய பிரிவுகள் - பிரிவு II ஆரம்பம்
04.01.2014 சனி மாலை 3.00

தரம் 1 முதல் 5 வரை - விசேட ஆசிரியர் குழாம்
வெற்றித்தேர்வு புலமைச்சுடர் பரீட்சைகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.
புலமைப் பரிசில் மிக நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் கைலைநாதன் - அனுமதிகள் மட்டுப் படுத்தப் பட்டவை.

*மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள் *மாணவர் வரவின்மை உடனுக்குடன் பெற்றோருக்கு அறியத்தரப்படும்.
*கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு - இதுவே SUBRA
ஆசிரியர் விபரம் உள்ளே பக்கம் 5 இனைப் பார்க்கவும்.



CIMA கற்க விருப்பம்! செலவு மிக அதிகமாம்!
கவலையை விடுங்கள் MCS,CIMA UK இணைந்து வழங்கும்
Scholarship Totally free for CIMA-CBA 34000 Rs.
CIMA-UK schol. Totally free for Reg 16800 Rs.
Offer valid untill 5th Jan. Pay only10000Rs for 2nd level
Type CIMAFREE<NAME> & send to 772395895
அடிப்படைத்தகைமைகள் எதுவுமில்லை. எத்துறை சார்ந்தோரும் பயிலலாம்.
மாணவர்களின் உயந்த பெறுபேறுகள்.தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள்.
உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரங்கள். மேலதிக விபரங்களிற்கு
MCS யாழ்பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்

## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 04.01.2014 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. காலை | 11.30-01.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | இடமில்லை |

எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

SAAMSON LANGUAGE SCHOOL
171, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.